பார்வதி

தமிழ் மாத இதழ்



PARVATI, TAMIL MONTHLY. MADRAS 2. FEB. 1950

ஜூபிடரின்
கிருஷ்ண
விஜயம்
எல்லோரும் விரும்பும்
உல்லாசச் சித்திரம்....
இப்பொழுது சென்னை
கெயிட்டி & கிரௌன்
மற்றும் ராஜதானி பூராவும் நடைபெறுகிறது
டைரக்ஷன்: சுந்தர் ராவ் நட்கர்ணி
JUPITER PICTURES CIRCUIT

26
ஜனவரி
1950
இந்திய சரித்திரத்திலே ஒரு பொன்னாள்
சினிமாச் சரித்திரத்திலே ஒரு பொன்னேடு
வாழ்க்கை
இது ஒரு ஏவி எம் புரொடக்ஷன்ஸாரின்
சமூகச் சித்திரம்
தமிழ்நாடு
கேரளம்
மைசூர்
எங்கும்
50
நகரங்களில் அமோக வெற்றியுடன்!
AVM
புரொடக்ஷன்ஸ்
G.H.RAO

புதியகடையில் புதிய ஜவுளிகள்

மைலாப்பூர் சில்க் அவுஸ்

மைசூர் கொள்ளேகால் காஞ்சீவரம் பட்டுப்புடவைகள்

புரொப்ரைட்டர்கள்:

N. நரசிம்ம பந்துலு - ஜி. என். மூர்த்தி

No. 1. லஸ், மைலாப்பூர்... மதராஸ். 4.

பார்வதீ

தமிழ் மாத இதழ்

கஸ 1 } அகவிருள் அகற்றி அருளொளி வீசுக { சித்திரம் 2

விரோதி ஹு மாசி : பிப்ரவரி, 1950

பொருள் அடக்கம்

நமஸ்காரம்		4
எத்திசையும் புகழ் வளர	கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை	5
குடியரசு உதயம்		6
விதி	'மாயாவி'	8
அந்தச் சிரிப்பு	ஸ்வாமிநாத ஆத்ரேயன்	20
பூ	'கனல்'	25
குயில்	ஸி. சுப்பிரமணிய பாரதியார்	28
செவ்வானம்	வை. சுப்ரமண்யன்	32
காதலி கடிதம்	ம. ப. பெரியசாமித் தூரன்	42
அதிசய மீன் (பாலர் கதை)	'வாசவன்'	44
தண்டனை	எஸ். டி. ஸ்ரீநிவாசன்	49
மனைவி	'ஹரிகுப்தன்'	57
கலை அரங்கம் :		
திரை அழகு		64
'பார்வதி பகுத்தறிவு'ப் போட்டி—2		73

ஆசிரியர் - பிரசுரகர்த்தர் :
வே. நமசிவாயம்

துணை ஆசிரியர் :
வை. சுப்ரமண்யன்

படப்பிடிப்பு :
வே. தாண்டவம்
தா. ஜேசுதாஸ்

சித்திரம் :
வே. நமசிவாயம்
க. மோகனகிருஷ்ணன்
த. கெஜானந்தம்

மேக் - அப் :
ரா. பரத்வாஜ்

தயாரிப்பு :
பாரத் ஸ்டுடியோ

'பார்வதி' பாரத் ஸ்டுடியோவின் தயாரிப்பாக, பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதியன்று வெளியாகிறது.

காரியாலயம் :
2/11, மவுண்ட் ரோட், சென்னை-2
போன் : 8172

வருடச் சந்தா :

உள்நாடு	6—0—0
வெளிநாடு	7—8—0

தனிப்பிரதி
உள்நாடு அணு 8
வெளிநாடு அணு 10

'பார்வதி'யில் வெளியாகும் கதைகளில் காணப்பெறும் பெயர்கள் யாவும் கற்பனையே; அவை யாரையும் குறிப்பிடா. படத்தில் தோன்றும் நடிகர்களுக்கும் கதைகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது.

நமஸ்காரம்

நேயர்கள் எல்லோருக்கும் குடியரசு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்' என்ற ஒலி இன்ப வடிவெடுத்து நம்முள் ஆனந்தம் பொங்கச் செய்கிறது. அந்த ஆனந்தத்தை நேயர்களுடன் கலந்துகொண்டு அநுபவிக்கிறோம்.

'பார்வதி' முதல் இதழைப் படித்துவிட்டு ஒரு அன்பர் எழுதியுள்ளார்: '...சென்ற ஒன்றரை வருட காலமாகப் 'பார்வதி'க்காகக் காத்துக்கொண்டிருக்க இயன்றது. ஆனால், அடுத்த இதழைக் காண என் மனம் அவசரப்படுகிறது! இதன் காரணம் வேறு ஒன்றுமல்ல; என் ஆவலைத் தூண்டிவிடும் வண்ணம் ஒவ்வொரு இதழிலும் தாங்கள் அடுத்த இதழின் உருவை ஓரளவு கண் முன்னே கொணர்ந்து விடுகிறீர்கள். 'பார்வதி'யில் தேர்ந்த எழுத்தாளர்களின் சிறந்த விஷயங்களே நிரம்பியிருக்கும் என்பதைக் கண்டு கொண்டேன்.'

இவ்வன்பர் கூறுவது முற்றிலும் சரியே. புதுமுறைச் சாதனைகளுக்காக நாங்கள் ஒவ்வொரு நிமிஷத்திலும் தீவிரமாக ஆலோசனைகள் செய்துகொண்டிருக்கிறோம். ஆசிரியர்களின் கருத்துக்களை ஆகர்ஷித்து அவற்றைப் புகைப்படங்கள்மூலம் சித்திரித்துக் காட்டுதல் சாத்தியம் என்பதை அநுமானத்தில் வெகு நாட்களாகக் கொண்டிருந்தோமெனினும் செயல்மூலம் ஆற்ற முடியும் என்பது முதல் இதழ் வெளியான பின்பு தெரிந்துவிட்டது. எனவே, வாசகர்கள் எதிர்பார்ப்பதையெல்லாம் நாம் அளிக்கக்கூடும் என்ற தைரியம் நமக்குப் பிறந்திருக்கிறது.

முதல் இதழைப் பாராட்டிப் பத்திரிகாசிரியர்களும் பிரமுகர்களும், எழுத்தாளர்களும், வாசகர்களும், ஏஜெண்டுகளும் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர். அவர்கள்தம் கடிதங்களில் பத்திரிகையின் பல்வேறு பகுதிகளும் பாராட்டப் பெற்றுள்ளன. கதைகளைக் குறித்தும் கட்டுரைகளைக் குறித்தும் பலர் எழுதியிருக்கின்றனர். 'பத்திரிகைக் கேற்ற அழகான அச்சு அமைந்திருக்கிறது; படிப்பதற்கு அநுகூலமான அச்சில் விஷயங்களை அமைத்துத் தந்திருப்பதிலிருந்து எங்கள் நினைவு உங்களுக்கு எப்போதும் இருக்கிறாற்போலிருக்கிறது!' என்று ஒரு வாசகர் யூகித் தறிந்து எழுதியுள்ளார். அவற்றையெல்லாம் அடுத்த இதழில் வெளியிடுவதன் மூலம் நமது மகிழ்ச்சியை நேயர்களுடன் பகிர்ந்து கொள்ள முடிவு செய்துள்ளோம். 'பார்வதி'யை இளம் நேயர்கள் பெரியவர்களுடன் சேர்ந்து போட்டி போட்டுக்கொண்டு வரவேற்கின்றனர் என்பதற்குக் கீழே உள்ள ஒரு புகைப் படமே சான்று. ஒரு இல்லத்தில் 'பார்வதி' முதல் இதழை வாங்கிவந்து அதைப் பார்த்துச் சில சிறுவர்கள் ரஸித்துக்கொண்டிருந்த காட்சியே மற்றொருவருக்குக் கண்கொள்ளாக் காட்சியாகிவிட்டது! உடனே தன் கையிலிருந்த காமிராவினால் அந்தக் காட்சியைப் படம் பிடித்து நமக்கு அனுப்பித் தன் ஆத்ம திருப்தியை ஈடு செய்துகொண்டிருக்கிறார்!

'பார்வதி'யின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு, நாம் சென்ற இதழில் கோரியிருந்தபடியே பல அன்பர்கள் பலவகையான முன்னேற்ற ஆலோசனைகளைத் தெரிவித்திருக்கின்றனர், அவர்களுக்கெல்லாம் எங்கள் நன்றி. அவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து முடிந்தவரையில் அவைகளை அங்கீகரிக்க எண்ணியுள்ளோம்.

நமஸ்காரம்.

—ஆசிரியர்



எத்திசையும் புகழ் வளர

எத்திசையும் புகழ்வளர விரோதி ஆண்டில்
  எழுந்திடுதை பதின்மூன்றில் குருவா ரத்தில்
புத்தியினால் அநுபவத்தால் புலமை தன்னால்
  போற்றரிய சேவையினால் புகழ்பெற் றோர்கள்
சித்தமகிழ் புதுடெல்லி நகரில் கூடி
  தேர்ந்தகுடி யரசுலகில் சிறந்து வாழப்
பத்தருக்குத் துணைபுரியும் பரந்தா மாநின்
  பாதமலர் போற்றிநிதம் பணிகின் றோமே.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

குடியரசு



பாரத தேசம் குடியரசு உரிமை பெற்றுத் தன்புதல்வர்களான முப்பது கோடி மக்களும் மன்னர்களாய்த் திகழ்வதைக் கண்டு பெருமைகொண்டு நிற்கிறது. குடியரசுத் திருநாளை நாடெங்கும் மக்கள் குதூகலமாய்க் கொண்டாடினார்கள். கொண்டாட்டத்தினிடையே தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள் சூட்சும உருக் கொண்டு தோன்றிக் குடியரசுக் குழந்தையையும் வாழ்த்தி, தமது மக்களின் பேரானந்தத்தையும் கண்டு களிப்பெய்தினார். அகக் கண்கள் முன் கண்ட பிதாவின் பின்னே, பாரத தேசத்தின் விடுதலைக்கு அடிகோலிச் சென்ற அருந்தலைவர்கள் பலரும்நிற்கக் கண்டோம் நாம். நமது உள்ளத்தில் தேசத்துக்காகப் பாடுபட்ட நூற்றுக் கணக்கான — ஆயிரக் கணக்கான — தலைவர்கள் தொண்டர்கள் முதலியவர்களைப்பற்றிய நினைவு எழுந்தது. தமக்கென வாழாது, பூரண சுதந்திரம் ஒன்றையே வருங்காலப் பிரஜைகளின் நிமித்தம் கோரி நின்ற அவர்களின் முயற்சி இன்று நமக்குப் பலன் அளித்தது; அரும்பாடுபட்டுத் தலைவர்கள் வாங்கி அளித்துள்ள குடியரசு நம் கையில் இருக்கிறது. அதாவது, நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது; பொறுப்பை உணர்ந்து பெருவாழ்வு வாழ்வது நமது லட்சியமாயிருத்தல் வேண்டும்.

* * *

குடியரசாட்சியில் ஜனாதிபதிப் பதவி தான் ஜீவாதாரமானது என்பதை விளக்கிச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இதுகாறும் குடியரசுத் திட்டத்தை வெற்றிகரமாக வகுத்த நமது அரசியல் நிர்ணய சபை, தலைவர் பாபு ராஜேந்திரப் பிரஸாதை இந்தியக் குடியரசின் முதல் தலைவராகப் பிரேரேபித்துத் தேர்ந்தெடுத்துள்ளது. தேச மக்கள் அனைவரும் அவர் தலைமையைப் பூரணத் திருப்தியோடும் உற்சாகத்தோடும் வரவேற்றுள்ளனர். குடியரசின் ஜனாதிபதிப் பதவியைப் பற்றி எண்ணிய ஒவ்வொருவரும் அப்பதவிக்குரிய தலைவரைப் பற்றியும் தம்முள் எண்ணத்தான் செய்திருக்க வேண்டும். அரசியல் தீர்க்கதரிசி ராஜாஜியையும் ராஜேந்திரப் பிரஸாதையும் சேர்த்து எண்ணினர்; அரசியல் பிரச்னைகளைத் தம் நுட்பமான அறிவினால் ஆராய்ந்து முடிவுகட்டும் ஆற்றல் வாய்ந்த அறிஞர் ராஜாஜியையும், அரசியல் நிர்ணய சபையின் அஸ்திவாரம்போன்று விளங்கிய-தந்நலம் கருதாத-தியாகி ராஜேந்திரப் பிரஸாதையும் தனித்தனியே தம் தலைவராக மதித்தனர் ஜனங்கள்; ஆயினும் ராஜாஜி ஓய்வு பெறும் நிமித்தம் தாம் பதவியிலிருந்து விலகிக் கொள்ளத் தீர்மானித்து, ராஜேந்திரரைப் பதவி வகிக்கும்படிக் கேட்டுக் கொண்டார். தேச மக்கள் அனைவரின் ஒருமித்த ஆனந்தக் கோஷத்தினிடையே ராஜேந்திரர் இந்தியக் குடியரசின் முதல் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார்.

* * *

இன்று இந்தியா குடியரசு ஏற்றதானது உலகத்தின் கவனத்தையே

உதயம்



கவர்ந்துள்ளது! ஏனெனில் இன்று உருவாகியிருக்கும் நமது குடியரசு உலகப் போக்கிடையே ஒரு புது சகாப்தம் உண்டுபண்ணுவதாயிருக்கிறது; அஹிம்சைத் தத்துவத்தின் அடிப்படையுடன்கூட இந்திய சரித்திரத்தின் பழைய ஆட்சிமுறைத் தத்துவங்களையும் கொண்டதாயிருக்கிறது அது. இதுகாறும் ஏகாதிபத்தியத்தை அகற்றும் முயற்சியிலேயே முன்னேறிக் கொண்டு, ஒருபுறம் சுதந்திரத்தையும் அமைத்துக் கொள்ள முயன்று வந்தோம்; பூரண சுதந்திர உரிமை ஒவ்வொரு தனி மனிதனின் முன்பும் இன்று காணப்படுகிறது. தன் வாழ்வுக்கு ஏற்ற முறையில் அதைப் பயன்படுத்திக்கொள்ளும் பொறுப்புத்தான் அது; அதைத்தான் மேலே குறிப்பிட்டோம்.

தனி மனிதனின் பொறுப்பையும் கடமையையும் நமது தீர்க்கதரிசி ராஜாஜி வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

'நாட்டின் பல்வகைப் பஞ்சத்தையும் போக்கவும், முன் நிற்கும் பல பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளவும் ஒவ்வொரு தனி மனிதனும் பாடுபடவேண்டும்; உழைக்கவேண்டும்' என்று கூறியுள்ளார். அவர் அறிவுரைகளைக் கடைப்பிடித்துக் கடைத்தேறுவோமாக!

அரசியலை ஒழுங்குற நிர்வகித்துப் பிரஜைகளை ஆளுவதற்கு நமது சர்க்காருக்குப் பரிபூரண அதிகாரம் இருக்கிறது; அதேபோல சர்க்காரை அமைக்கும் மகத்துவம் வாய்ந்த பொறுப்பும் தேச மக்களின் கையிலேதான் இருக்கிறது.

'சுதந்திரம் கிடைத்து மூன்றாண்டுகளாகின்றனவே; உணவுப் பஞ்சம் தீரவில்லையே! துணிப் பஞ்சம் தீரவில்லையே! சர்க்கார் இதனைக் கவனிக்கவில்லையே!' என்று சர்க்காரை நிந்திப்பது மக்களிடையே சகஜ நிலையாக இருந்துவந்திருக்கிறது. இந்த நிலைக்கு இனி இடம்கொடுத்தால் அதற்கு அவர்களே காரணகர்த்தர்களாவர். சுபிட்சம் நிறைந்த தம் வாழ்வை அரசியல்மூலம் வகுத்துக் கொடுக்கும் ஆற்றல் நிறைந்த தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை அவர்கள் கையில் இருக்கின்றது. அடுத்தபடியாகப் பொது வாழ்விற்குச் சீரிய வழிகாட்டிச் சென்றுள்ளார் அண்ணல் காந்தியடிகள். அன்பு, சத்தியம் ஆகிய அறநெறிகளைத் தம் வாழ்வில் அமைத்து உதாரணம் காட்டிய அந்த ஆகர்ச புருஷரின் நினைவை எப்போதும் மேற்கொள்ளல் வேண்டும். அவர் காட்டியுள்ள சத்திய நெறியைக் கடைப்பிடிப்பதென்ற லட்சியத்துடன் இருந்தால் நாம் கோரும் அந்தச் சுபிட்ச வாழ்வு நமக்குச் சித்திக்கும். நாம் குடியரசு பெற்றதற்கடையாளமாக அவருக்குச் செலுத்தவேண்டிய நன்றியெல்லாம் அதுதான்!

வாழ்க காந்தீயம்!

வாழ்க குடியரசு!

சம்வாதம் என்ற நிலை சிவ — சக்தியிடையே ருசித் தன்மை பெற்றதாய் முதலில் அமைந்து, இறுதியில் சபதம் என்ற தீவிரமான கட்டத்தில் அவர்களைக் கொண்டு சேர்க்கும் வேகமும் பெற்றுவிடுகிறது. ஆக்கல் - அழித்தல் பற்றிய அவர்களின் சர்ச்சையின் பயனாகப் பராசக்தி விதியின் கதியிலே இயல்பாகச் செல்கிறாள்.

பார்வதியின் முகத்தில் அனல் பறந்தது. எதிரே மலர்ச்சியுடன் வீற்றிருந்த கைலாசநாதரின் நெற்றிக் கண் மாத்திரம் தனக்கு இருந்திருந்தால், பதி யென்றும் பாராது பஸ்மீகரமாக்கி யிருப்பாள் போலிருந்தது, அவள் அவரைப் பார்த்த பார்வை.

ஆம்; எத்தகைய அவமானம் அது? அவளுக்கு மாத்திரமா? பெண் இனத்துக்கே பேரவமானமான செய்கையை அல்லவா இவர் செய்து வந்திருக்கிறார்? இனியும் செய்யப் போகிறார்? அவர் உடலில் பாதியாக—அவரைப் போலவே சம சக்தி யுடையவளாக—இருந்தும், பதியின் இந்த ஓரவஞ்சகச் செயலை உணராமல்—உணர்ந்து, அதை எதிர்த்து நின்று தடை யுறுத்தாமல்—அல்லவா இருந்துவிட்டாள்?

அர்த்தநாரியின் அணைப்பிலிருந்து ஆத்திரத்துடன் அகன்று அனல் கக்க அவரைப் பார்த்த அன்னையை நோக்கி ஆண்டவன் அமைதியுடன் சொல்லலானார்: ‘‘ஹேமாவதி, கடவுளாகட்டும் மனிதராகட்டும்; ஒவ்வொருவருக்கும் வாழ்வில் ஒவ்வொரு கடமை சுமத்தப்பட் டிருக்கிறது. அதை அவர்கள் எப்பாடு பட்டாகிலும் நிறைவேற்றியே ஆகவேண்டும். ஆகவே, அப் பணிக்கு எவை அல்லது யார் உபகரணங்களாக அமைகிறார்களோ, அவர்களை அல்லது அவற்றைக் கொண்டு காரியசித்தி பெறுகிறார்கள். அவ்வாறே அழிப்பு வேலையைக் கடமையாகக் கொண்டிருக்கும் நான், எவர் மூலம் அதை முடித்துக்கொள்ள வேண்டுமென்று விதிக்கப்பட் டிருக்கிறதோ, அவர் மூலம் அதை முடித்துக் கொள்கிறேன். சற்று முன்

இங்கு வந்து சென்ற அரசனின் வாழ்வு இன்று முடிவுற வேண்டிய நாள். அதை அகற்ற அவன் மனைவியே கருவியாக வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது. அதன்படிக் காரியங்கள் நடந்தன. இதற்கு நீ இவ்வளவு கோபம் அடைவானேன்?''

மஹேஸ்வரியின் ஆத்திரம், பரமனின் இந்த விளக்கத்தினால் சாந்தி அடைந்து விடவில்லை. சினம் பொங்கி வழிந்த கண்களில், எரிமலையிலிருந்து பீரிடும் நெருப்புக் குழம்பு போல, கண்ணீர் பொங்கி வழிய அவள் உரைத்தாள்: ''அநியாயம் உங்கள் செய்கை! தெய்வம் என்ற மமதையுடனும், அழிக்கும் ஆற்றல் இருக்கும் ஆணவத்திலும், உங்கள் இனமாகிய ஆண்களை விட்டுப் பெண்களையே உங்கள் கொடுஞ் செயலுக்குப் பயன்படுத்தி வருகிறீர்கள். இந்த அட்டூழியத்தை ஸ்திரீயாகிய நான் இனிப் பொறுக்க முடியாது. பொறுத்து, அதற்கு உடந்தையாக உங்கள் உடலோடு ஒட்டி வாழவும் முடியாது.''

......அர்த்தநாரியின் அணைப்பிலிருந்து அகன்று......

அன்னையின் இதழிலிருந்து நெருப்புப் பொறிகளென வார்த்தைகள் தெறித்து விழுந்தன. அவற்றின் அனல் வேகம் தாங்கமாட்டாது, அரவாபரணனின் சிரசினும் உடம்பிலும் அணி செய்திருந்த நாகங்கள் நெளிந்து சுருண்டன.

''இது எதடா விபரீதமாகப் போய்விட்டது!'' என்று கலங்கினார் கைலாசபதி. தேவியின் அர்த்தமற்ற கோபத்தை ஆற்றும் முயற்சியில் மீண்டும் இறங்கியவராய், அவர் தொடர்ந்தார்: ''தேவி, மனிதரின் சாவுக்குப் பெண்களை மாத்திரமே பயன்படுத்தி வருகிறேனென்று நீ கூறுவது அபாண்டம். நோய், விபத்து, முதுமை முதலிய கருவிகள் பயன்படாத தலையெழுத்தையுடைய மனிதரை அழிக்க மாத்திரமே பெண் பயன்படுத்தப் படுகிறாள். அதுவும் பெண்ணிடம் இயற்கையாக அமைந்துவிட்டிருக்கும் மோனச் சக்தியில் மனிதர் எளிதில் கட்டுண்டு விடுவதாலே அவர்கள் வழி அச் சாவுகள் நிகழ வேண்டுமென்று விதிக்கப் படுகிறது. மிகவும் அபூர்வமான நிகழ்ச்சிகளே அவை. எதோ ஒரு அசந்தர்ப்பத்தினால், இந்த அரசனுக்கும், அவன் மனைவியின் வயிற்றில் கருவாகி யிருக்கும் சிசுவுக்கும் பெண்களாலே மரணம் நேரிட வேண்டுமென்று ஏற்படுத்தப் பட்டு விட்டது. அன்றி, பெண்களைக் கொண்டே எங்கள் அழிப்பு வேலை நடைபெற வேண்டுமென்று ஏற்படுத்தப்படவில்லை. எனவே, வீண்கோபம் கொள்ளாதே, மஹேஸ்வரி. பெண் கோபம் பொல்லாதது; சாந்திகொள்.''

பரமன் இவ்வாறு கூறி, பத்தினியின் ஊடலைத் தணிக்கும்பொருட்டு அவளை நெருங்கி, அணைத்துக்கொள்ளக் கைகளை நீட்டினார். ஆனால் தேவி அக் கைகளை வேகத்துடன் உதறிவிட்டு, ''முடியாது; நீங்கள் சொல்லும் பொய்ச் சமாதானங்களை நான் ஏற்க முடியாது! இனி ஒரு போதும் பெண்களைத் தங்கள் அழிப்பு வேலைக்குப் பயன்படுத்துவதில்லை யென்று வாக்குறுதி அளித்தாலன்றி, உங்கள் இடப்புறம் காலியாகவே இருக்கப் போகிறது!'' என்று ஆவேசத்துடன் உரைத்தாள்.

அன்னையின் அறியாமை ஆதி சிவத்துக்கு அதிக மன வருத்தத்தை அளித்தது. அவர் சொன்னார்: ''அது நடவாத பணி, பார்வதி! கடமையைச் செய்யவில்லையானால், நான் கடவுளின் பதவியில் இருக்கத் தகுந்தவனில்லை. மேலும்......''

தேவி ரௌத்திராகாரத்துடன் குறுக்கிட்டாள்: ''நடவாதா? நடக்கச் செய்து விட்டால்?''

''மீண்டும் சொல்கிறேன், ஹேமாவதி! உனக்கு அதற்கு ஆற்றல் போதாது.''

''போதாதா? நான் சக்தி யென்பதையும், தங்களுக்கு இணையான தெய்வ வல்லமை படைத்தவளென்பதையும் மறந்து விட்டீர்களா? இந்த அரசகுமாரன் விஷயத்திலே என் சக்தியை நிரூபித்துவிடத்தான் போகிறேன்.''

பரமன் ஏளனமாக நகைத்துவிட்டுப் பகன்றார்: "சக்தியல்ல; சிவமல்ல; இரண்டும் ஒன்று சேர்ந்து முயன்றாலும்கூட, ஒரு தடவை விதித்து விட்ட விதியை மாற்றமுடியாது. மஹேச்வரி, வீணில் என் விஷப் பரீட்சை செய்ய ஆசை கொள்கிறாய்?"

"இல்லை; இரண்டின் பலா பலன்களும் வெளியாகித்தானாக வேண்டும். பெண் இனத்துக்கு நீங்கள் இழைத்துவரும் இந்த அநீதத்தை எதிர்த்துப் போரிடும் பணியில் என் சக்தி சிதறிச் சில்லுகளாகி விட்டாலும் பொருட்படுத்த மாட்டேன்; இந்த ஒர வஞ்சகச் செயலுக்கு முற்றுப் புள்ளி வைத்தே தீருவேன்!"

ஹிமாசல நாதரும் பொறுமையை இழந்து விட்டார். "அப்படியா? பரீட்சை செய்து பார்க்கத்தான் போகிறாயா? பார்; சிவத்துடன் இணைந்த சக்தி அதை எதிர்த்து நிற்கப் போகிறதா? நிற்கட்டும்; நீயே அந்த அரச குமாரனை அழிக்கும் அணங்காக அவதரித்து நேரிலே பரீட்சை செய்!"

ருத்திர சொரூபமாக நின்ற மஹேச்வரி, கணவரின் இச் சாபத்தை ஏற்றுக்கொண்டு சொன்னாள்: "அவ்வாறே நீங்களும் அந்த மாதங்கினி அரசியின் வயிற்றுக் கருவில் புகுந்து விதியை வெல்லப்போகும் அரச குமாரனாக அவதரியுங்கள்! நேரிலே சக்தியின் வல்லமையைக் காணுங்கள்!"

* * *

வேடிக்கைப் பேச்சில் ஆரம்பித்த தேவமாதா - பிதாக்களின் சம்பாஷணை, அன்று வினையாகத் திரும்பி, இந்தச் சிவசக்தி மோதலுக்குக் காரணமாகி விட்டது.

கயிலையில், காலையில் துயில் நீங்கி எழுந்த கடவுளர் முன்னர், யமதர்மராஜன் பூலோக வாசியான சைந்திரிகன் என்ற அரசனின் ஆவியைக் கொண்டுவந்து நிறுத்தினான்.

"இவன்தானா, மனைவியால் புலிவாயில் தள்ளப்பட்டு விதியை முடித்துக்கொண்ட அரசன்?" என்று வினவினார் மஹேச்வரர்.

"ஆம், பிரபோ" என்றான் அந்தகன்.

"சரி; அழைத்துச் சென்று முறைப்படி அவன் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ற ஸ்தானத்தை அளியுங்கள்."

தென்திசைக்குரியான் அந்த அரசனின் ஆவியைத் தனது பாசக் கயிற்றால் சுண்டி இழுத்து, தெற்கு நோக்கி இட்டுச் சென்றான்.

பரமனின் இடப் பாகத்தில் அமர்ந்து இதைப் பார்த்திருந்த சக்திதேவி தர்மராஜன் மறைந்ததும், தனது நாதனை நோக்கி "தேவா, நீங்கள் கொஞ்சமும் இரக்கமற்றவர்கள். வாலிபப் பிராயத்தின் ஒரு பகுதியைக்கூட முற்றிலும் நுகர்ந்திராத இந்த அரசனை எப்படித்தான் மன மொப்பி உயிர் பிரித்து வரப் பணித்தீர்களோ?" என்றாள். ஜகத்ரக்ஷகியின் முகத்தில் அப்போது பரிதாப உணர்ச்சி மிதந்தது.

"தலை யெழுத்து முடிந்தவர்கள் உலகிலிருந்து புறப்படவேண்டியவர்கள் தாமே, தேவி?" என்றார் கைலாசநாதர்.

"ஆமாம், தலையெழுத்து! பாவம்; அவன் இளம் மனைவியின் உள்ளம் எத்தனை வேதனை அடைந்து துடித்துக்கொண் டிருக்கும்?"

"துடிப்பானேன், ஹேமாவதி? அவள்தானே அவன் சாவுக்குக் காரணமாக நின்றாள்? கர்ப்பிணியாக இருந்தும், அவனுடன் வேட்டைக்கு வருவேனென்று நேற்றுப் பிடிவாதம் செய்து, கானகத்துக்கு வந்தாள். மாலையுடன் வேட்டை முடிந்து விட்டது. பிறகு நாட்டுக்குத் திரும்பவேண்டியது தானே! அக் கடுங்கானின் அழகில் ஈடுபட்டு இரவையும் அங்குக் கழிக்க வேண்டுமென்று மன்றாடினாள். அடர்ந்து வளர்ந்த விருட்சம் ஒன்றின் மீது பரண் அமைத்து, அரசனும் அரசியும் படுத்து உறங்கினர்........

"உறக்கத்தில் ராணி கனவு ஒன்று கண்டாள், பயங்கரமான கரடி ஒன்று வாயைப் பிளந்து கொண்டு தன்னைப் புசிக்கப் பாய்ந்து வருவது போன்று. அதேசமயம் ஆழ்ந்த தூக்கத்திலிருந்த அரசனின் கைகள் புரண்டு அவள்மீது விழுந்தன. கரடியே தன்மீது பாய்ந்துவிட்டதென்ற பீதியுடன் அருகில் படுத்திருந்த கணவனை அத் துஷ்டமிருகமாகப் பாவித்து, கீழே உருட்டித் தள்ளிவிட்டாள். மனித வாடையை மோப்பம் பிடித்து, நெடுநேரமாக மரத்தடியில் காத்து நின்ற புலி ஒன்றிற்கு அரசன் அக்கணமே இரை யானான்."

"சே! சே! என்ன கொரேம்!"

"கொரேமென்ன, மலையவதி? இந்த அரசன் மாத்திரமா? இவன் உதிரத்தில் தோன்றி, இப்பொழுது அரசியின் வயிற்றில் கருவாகத் தங்கியிருக்கும் ஆண்பிண்டங்கூட, வளர்ந்து வாலிபனானபிறகு ஒரு பெண்ணாலே அழிக்கப்பட வேண்டு மென்று விதிக்கப்பட் டிருக்கிறதே; அதற்கு என்ன சொல்கிறாய்?"

"என்ன? அந்த அரசனின் குமாரனுக்குக் கூடப் பெண்ணாலே சாவு என்று விதித்துவிட்டீர்

களா? அப்படியானல் ஆண்களை அழிக்கப் பயன் படுத்துவதற்காகவே பெண் இனத்தை உலகில் படைத்து வருகிறீர்களா, என்ன?''

"உன் யூகம் அநேகமாகச் சரியானதுதான் பார்வதி!''

"என்ன? என்ன சொன்னீர்கள்?''—தேவியின் முகம் கறுத்தது.

"ஆம்; ராவணனை அழிக்கச் சீதை அவதரித்தாள்; பெற்ற தந்தை தக்ஷனைத் தொலைக்க நீ தோன்றினாய்; தெய்வீக அம்சம் பொருந்திய நீங்களே இவ்வாறானல், கேவலம் மானிடப் பெண்களை எப்படி நாங்கள் விதிவிலக்காக்க முடியும்?''

''இல்லை, இல்லை; இவை அனைத்தும் உங்கள் சூழ்ச்சி!''

''என் சூழ்ச்சி ஒன்றுமல்ல, தேவி; பிறப்பு எனும் தத்துவத்தின் நியதி. பெண்ணுக்கு எப்படி ஆக்கும் ஆற்றல் அளிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வாறே அழிக்கும் சக்தியும் அளிக்கப்பட் டிருக்கிறது.''

''ஆம்; அதைத்தான் நானும் சொல்லுகிறேன். ஆக்கும் ஆற்றலை அவளுக்கு அளித்துவிட்டு, அதனல் ஏற்படும் கீர்த்தியைப் போக்க அழிக்கவும் அவளை ஆளாக்கி அவமானப் படுத்துவது ஆண்களாகிய உங்களின் சூழ்ச்சியல்லாது வேறு யாது?''

''மீண்டும் 'சூழ்ச்சி சூழ்ச்சி' என்று பழிக்காதே, பார்வதி! ஆதிகாலந்தொட்டு—பெண்ணையும் ஆணையும் உலகுக்காகப் பிரமன் ஆக்கத் தொடங்கிய அந் நாளிலிருந்து—பெண்ணை, உலகை ஆக்கவும், ஊக்கவும், அழிக்கவும் வலிமையுள்ளவளாகப் படைத்துவருகிறான். இல்லாவிடில், முக்காலமும் உணர்ந்த உனக்கு, உன் தந்தையின் அழிவு உன்னாலே நிகழும் என்பது தெரிந்திருந்தும், என் உபதேசங்களை உதறிவிட்டுப் பிடிவாதமாகத் தக்ஷனின் யாகத்துக்குப் போக வேண்டுமென்று தோன்றுவானேன்? அது போலவேதான், விதியினல் கட்டுப்படுத்தப்பட்ட பெண்களும் பிடிவாதமாக அல்லது பிறர் கூற்றை மதியாது மனம் போனபடி நடந்து கொள்கிறார்கள். ஆகவே இதில் என் சூழ்ச்சி என்று கூறுவதற்கு என்ன இருக்கிறது?''

பரமன் இவ்வாறு கூறிவந்தபோதுதான் மஹேச்வரிக்கு அடங்காச் சினம் எழுந்தது. தனது குற்றத்தைக் குத்திக்காட்டியதோடு, பெண் இனமே தமது அழிதொழிலுக்கு அஸ்திவாரமாக இருப்பதென்று வேறு அவர் ஸ்தாபித்தபொழுது, தேவியை அவமானமும் கோபமும் ஒருங்கே சூழ்ந்துவிட்டன. அதனல் எழுந்த கொந்தளிப்பு வளர்ந்து, இறுதியில் அவளைச் சாம்பமூர்த்தியின் கோபத்துக்கும் சாபத்துக்கும் இலக்காக்கி, அவரையும் சபிக்கச் செய்தது.

அச் சாபங்களின் பயனாய், கைலாசவாசிகளிருவரும் பூவுலகில் மானிடராக ஜனித்தனர்.

* * *

மாளவத்துச் சிம்மாசனத்துக்கு வாரிசை எதிர்நோக்கிக் காத்திருந்தனர், அந்நாட்டு மக்கள். ராணி மாதங்கினி தேவி தனது தவறால் கணவனைப் பறிகொடுத்தது முதல் உலகில் எதிலுமே பற்றில்லாத ஒரு நிலையி லிருந்தாள். அவளுடம்பு மிகவும் துர்ப்பல மடைந்திருந்தது. ராணி 'நல்லதனமாகப் பெற்றுப் பிழைக்க' வேண்டி அந்நாட்டு மக்கள் அவ்வூர் சிவன் கோவிலில் நாள் தவறாது அர்ச்சனை அபிஷேகம் நடத்தி வந்தனர். தெய்வக் களை யோடிய ஓர் ஆண் மகவை ராணி இனிதே பெற்றெடுத்த போது, அவர்கள் தங்களின் இடைவிடாப் பிரார்த்தனையின் நிமித்தமே அரசிக்கு இப் பேறு கிட்டிற்றென்று அகமகிழ்ந்தனர்.

ஆனல் மாதங்கினிக்கோ, மைந்தனின் தோற்றம் எவ்வித மகிழ்ச்சியையும் அளிக்க



வில்லை. கணவனை மரணத்துக்குள்ளாக்கிவிட்ட பிறகு அவள் உள்ளத்தில், பெண்கள் ஆண்களை அழிக்கும் யம சொரூபமென்ற ஒரு பயங்கரத் தீர்மானம் வேரூன்றிவிட்டது. இன்று தேஜோ மயமான ரூபத்துடன் நாட்டுக்கு அதிபனாகத் தோன்றியிருக்கும் தன் மகனும் யாராவது ஒரு பெண்ணால் அழிக்கப்பட்டுவிடுவானோ என்ற காரணமற்ற அச்சம் அவளை வாட்டி எடுத்தது. ஆகவே, அவள் அரசகுமாரனை, பெண்களை வெறுக்கும் ஒரு அற்புதப் பிறவியாக வளர்த்து விட வேண்டுமென்று நிச்சயித்தாள்.

இளவரசன் விபாங்கனுக்கு அப்போது ஐந்து வயது நடந்துகொண் டிருந்தது. அப் பிராயத்தில் அவனை, உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு அரு கிலிருந்த கானகத்தில் தவ மியற்றிக்கொண் டிருந்த மாளவத்தின் முந்தைய ராஜகுரு கிரு பாகரரிடம் வளர்க்கவிட்டுத் திரும்பினாள். கிரு பாகரரிடம் தனது உள்ளத் தோற்றத்தை எடுத் துரைத்து, எப்படியாவது இளவரசனைப் பெண் களை வெறுப்பவனாக மாற்றிவிடவேண்டுமென்றும் வேண்டிக் கொண்டாள்.

முக்காலமும் உணர்ந்த கிருபாகரருக்கு அரச குமாரனாக அவதரித்திருப்பது யாரென்பது தெரி யாததல்ல; அரசியின் மனப் பயப்படியே அவ னுக்கு முடிவு ஏற்பட்டுத்தானாகவேண்டும் என்ப தும் அவர் அறிந்ததே! எனினும், எவ்வித அபூர்வ வளர்ப்பும் விதியை மாற்றமுடியாது என்பதை உணர்ந்தவராதலால், இப்போதைக்கு ஓர் ஆறுதலாக இருக்கட்டுமென்று அவள் விருப் பப்படியே விபாங்கனை வளர்த்து வரலானார்.

* * *

இத்தகைய சூழ்நிலையை மாளவத்தில் ஏற் படுத்தியது சக்தி தேவியே. தனது வல்லமையை நிலைநாட்டத் தக்க தொரு அரணை அமைத்துக் கொண்டதாகவே இதைச் செய்தபோது அவள் கருதி யிருந்தாள். ஆயினும் கணவனிடம் பெற்ற சாபத்தினால், அவள் மானிடப் பிறவி எடுப்பத னின்றும் அகன்று நின்றுவிட முடியவில்லை. அதே மாளவத்து மந்திரி ரதிவர்மரின் குமாரி யாகச் சில ஆண்டுகளுக்குப் பின்னர் அவள் அவ தரித்தாள்.

* * *

காலம் ஓடிற்று.

பெண்களைக் கண்ணாலும் காண விரும்பாத அதிசய சுபாவத்துடன் இளவரசன் விபாங்கன் வளர்ந்துவிட்டான். பெண்டிரைக் கிறுங்க வைக் கும் பேரழகுடன் வாலிபத்தை எய்தி, கிருபாகர ரிடம் சகல கலைகளிலும் போதனை பெற்று, உரிய காலத்தில் மாளவத்துக்குத் திரும்பி, அரசை ஏற்றுக்கொண்டான். மகனின் மனப் போக்கு நிச்சயமானதும் ராணி மாதங்கினி, தன் கடமை யும் மனப் பயமும் தீர்ந்தனவென்று நிம்மதி கொண்டாள். அதே நிம்மதியுடன் அவள் இவ்வுலகினின்றும் விடை பெற்றுக் கொண்டாள்.

* * *

கிட்டத்தட்ட இதே மனச் சமாதானத்தை யும், வெற்றிப் படியில் மேல் நோக்கிச் சென்று கொண்டிருப்பது போன்ற ஓர் எக்களிப்பையும் கொண்டு வளர்ந்து வந்தாள், மந்திரியின் மகள் சாந்தினியாக அவதரித் திருந்த மஹேச் வரியும்.

* * *

பிரம்மலோகத்தில் தேவர்கள் அனைவரும் ஒன்றுகூடி நான்முகனை வணங்கி நின்றனர்.

"எங்கே, அனைவரும் ஒருங்கே திரண்டு வந்து நிற்கிறீர்களே? என்ன ஆபத்து நேரிட்டுவிட்டது?" என்று கேட்டார் பிரமதேவன்.

"தேவா, இதென்ன இப்படி ஒன்றுமே அறியாதவர் போலக் கேட்கிறீர்கள்! கைலாசம் பல காலமாகக் காலியாகக் கிடப்பதைத் தாங்கள் அறியீரா? சக்தி தேவி ஒரே உக்கிரத்துடன் தனது வல்லமையைப் பிரயோகித்து, சிவத்தைச் செயலற்றவராக இருத்தி விட்டிருக்கிறாளே? அவரை மீட்க வேண்டாமா?" என்று முறை யிட்டனர் தேவமக்கள்.

நான்முகனின் முகங்களில் நகை அரும்பிற்று. "தேவர்களே, உங்களைக்கூடப் பூலோக மக்களைப் போல அறியாமை வந்து மூடிவிட்டதா? இந் தப் பிரமனின் எழுத்தாணி கிறுக்கிய கோடுகளை அழிக்க எந்தச் சக்திக்கும் திறனில்லை யென் பதை நீங்கள் அறியீர்களா? என் இந்தக் கலக்கம் உங்களுக்கு? விதிக்குச் சக்தி அடி பணிந்து அதன் கட்டளையை நிறைவேற்றித் தான் ஆகவேண்டும். சிவத்தை மனிதக் கூண் டிலிருந்து வெளியேற்றித் தனது தோல்வியை யும் ஒப்புக்கொண்டு பராசக்தி திரும்பப்போகிற நாள் வெகு தூரத்திலில்லை. கவலை யின்றிப் போய் வாருங்கள்" என்றார் சிருஷ்டிகர்த்தா.

முற்றிலும் சமாதான மடையாவிட்டாலும், விதியின் வலுவில் நம்பிக்கை வைத்தவர் களாகத் திரும்பினார்கள், தேவலோகவாசிகள்.

* * *

தேவர்களை அனுப்பிவிட்டுப் பிரமன், அருகில் மலைபோன்று குவிந்துகிடந்த விதி ஏட்டுச்

......பார்வதியின் மனத்தில் இப் பயம் தோன்றியதும்......

சுவடிகளிலிருந்து, விபாங்கனது விதிக் குறிப்பை எடுத்து நோக்கினார். சக்தியை முறியடித்து விதியை நிலைநாட்டப் பெரிய பணிகள் பல வற்றை உடனே ஆற்றியாகவேண்டும் என்பது கண்டு, அவற்றிற்கான ஆக்கத்தில் ஈடுபட்டார்.

* * *

சற்று நேரத்தில் மன்மதன் பிரமனின் முன் வந்து வணங்கி நின்றான். "சிருஷ்டிப்பிதாவே, அடியேன் அனங்கன் வணங்குகின்றேன். உங்கள் பணியாளனுக்கு இடப்படும் கட்டளை யாதோ?" என்று விநயமாக வினவினான், அவன்.

"ஆதிசிவம் பூவுலகில் மாளவ நாட்டில் விபாங்கன் என்ற நைஷ்டிகப் பிரம்மசாரியாக அவதரித்திருக்கிறார். சக்தியின் ஆற்றலால், பெண்களையே வெறுக்கும் மனப் பான்மை கொண் டிருக்கும் அவரிடம் உனது பாணத்தைப் பாய்ச்ச வேண்டும்" என்று கூறினார் பிரமதேவன்.

"என்ன?" என்று கேட்டபோது ரதிமணாளனுக்குக் கிட்டத்தட்ட உயிரே போய்விட்டதெனலாம். "தேவா, ஒருதடவை அவரிடம் விளையாடிச் சாம்பராகி உருவின்றி உலவி வரும் இப்பேதையையா மீண்டும் அதே பணியை ஆற்றப் பணிக்கிறீர்கள்?"

"பதறாதே, காமதேவா; அன்றைய நிலை வேறு; இன்றைய நிலை வேறு. அன்று சிவத்துக்கு எதிராக, அவர் அறியாமல் உன் அம்பை எய்தாய். ஆனால் இன்றோ, விதியாக இயங்கும் அவர் சக்திக்கு உதவியாகவே உன் மலர்ச் சரம் பாயப் போகிறது!"

"ஆனால் ஸ்வாமி, இதனால் தேவமாதாவின் கோபத்துக்கு நான் ஆளாக நேரிடுமே? அவள் சக்திக்கு ஊறு செய்து என்னை அழியச் சொல்கிறீர்களா?" என்று கேட்டான் அணங்கன்.

தில் ஒருவிதக் கலக்கமும் உடனே எழுந்தது. "ஆம்! எனது சக்தி முழுவதும், பரமனைப் பெண்களிடம் வெறுப்புக் கொள்ளச் செய்வதில் அல்லவா ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது? அந்தச் சக்தி யில்லாதவரையில் நான் வெறும் மானிடப் பெண்தானே! இந்த நிலையில் இவர்கள் இத் திருமணத்தில் முனைந்து என்னை அக் காமுகன் வீரசேனனுக்கு மனைவியாக்கி விட்டால்........!"

பதிவிரதா சிரோன்மணியான பார்வதியின் மனசில் இப்பயம் தோன்றியதும், அவள் உடல் ஒரு விநாடி சில்லிட்டுப் போய்விட்டது.

"பயப்படாதே! தேவியே உன் செயலை விரும்பி அழைக்கும் சந்தர்ப்பம் ஒன்றைச் சிருஷ்டித்துத் தருகிறேன்."

இவ்வாறு கூறிவிட்டுப் பிரமதேவன் தலையெழுத்து ஓலைச் சுவடியிலிருந்து ஓர் எட்டைப் பெயர்த்தெடுத்து மாளவத்தை நோக்கி ஏவினார்.

* * *

மந்திரி ரதிவர்மனின் இல்லத்தில் அரண்மனை ஜோசியர் கையில் ஒரு ஜாதக ஓலையை வைத்துக் கூர்மையாகக் கவனித்துக்கொண்டிருந்தார். "வியாழானுகூலம் ஏற்பட்டுவிட்டது. அண்மையிலே சாந்தினியின் விவாகம் நடந்தேறியாக வேண்டும். சேனாதிபதி வீரசேனனின் ஜாதகம் சாந்தினியின் ஜாதகத்தோடு இணைந்து நிற்கிறது. இனித் தாமதமின்றி விவாகத்துக்கான ஏற்பாடுகளை நீங்கள் தொடங்கலாம்" என்றார் அவர்.

"ஆனால் ஸ்வாமி, சாந்தினி பிடிவாதமாகத் தனக்கு விவாகமே வேண்டாமென்று கூறுகிறாளே!" என்றாள் மந்திரியின் மனைவி.

"பிராப்தம் ஏற்பட்டுவிட்டால் சட்டென மனமாற்றமும் ஏற்பட்டுவிடும், அம்மா! நான் நிச்சயமாகச் சொல்கிறேன்; இன்றைக்கு எட்டாவது நாள் உங்கள் குமாரியின் கழுத்தில் மாங்கல்யம் ஏறியே ஆக வேண்டும்!"

* * *

"என்ன உறுதி! எவ்வளவு நிச்சயம்! பேதையர், இவர்களுக்கு நான் யார் என்பதும் எதற்காக இந்த மானிட உருக் கொண்டிருக்கிறேன் என்பதும் தெரிந்திருந்தால்.......?"

இவ்வாறு தனக்குள் கூறிக்கொண்டாள் சாந்தினியாக நின்ற மஹேச்வரி. ஆயினும் அவள் மனத்

தேவி சிந்தித்தாள்; சிந்தித்தாள்; சிந்தித்தாள். கடைசியில் தனது கற்பைக் காத்துக் கொள்ள அவளுக்கு ஒரே ஒரு வழிதான் தென்பட்டது. அதன்படித் தனது சக்தி மீண்டும் தன்னிடமே வந்துவிடுமென்றும், அதோடு பரமனைத் தனது கண்கள் முன்பே வைத்துப் பாதுகாத்துவர முடியுமென்றும் விளங்கிய போது, அன்னை அதில் கவிந்துவிட்டாள். "ஆம்; அவரையேமணக்கவேண்டும்! என் சக்தியை அவரிடமிருந்து இழுத்துக்கொண்டு, சலனமற்றிருக்கும் அவர் உள்ளத்தில் பெண்ணாசையை எழுப்ப மன்மதனையும் பணிக்கிறேன்!" என்று எண்ணினாள் அவள் இறுதியாக.

* * *

பிரமதேவன் 'கட கட' வென்று சிரித்தார். நாற்புறமும் அவர் நகையொலி எதிரொலித்தது.

"என்ன ஸ்வாமி? ஏன் இப்படி நகைக்கிறீர்கள்?" என்று கேட்டான் ரதிகாந்தன்.

"விதியின் போக்குப்படி நடக்கிறோம் என்பதை இன்னும் உணர்ந்து கொள்ளவில்லையே, தேவி பார்வதி; என்ன பின் புத்தியப்பா இந்தப் பெண்களுக்கு? கடிவாள மிட்ட குதிரையைப் போல, எதிரே நிற்கும் தங்கள் லட்சியத்தை நோக்குவதை யன்றிச் சூழ்நிலையை அறவே மறந்து விடுகிறார்களே, இவர்கள்!"

"நீங்கள் சொல்வதொன்றும் புரியவில்லையே, தேவா."

"அனங்கா, உனக்கு அழைப்பு வந்துவிட்டது! எந்தச் சக்திக்குப் பயந்தாயோ, அவளே அதோ உன்னை அழைக்கிறாள், போ; போய்க் காரியத்தை வெற்றியுடன் முடித்து வா. உனக்கு மங்களமுண்டாகட்டும்."

மன்மதனுக்கு உள்ளூறப் பயம்தான்; எனினும் அன்னை பராசக்தியின் கட்டளை அவனைப் பூவுலகுக்கு இழுத்துச் சென்றது.

"தாயே, தங்கள் மகனுக்கு இடும் ஆக்ஞை எதுவோ?" என்ருன் காம தேவன், மந்திரி குமாரி சாந்தினியின் முன் நின்று.

"மாரா, முன்பு ஒரு தடவை எனக் காகப் பரமனை எழுப்பச் சென்று உடலை இழந்தாய். அப்பனே, அதே உதவியை மீண்டும் ஒரு தடவை செய்ய வேண்டும். ஆனுல் உனக்கு ஆபத்து எதுவும் நேராது நான் காப்பாற்றுகிறேன். எனது இக்கட்டான நிலையைப் போக்க இத் தேசத்துஅரசன் விபாங்கனுக விளங்கும் உங்கள் வில்வாத்திரி மீது என்னை நினைத்து ஒரு புஷ்ப பாணத்தை எவுவாய்!" என்ருள்.

"சித்தப்படிச் செய்கிறேன், அன்னையே" என்று கூறி அகன்ருன் அனங்கன்.

* * *

மேலுலகில் பிரமதேவன் வேகமாகத் தமது சுவடியிலிருந்து வேருெரு வட்டை எடுத்துப் பூமியை நோக்கி வீசினுர். அது மாளவ நகரில் அழகிற் சிறந்த தாசியாக விளங்கிய பூர்ணுவை வீட்டைவிட்டுக் கிளப்பி, வீதியில் பவனி வந்து கொண் டிருந்த அரசன் விபாங்கனைக் காண விரட்டிற்று.

* * *

அர்த்தநாரியின் மீது அம்பு எய்ய வந்த அனங்கன் அந்த அழகிய தாசியைப் பார்த்தான்.

"ஆஹா! ரதிக்கு ஈடான அழகுள்ளவளாக விளங்கும் இந்த அணங்கு யார்?" என வியந்தான். அவன் மனத்தில் அவள் நினைவு தங்கிவிட்டது.

* * *

வீதியோடு பவனி வந்துகொண்டிருந்த அரசன் மீது புஷ்ப பாணத்தைத் தொடுத்துவிட்டு, நெற்றிக் கண்ணுக்குப் பயந்து, திரும்பிப் பாராது தேவ லோகத்தை நோக்கி ஒரே ஓட்டமாக ஓடினுன், மாரன். போகும்போது அவனுக்குத் தான் ஒரு தவறு செய்து விட்டது நினைவுக்கு வந்தது.

நேரே பிரமதேவனிடம் சென்று, "ஸ்வாமி, காரியத்தை நிறைவேற்றிவிட்டேன். ஆனுல் ஒரு தவறு நடந்துவிட்டது. பாணத்தைச் செலுத்திய போது, பார்வதியின் நினைவுடன் அப் பரத்தையின்

நினைவும் என் உள்ளத்தில் தோன்றி விட்டது!" என்றான்.

"தவறு ஒன்றுமில்லையப்பா! விதிப்படித்தான் எல்லாம் நடந் திருக்கின்றன!" என்றார் நான் முகன்.

இதைக்கேட்ட பின்னரே மன்மதனுக்குச் சரியாகச் சுவாசம் வந்தது. "தேவா, என் வேலை முடிந்து விட்டதல்லவா? எனக்கு விடை தருகிறீர்களா?" என்று கேட்டான் அவன்.

"காமதேவா, இன்னும் ஒரு சிறு காரியம் ஆக வேண்டும்!"

"இன்னும் என்ன, ஸ்வாமி?"

"என் இப்படிப் பயப்படுகிறாயப்பா? இது ஒன்றும் பயப்படத் தக்க செயலல்ல. அதோ பார், மந்திரி குமாரி சாந்தினிக்கும் மாளவத்து மன்னன் விபாங்கனுக்கும் மணமாகும் காட்சியை! அதைப் பார்த்துக் கொதித்து நிற்கிறான் பார், ஒரு ஆடவன். அவன் அந்நாட்டுச் சேனாதிபதி வீரசேனன்! மந்திரிகுமாரியை யாரென்று அறியாமல், மானிட இயல்புடன் அவள்மீது மையல் கொண் டிருக்கிறான். அவனை இன்னும் சற்று முடுக்கிவிட வேண்டும்; அவ்வளவுதான்!"

"இதுதானே, ஸ்வாமி? செய்துவிடுகிறேன். அத்துடனுவது என்னை இந்த ஆபத்தான சூழ்நிலையில் மீண்டும் புகச் செய்யாது விலக்கிவிடுவீர்கள் அல்லவா?"

"ஆம்; அத்துடன் உன் பங்கு வேலை முடிந்துவிடுகிறது; போய்க் காரியத்தை நிறைவேற்றி வா!"

மற்றொரு புஷ்ப பாணம் மந்திரிகுமாரி சாந்தினியின் நினைவை, சேனாதிபதி வீரசேனனின் நெஞ்சில் பொறித்துவிட்டுத் திரும்பிற்று.

* * *

ஒரு ஆண்டுக்குள் மாளவத்தின் நிலையில் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. அரசன் விபாங்கன் தனது சங்கற்பத்தைத் தள்ளிவிட்டு,



மந்திரி குமாரி சாந்தினியை மணந்ததில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்ட மாளவத்து மக்களுக்கு வேறொரு அதிர்ச்சி தரும் சம்பவமும் தொடர்ந்து நிகழ்ந்தது. நாட்டையும், கடமையையும், மனைவியையும் மறந்து அரசன் விபாங்கன் தாசி பூர்ணாவின் அடிமையாகக் கிடந்தான்.

தேவி சாந்தினி மற்றொரு இக்கட்டான நிலையை அடைந்தாள். கணவரை வேசையின் நட்பிலிருந்து மீட்க அவள் ஒருபுறம் முனைந்து கொண்டிருக்க, வேறொரு புறம் சேனாதிபதி வீரசேனனிடமிருந்து அவளுக்கு ஆபத்து நெருங்கிக்கொண்டு வந்தது. தனது சக்தியை அவனை அழிக்க ஏவுவதா, அல்லது மகாதேவரைப் பூர்ணாவிடமிருந்து பிரிக்கப் பயன்படுத்துவதா என்பதைச் சட்டென நிச்சயிக்க முடியாத நிலையிலிருந்தாள் அன்னை.

* * *

மேலுலகத்திலிருந்து விதிஎடுகள் நாள்தோறும் பறந்தவாறிருந்தன. ஒருநாள் பொழுதில், தேவர்கள் அனைவரும் கூடியிருக்க, நான்முகன் அரசன் விபாங்கனின் விதிச் சுவடியில் எஞ்சியிருந்த கடைசி நாலு எடுகளையும் எடுத்து வீசினார். வீசிய பின்பு, "தேவர்களே, இதோ விதியின் இறுதி ஆற்றலைப் பாருங்கள் !" என்றார். தேவ மக்கள் ஆவலுடன் தங்கள் பார்வையை மாளவத்தை நோக்கிச் செலுத்தினர்.

* * *

கடைசியாக, அன்று தேவி ஒரு முடிவை எட்டிவிட்டாள். அந்தக் காமுகன் வீரசேனனை முதலில் ஒழித்துவிடத் தனது சக்தியைப் பிரயோகித்துவிடுவதென்று, அன்று நடு இரவில் தன்னை வசந்த மண்டபத்தில் வந்து சந்திக்குமாறு அவனுக்கு ஓலை அனுப்பினாள் சாந்தினி.

கிட்டத்தட்ட அதே சமயத்தில் தாசி பூர்ணாவையும் வசந்த மண்டபத்துக்கு வருமாறு அரசன் விபாங்கன்கேட்டுக்கொண்டிருந்தான்.

எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. தேவி பராசக்தியே முதலில் வசந்த மண்டபத்தை அடைந்தாள். அவள், கையில் திரிசூலம் தாங்கியிருந்தாள். அவளது அப்பொழுதைய ரூபம் எவ்வாறு இருந்தது என்பதை நாம் அறியோம்; ஏனெனில் இருளோடு இருள் சொரூபமாக அன்னை உருக்கொண்டிருந்தாள்.

அதோ, யாரோ அவசரமாக வருகிறார்கள். அந்தக் காமுகன் வீரசேனன்தானா ? நமனை எதிர்கொள்ள வரும் அவனுக்குத்தான் எத்தனை அவசரம் ? "என் அன்பே !" என்று அவன் தேவியை நெருங்குவதற்கும், பராசக்தியின் திரிசூலம் அவன் மார்பில் பாய்வதற்கும் சரியாக இருந்தது!

"பூர்ணா, அடி பாவி!" என்ற அலறல் அன்னையை அதிர வைத்தது.

வீரசேனனென்று தீர்மானித்துத் தன் கணவனையே அழித்து விட்டோம் என்பதைக் கண நேரத்துக்குள்ளாக உணர்ந்துகொண்டாள். மறு நிமிடம் அவள் விதிவென்று விட்டதென்பதையும் உணர்ந்து கொண்டுவிட்டாள். பொறுக்க முடியாத அவமான உணர்ச்சியுடன் கையிலிருந்த திரிசூலத்தைத் தன் மார்பை நோக்கியும் பாய்ச்சிக் கொண்டாள் தேவி.

மானிடக் கூண்டிலிருந்து விடுபட்ட தெய்வீக ஆவிகளிரண்டும் விண்ணில் பறந்து சென்றன.

* * *

மாளவத்து மக்கள் மறுநாள் காலையில், தங்கள் மன்னனும் மகிஷியும் வசந்த மண்டபத்தில் ஒருங்கே மாண்டு கிடப்பதைக் கண்டு மாளாத துயரடைந்தனர். கானகத்திலிருந்த ராஜகுரு இருபாகரருக்கு இச் செய்தி எட்டிய போது, அவர் "விதி வென்றது!" என்றார்.

* * *

"ஆம்; விதிதான் வென்றது. அதன் முன் என் சக்தி பயனற்றது என்பதை உணர்ந்து கொண்டேன், தேவா! என்னை மன்னித்தருள வேண்டும்" என்று கண்ணீர் வழியப் பகர்ந்து நின்ற மஹேச்வரியை ஆண்டவன் புன்முறுவலோடு அருகில் இழுத்து அணைத்துக் கொண்டார். *

'பார்வதி'

விளம்பர விகிதம்

உள்பக்கம்	ரூ. 100/-
இரண்டாவது அட்டை	ரூ. 250/-
மூன்றாவது அட்டை	ரூ. 200/-
நாலாவது அட்டை	ரூ. 350/-

6 மாதகாலத்துக் குரிய காண்ட்ராக்ட் விளம்பரங்களுக்கு 5% தள்ளுபடி

1 வருட காலத்துக்குரிய காண்ட்ராக்ட் விளம்பரங்களுக்கு 10% தள்ளுபடி

நீண்டகால ஒப்பந்தங்களுக்கு எழுதவும்

பத்திரிகையின் முழு அளவு	7''x10''
அச்சுப் பக்க அளவு	6''x8''

விவரங்களுக்கு :

விளம்பர மானேஜர், 'பார்வதி'

எழுத்தாளர்களுக்கு

இலக்கிய நயம் செறிந்த கதை கட்டுரைகளையும், கவிதைகளையும் 'பார்வதி'யில் பிரசுரிக்க வரவேற்கிறோம். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முறையிலும், இலக்கியப்பத்திரிகைகளிடையேபுதுப்பாதை வகுத்துச் செல்லும் 'பார்வதி'யின் தூய லட்சியத்திற்கு ஓரளவு ஈடு செய்யும் வகையிலும் கதைகளும் கட்டுரைகளும் அமைந்திருத்தல் வேண்டும். பயன் பெறத்தக்க கதை கட்டுரைகளை எழுத முயலும் இளம் எழுத்தாளர்களுக்கு 'பார்வதி' பாரபட்சமற்ற வரவேற்பளிப்பாள். அங்கீகரிக்கப் பெறாத கையெழுத்துப் பிரதிகளைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலைகள் அனுப்புதல் வேண்டும். அனுப்பும் பிரதிகளுக்கு ஒரு நகல் வைத்துக் கொள்வது நல்லது. பிரசுரமாகும் எல்லா விஷயங்களுக்கும் தக்க சம்மானம் வழங்கப்படும்.

விவரங்களுக்கு :

ஆசிரியர், 'பார்வதி'.

'பார்வதி'

தமிழ் இலக்கிய மாத இதழ்
பிரதி ஆங்கில மாத முதல் தேதி வெளிவரும்

ஏஜண்டுகள் மூலம் 'பார்வதி' இதழ்களைத் தொடர்ந்து பெற வசதி இல்லாத அன்பர்களுக்கும், தபாலில் பெற விரும்பும் அன்பர்களுக்கும் சந்தாத் திட்டம் மிகவும் சௌகரிய மளிக்கும். குறித்த தேதியில் பத்திரிகை தங்களைத் தேடி வந்தடையும். பக்கத்திலுள்ள கூபனைக் கத்தரித்துப் பூர்த்தி செய்தனுப்பினால், தங்கள் பெயரைச் சந்தாதாராகப் பதிவு செய்துகொண்டு பிரதிகளைத் தபாலில் அனுப்புவோம்.

வருடச் சந்தா :

உள் நாடு	ரூ. 6—0—0
வெளிநாடு	ரூ. 7—8—0

தனிப்பிரதி

உள்நாடு	அணா 8
வெளிநாடு	அணா 10

'பார்வதி' சந்தா கூபன்

To
சந்தா மானேஜர்,
'பார்வதி' சென்னை—2.

அன்புடையீர்,

தங்கள் 'பார்வதி' பத்திரிகையின் சந்தாதாராக விரும்பி இத்துடன் ஒரு வருடத்துக்குரிய சந்தாத் தொகை ரூ.........யை மணியார்டர் / போஸ்டல் ஆர்டர்/செக் மூலம் அனுப்பியுள்ளேன். ....முதல் என்னைச் சந்தாதாராகப் பதிவுசெய்துகொண்டு 'பார்வதி' பிரதிகளைத் தொடர்ந்து தபால் மூலம் அனுப்பி வைக்கக் கோருகிறேன்.

....
(கையொப்பம்)

பெயர்..
விலாசம்..................... ....
....
தேதி............

விவரங்களுக்கு : சந்தா மானேஜர், 'பார்வதி', சென்னை—2

அந்தச் சிரிப்பு

ஸ்வாமினாத ஆத்ரேயன்

அன்று நிலாவுக்கு என்ன தான் வந்து விட்டதோ தெரியவில்லை— பரிமாணமே தெரியாத பெரும் பாறையே போல் வெண்ணாற்றின் தெள்ளிய நீரோட்டத்தின்மேல் உராய்ந்து விட்டது. அதன் ஓட்டத்தைத் தேக்கித் திணற அடித்தது.

அந்தச் சிரிப்புத்தான் அவள் வாழ்க்கையுடன் அவன் வாழ்க்கையை இணைத்தது. இனம் தெரியாத சிரிப்பில் முதலில் அவன் கொண்டது பிரமையானாலும், அந்த நிலையைக்கூட ஒப்பவில்லை அவன் மனம். அவனுக்கு முன்பே இதை அவளும் உணரவும், அந்தச் சிரிப்பு அகன்றே விடுகிறது ! அழிந்தும் விடுகிறது !

அப்பால் பாலத்தின் மேல் நகரும் பாரவண்டி கூட நிலவின் சுமை தாங்காது தள்ளாடி நகர்ந்தது. அக்கரையில் அடர்ந்திருந்த மரங்கள் மூச்சுத் திணறுவதுபோல நுனி இலைகளை மட்டும் அசைத்துக்கொடுத்தன. முனகுவதற்குக்கூட முடியாமல் காற்று முக்கிற்று. மணி எட்டுதான் இருக்கும். அதற்குள் அந்த நிலவு ஊரையே அடக்கிவிட்டது.

இக்கரையில் கரையோர வீடுகளின் கொல்லைப் படிக்கட்டுகளில் பிரவாகம் தன் சுமையைத் தளர விட—படிக்கட்டுகள் நெட்டித் தள்ளிவிட, அந்தச் சலசலப்புத்தான் கேட்டது. ஆங்காங்கு வீடுகளின் ஜன்னல் வழியாக வரும் அடுப்பங்கரை விடி விளக்கின் வெளிச்சமும் புகையும் சேர்ந்து நிலவை ஊடுருவிப் பாய்ந்தும், வெற்றி பெறாமல் ஆற்றோட்டத்தில் மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டன.

வீட்டின் கொல்லைக் கதவைத் திறந்துகொண்டு சாப்பிட்ட கை கழுவ வெளியே வந்த விசுவநாதனையும் இந்த அமுக்கம் அழுத்திற்று. மெதுவாகப் படிக்கட்டுகளில் இறங்கிக் கை கழுவி விட்டு மேல் துண்டை எடுத்து முகத்தைத் துடைக்குமுன் பொத்தென உட்கார்ந்தான்.

அவன் உட்கார்ந்த இடத்திற்கு எதிரே ஆற்றின் நடுவில் இடிந்த சுவரொன்று தலையைத் தூக்கிக் கொண்டிருந்தது. இடிந்து விட்ட பழைய பாலத்தின் கைப்பிடிச் சுவர் அது; நீந்தப் பழகும் சிறு பையன்களுக்கு எல்லைக் கல்லாகவும், மூச்சுத் திணறும்பொழுது அணைகல்லாகவும் இருந்து வருகிறது. அந்த இரவில் அதன் நிலைமை— தனிமை—விசுவநாதனுக்கு மறந்தும் அழியாத நினைவு ஒன்றைக் கிளப்பிவிட்டது.

உண்மையில் சாப்பிடும்பொழுதே அந்த நினைவு தலையெடுத்தது. அவன் மனைவி பேச்சுவாக்கில் ஏதோ சிரித்தாள். அந்தப்பழைய நாளையச் சிரிப்பு! வெகு நாளாக மறந்துவிட்ட சிரிப்பு! நெஞ்சின் ஆழம்படாத சிரிப்பு! புத்தம் புதிய செய்தித்தாள் காற்றுடன் போட்டி யிடும் பொழுது ஏற்படும் இறுமாப்புக் கலப்பு மிக்கச் சிரிப்பு! அவள் அப்படிச் சிரித்து வெகு நாளாகிவிட்டது. இன்றுதான் சிரித்தாள். அந்தச் சிரிப்பு—பழைய நினைவை....

ஆனால் சாப்பாட்டுடன் கலந்து வாயில் புகுந்த துரும்பு ஒன்றைத் துப்பும் அருவருப்புடன் அந்த நினைவையும் துப்பிவிட்டான். மறுபடியும் அவள் சிரித்தாள்.

'விடுவிடு' வென்று சாப்பிட்டு விட்டுக் கை கழுவ வந்தவன் ஆற்றின் சுமையுற்ற பிரவாகத்தையும், அதன் நடுவே மறையமுடியாமல் நின்று பளுவைத் தாங்கும் கைப்பிடிச் சுவரையும் கண்டு அசந்து உட்கார்ந்து விட்டான். ஆற்றுடன் உறவு கொண்டுவிட்டது அவன் மனசு என்றுதான் சொல்லவேண்டும். ஒன்றுக்கொன்று அநுதாபம் காட்டி இரங்கிக்கொண்டன போலும்!

விசுவநாதன் சோம்பல் முறித்தான். ஆனால் நினைவு முறியவில்லை. வேறு வழியின்றி அதற்கு வசமிழந்தான்.

விசுவநாதன் சிவகாமியை மணம் செய்து கொண்டதற்குக் காரணமே அந்தச் சிரிப்புத்தான். அடுத்தவீட்டில் அவள் பெற்றோர் குடியிருந்தனர்; அவள் சிரிப்பொலி கேட்கும்; உடனே அவள் தாயும் தந்தையும் திட்டஆரம்பித்துவிடுவார்கள்.

"இந்தச் சிரிப்புச் சிரிக்காதேடி—வேண்டாம்; இது நாசகாலச் சிரிப்பு!''—இது தகப்பனார்.

"எனக்குப் பற்றிக் கொண்டுதான் வருகிறது. எடுத்த ஜன்மத்திற்குச் சிரிப்பு என்ன வேண்டிக் கிடக்கிறது?"—இது தாயார்.

மறுபடியும் அந்தப்பெண் சிரிப்பாள். ஆத்திரம் பொறி பறக்கத் தகப்பனார் வெளியே வந்து விடுவார். தாயார் திட்டிக்கொண்டிருப்பாள்.

விசுவநாதனுக்கு இவர்கள் கலவரமே புரியவில்லை. ஒரு பெண் சிரிக்கக் கூடாதா? அப்படி அந்தச் சிரிப்பில் என்னதான் இருக்கிறது, அவ்வளவு கோப மூட்ட?

இந்த ஆசைதான் முதலில் அந்தப் பெண்ணைக் கவனிக்கத் தூண்டியது; கவனித்தான். கொத்தமல்லி கருவேப்பிலை விற்கும் அங்காடிக் காரியிடம் அந்தப் பெண் அப்படிச் சிரித்தாள்.

''என்னடி இது! இந்தக் குளந்தை இப்படிச் சிரிச்சே முழுக்காட்டிடுது..........!'' என்று கன்னத்தில் கை வைத்தாள் அவள்.

அந்தப் பெண் மறுபடியும் சிரித்தாள். அவன் ஸ்தம்பித்துவிட்டான்.

இப்பொழுது அந்தக் காட்சியை அவன் ஊடுருவி நினைத்துப் பார்க்கும் பொழுது—அந்தச் சிரிப்பு முதன் முதலில் விளைவித்த உணர்ச்சி.... 'பயம்' தானே என்று கூடத் தோன்றுகிறது அவனுக்கு! ஆனாலும் அவன் மயங்கி விட்டதென்னவோ உண்மை. படம் விரித்தாடும் பாம்பைக் கண்டு குழந்தை மயங்குகிறதே ஒழியப் பயப்படுவதில்லை என்பது மனத் தத்துவ ஆராய்ச்சியாளரின் முடிவு.

அதென்னவோ அந்தச் சிரிப்புக்காகவே சிவகாமியை மணந்து கொண்டு விட்டான் விசுவநாதன்.

...ஆற்றுடன் உறவுகொண்டு விட்டது அவன் மனசு.........

'...இப்படிச் சிரிச்சே முழக்காட்டிடுது......!'

"ஆமாம்; ஒன்றியாக இருக்க மட்டும் பயப்படுவாள்!" என்றான் விசுவநாதன்.

விசுவநாதனுக்கு ஹாஸ்யம் பிடிக்காதென்பதில்லை. ஆனால் தனக்கும் ஹாஸ்யம் வருமென்று அவனுக்குத் தெரியாது. அது சிவகாமி சிரித்ததும்தான் தெரிந்தது. அப்படிச் சிரித்தாள் அவள். இரு ஆண்பிள்ளைகளும் அசந்துவிட்டார்கள்.

விசுவநாதன் இரவு ரயிலுக்குக் கிளம்பினான்.

"நானும் ரயிலடிவரை வருகிறேனே!" என்று கேட்டான் ராமலிங்கம்.

"நன்றாக இருக்கிறது, எனக்கு வாய்த்த துணை!" என்றுசொல்லிச் சிரித்தாள் சிவகாமி. விசுவநாதன் கிளம்பிவிட்டான்.

பெண் மிகவும் நல்லமாதிரி; நல்லகுணம்; அன்புடனும் ஆசையுடனும் அவனுக்கு இன்பமளித்து வந்தாள்.

உறவு முறையோர் வருவார்கள், போவார்கள்; எல்லோருக்கும் அந்தச் சிரிப்பு ஒரு கண்காட்சியாகி, அந்தக் குடும்பத்திலேயே அது ஒரு விசித்திர விஷயமாகப் பேச்சுக்குப் பேச்சு வெளிவரும்.

அவளுக்குச் சின்னத் தாத்தா பேரன் ஒருவன் ராமலிங்கம்—விசுவநாதனுக்குச் சிநேகமானான். சிநேகம்தான் உறவு முறைக்குப் புது மெருகிட்டுக் கவர்ச்சி கொடுத்தது. விசுவநாதனுக்கு மைத்துனன் உரிமை பாராட்டி வேடிக்கை செய்ய அவன் ஒருவன் அகப்பட்டான்!

அன்று கூட அப்படித்தான்........முன்சீப் கோர்ட் வேலையாக வெளியூருக்குப்போக வேண்டியிருந்தது விசுவநாதனுக்கு.

"ஊருக்குப் போகிறேன்; துணைக்கு வந்து படுத்துக்கொள்" என்று அவனை அழைத்தான் விசுவநாதன்.

"சிவகாமி பத்துப் பேருக்குத் துணை யிருப்பாளே" என்றான் அவன்.

தெரு முனைவரை வந்து வழியனுப்பிவிட்டு மூலைக்கடையில் ஒரு புகையிலைப் பொட்டணத்தை வாங்கிக்கொண்டு திரும்பிவந்தான் ராமலிங்கம். கூடத்து நாற்காலியில் உட்கார்ந்தான்.

சிவகாமி சமையலறை வேலைகளை முடித்துவிட்டுச் சற்றுநேரம் கழித்துக் கூடத்தில் வந்து உட்கார்ந்தாள். ராமலிங்கம் ஜன்னல் வழியாகப் புகையிலைச் சாற்றைத் துப்பிவிட்டுக் கூஜா ஜலத்தைக் குடித்துக்கொப்பளித்தது போகப் பாக்கியை விழுங்கிவிட்டு உட்கார்ந்தான். ஒரு ஏப்பமும் விட்டான்.

"சிவகாமி! நீ ரொம்ப நெஞ்சழுத்தக்காரி"

"எதற்குச் சொல்கிறாய்?"

"இல்லை....உனக்குத் துணை யென்றால் உன்னை ஒரு கணம் கூட விட்டுவிட்டுப் போகக் கூடாது போலிருக்கிறது..."

"அப்படி யார் சொன்னது..?"

"நீதானே சொன்னாய்.....சொல்லிவிட்டு நீ சிரித்ததில் உனக்கு மறந்துவிட்டதுபோலிருக்கிறது. விசுவநாதனும் நீ சிரித்த சிரிப்பில் நல்ல வேளையாகக் கவனிக்கவில்லை!"

சிவகாமி சிரித்ததும்தான் தனக்கும் ஹாஸ்யம் வருமென்று நினைத்தான்

"நான் சொன்னதில் கவனிக்க என்ன இருக்கிறது?"

"கவனிக்கக்கூடாதென்றுதான் நீ சிரித்திருக்கிறாய். இருந்தாலும், நீ சிரித்த சிரிப்பிலே எனக்குப் புரிந்துவிட்டது."

"என்ன புரிந்துவிட்டது?"

"நீ நினைத்தது எனக்குத் தெரிந்துவிட்டது. அதை நான் சொல்லி நீ இப்பொழுது கேட்க வேண்டுமா?"

"சுற்றிச் சுற்றிப் பேசாதே. இதெல்லாம் என்ன?"

"ஆமாம் பேசக்கூடாதுதான். நான் பேச வில்லை........"

அவன் பார்த்த பார்வை—சிவகாமிக்குச் சுரீரென்று சுட்டது. கதவைத் திறந்துகொண்டு விசுவநாதன் வந்தான்: அவனுக்கு நடந்த சம்பாஷணை எதும் தெரியாது.

"சிவகாமி! நீ சிரித்த சிரிப்பிலே—நான் ரிகார்டுகளை எடுத்துப்போக மறந்துவிட்டேன். நீ சிரித்தால்தான்—எனக்கு உலகமே மறந்துபோய் விடுகிறதா...? கடைசியாகப் பிரயாணம் கெட்டுவிட்டது. காலை வண்டியில்தான் போகவேண்டும்......" என்று ரிகார்டுகளைத் தேட ஆரம்

பித்தான். அவனுடைய அசட்டுத்தனத்தைக் கண்டு சிவகாமி **சிரிக்கவே யில்லை.** சுவரில் ஒட்டிய பல்லியும் ஈயும்கூடச் சற்று நேரம் திக்கிட்டு நின்றன.

"அப்போ—நான் ரூமுக்குப் போகிறேனே" என்று கிளம்பிவிட்டான் ராமலிங்கம்.

"சிவகாமி......"

அவள் பேசவே இல்லை.

சில நாட்களில் அவள் தீக்குளித்த கொடி போலே வாடி வதங்கிவிட்டாள். அதற்குப் பிறகு அவள் வெறும் 'வீட்டுக்காரி'தான். 'மனைவி' அல்ல. பெண்மையை அறவே மறந்து ஒழித்து உயிரைமட்டும் வைத்துக்கொண்டு அவனுக்கு ஊழியம் செய்திருக்கிறாள். எலும்புக்கூடும் தோலுமாய்த் தேய்ந்துவிட்டாள். எப்பொழுதும் கவலைதான். என்றாவது கணவன் கை விட்டு விட்டால்........?

கை கழுவப்போன கணவன் இன்னும் வர வில்லை என்ற கவலையினால்தான் அவள் கொல்லையில் வந்தாள்.

உறைந்துபோன ஆற்றுப் பிரவாகத்துடன் உறைந்து உட்கார்ந்திருந்த கணவனைப் பார்த்தாள்.

"நன்னா இப்படி வந்து உட்காாந்து கொண்டேள். எனக்குப் பறந்து போய்விட்டது..."

"அதிருக்கட்டும், சிவகாமி. இத்தனை நாளாக, ஒழிந்துபோன அந்தப் பாழும் சிரிப்பை எதற்குச் சிரித்தாய்?"

"சிரித்தால் என்ன? இனிமேல் என்னை உங்களைத் தவிர வேறு யார் சீண்டப் போரு..?"

மறுபடியும் சிரிக்கத்தான் நினைத்தாள். மார்க்குலையைப் பிடுங்கிக்கொண்டுவரும் அழுகையைத் தேக்கமுடியாமல் அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

நிலவை மேகம் மறைத்தது. உறைந்து போன காற்று சற்று உலு உலுப்பு அடைந்தது. ஆற்றின் பிரவாகம் சற்று வேகம் கண்டு விட்ட பெருமையில் கைப்பிடிச் சுவரைத் தாக்கித் தாக்கி, 'களுக் களுக்'கென்று சிரித்தது. *

தந்தி : 'ISWAR' போன் : 3711

ஆயில் எஞ்ஜின்கள், எலக்ட்ரிக் மோட்டார்கள், எலக்ட்ரிக் டிரில்லிங் மெஷின்கள், எலக்ட்ரிக் சாமான்கள், விவசாய பம்பு செட்டுகள், கேன் க்ரஷ்ஷர்கள், ரைஸ்மில் சாமான்கள், மற்றும் க்ரீம் ஸெபரேட்டர்கள் முதலியவற்றுக்கும் ஸ்டாக்கிஸ்டுகள்

மதுரை ஜில்லாவுக்கு பெட்டர் ஆயில் எஞ்ஜின் களுக்கு விநியோக உரிமையாளர்கள்.

★

தி மாடர்ன் எலக்ட்ரிக் கம்பெனி

எலக்ட்ரிகல் இஞ்ஜினீர்கள்,
கண்ட்ராக்டர்கள்,
மெஷினரி வியாபாரிகள்

301, லிங்கிசெட்டித் தெரு, சென்னை-1.

கிளை ஆபீஸ் :
134, திண்டுக்கல் ரோடு, மதுரை.

'கனல்'

மந்தகாசம் தவழும் மாலை வேளை; ரம்மியமான தொரு சோலை. 'கம்' மென்று நறுமணம் சோலையைச் சுற்றிக் கவிந்துகொண்டு, வருவார், போவார் அனைவரையும் காந்தம் போல் கவர்ந் திழுக்கிறது. மணத்தின் ஆகர்ஷண சக்தியில் மயங்கி இழுக்கப்படாத பிரம்ம சிருஷ்டிகளும் இருக்க முடியுமா?

மனிதனைப் படைத்த பிரமன் மலரையும் படைத்தான்! மனிதனிடம் அவன் படைத்த பகுத்தறிவைப் போல், மலரிலே மணத்தைப் படைத்திருக்கிறான்! மலர் என்றால் 'எங்கே? எனக்கு வேண்டும்!' என்று துள்ளித் துடிக்கும் ஆன்மாக்கள், அம் மயக்கத்தால் மலரினும் ஒருபடி கீழானவராகவே ஆகிவிடுகிறார்கள்! ஆனால், படைப்பின் சிகரமான மனிதன் இந்த மற்றொரு படைப்பின் வயப்பட்டு மயங்குவதில் ஈனம் இல்லை. சொல்லப்போனால், அதில் தான் பகுத்தறிவின் பூரண பாகமும் தொங்கிக்கொண்டிருக்கிறது.

ஒரு பழமொழி உண்டு; "உன்னிடம் ஒரு தம்பிடி இருந்தால் மிட்டாய் வாங்கு; இரண்டு தம்பிடிகள் இருந்தால் ஒன்றுக்கு மிட்டாயும், மற்றொன்றுக்குப் பூவும் வாங்கு."

உடலுக்கு ஒன்று சமர்ப்பணமாகிறது; மற்றொன்றோ உடலுடன் உள்ளத்துக்கும் ஏற்ற இன்ப விருந்தாகிறது.

உண்மையில் பூவின் தன்மை சாலச் சிறந்தது. அது ஆண்டவன் சிரத்திலும் வீற்றிருக்கிறது; அடித் தளத்திலும் அமர்கிறது; உடல் பூராவும் அலங்காரமாய்த் திகழ்கிறது.

ஆம்; பிரமனின் கலைத் தேர்ச்சிக்கும், வெற்றிக்கும் பூ ஒரு சின்னம். அழகுத் தேவியின் உருவம் பூ; பிறருக்குத் தொண்டு செய்யும் உள்ளத்தின் முத்திரை பூ; பெண்மையின் வடிவம் பூ; முக்கியமாகப் பெண்களின் அங்கத்திற்கும் அகத்திற்கும் எடுத்துக் காட்டு அந்தப் பூவே தான்!

அழகைப் பெண்ணிலும், பூவிலுமே அயன் அமைத்திருக்கிறான் என்பர். ஆகையினால் பூவும், பெண்ணும் இவ் வகையில் சகோதரப் பண்புடன்உலவ முடிகிறது. பெண்ணைக் கண்டால் பூவும், பூவைக் கண்டால் பெண்ணும் தமக்குள் கொள்ளும் மகிழ்ச்சியை எந்த அளவு கருவியாலும் அளந்து முடிவு செய்வதற்கில்லை. எல்லை கடந்த இன்பம் அது!

கவிஞன் பெண்ணைக் குறித்துப் பாடிய பாடல்களிலும் இரு மடங்கு அதிகமாகவே பூக்களைப்பற்றிப் பாடியிருக்கிறான். அக்கவிஞனின் ஆன்மவளர்ச்சி அவன் உள்ளொளியில் தேக்கப்பட்டிருக்கிறது. அந்த உள்ளொளிக்குத் தூண்டுகோலாக உள்ளது அந்தப் பூவேதான்.

காணும் சோலையின் இடையே மெல்லிய பூவை அவன் பார்வை துழாவுகிறது. அதன் சுகந்தத்தின் படிவம் அவனது கவிதையாக மலர்கிறது. பூப்போன்றகண்கள், பூப்போன்ற முகம், பூப்போன்ற கரங்கள் என்று பூவையே உபமானமாகக் கொண்டு கவிதைகளை அடுக்கிச் செல்லும் அந்த அழகு சாமானியமானதன்று. பூப்போல் மென்மை, பூப்போல் தெளிவு, பூப்போல் வண்ணம் என்று அகவியல்களையும் அவன் கவிதை அலங்கரித்துக் கொண்டே உலவுகிறது. அதில், அவன் அடையும் இன்பம் மேலா, நாம் அடைவது மேலா என்ற திகைப்புக் கூட, சில சமயம் நமக்கு ஏற்பட்டு விடுகிறது அல்லவா!

பூவின் பெருமையை இவ்வாறு கூறிக்கொண்டே செல்லலாம். பூவையர் தன்மையையும் புகன்று, எல்லை தேடிச் செல்லலாம். ஆனால் பூவையும், பூவையரையும் இணைத்துச் சொன்ன ஒரு கவிஞனின் கவிதையே இக் கட்டுரையின் பொருளாகும். அவன் மாதர் பண்பை ஒரு பூவின் பண்புடன் ஒப்பிட்டிருக்கிறான். மற்றக் கவிஞர் காணாத, கூறாத காட்சியை அவன் கண்டு கூறியிருக்கிறான். அச் செய்யுளின் கருத்து உள்ளத்தை ஈர்க்கிறது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் முன்பு ஒருபுலவரால் இயற்றப்பட்ட அச்செய்யுள் காலங்கடந்த மாபெருங் களிச் சுடராய் உள்ளொளியை ஊட்டுகிறது. மேலும் புலவர் எடுத்துக் கொண்ட பூவும், அந்தச் சந்தர்ப்பமும் மிகவும் போற்றத் தக்கனவாகும். அப்புலவரின் உலக ஞானமும், உவமைப் பிரயோகத் தேர்ச்சியும்

அச்செய்யுளிலிருந்தே தெற்றெனத் தெரிகின்றன.

இனி அச்சம்பவத்தைக் காண்போம்.

தலைவன் சோலையில் தற்செயலாய்த் தலைவியைக் கண்டான். அவள்தான் அவனது தலைவி என்று அவன் மனம் கூறியது. அவன் தான் அவளது தலைவன் என்பதை அவளது மனம் முடிவு கட்டியது. வேறென்ன வேண்டும்! ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். கண்ணொடு கண்ணும், மனத்தொடு மனமும் ஒட்டி ஒன்றுயின. அந்த அன்பு இதுவரை மறைந்திருந்து, கதிரவனைக் கண்டதும் மலரும் தாமரை போல் மலர்ந்து ஒளியும் வீசியது. அந்த அன்புத் தொடர்பின் இன்பப் பிணைப்பில் இருவரும் பேரின்பத்தைக் கண்டார்கள். அவன் கூறினான்; "என்தாய் தந்தையரும் உன்தாய் தந்தையரும் யாரோ? என்ன உறவுடையவர்களோ? நாம் இருவரும் இதன் முன்பு எவ்வாறு அறிந்தோம்! அப்படி ஒன்றும் சொல்வதற்கில்லையே! ஆனால் நாம் இன்று நெஞ்சு கலந்து அன்பில் திகழ்கிறோம். செம்மண்ணில் பெய்த வானத்து மழை நீர், அம்மண்ணோடு கலந்து அதன் தன்மையை அடைதல் போலத்தான் நம் நெஞ்சும் ஒன்று கலந்திருக்கவேண்டும்...."

அதற்கு அவள் கூறினாள்: "ஆம்! தங்கள் வார்த்தை உண்மையே. இதேபோல் நாம் என்றும் கூடி யிருக்கவேண்டும். இப் பிறப்பு மாறி மறுபிறப்பு வரினும் தாங்களே என் கணவராக இருத்தல் வேண்டும். உம் மனத்தை மகிழ்விக்கும் மனைவி நானேயாக இருத்தல் வேண்டும்........"

ஒன்றிய உள்ளங்களின் அன்புமொழிகள் இவ்வாறு வளர்ந்து கொண்டே சென்றன.

நாட்கள் சில சென்றன. அவனும் அவளும் பிரியாத் தொடர்பு பெற்றுவிட்டனர். ஒருவரை ஒருவர் கண்ணெனக் காத்து மண்ணில் விண்ணுலகங் கண்டார்கள்.

இன்னும் சில நாட்கள் அகன்றன. காலச் சக்கரத்தின் மேல்கீழ்ச் சலனத்தில் இன்பம், துன்பம் என்ற இரண்டும்தானே தலைப்படும்?

அவளை அவுன் பிரிந்தான்; அப்பொழுது அவள் அடைந்த துன்பம், அப்பப்பா! சொல்லத் தரமன்று. அவன் மண்ணைவிட்டே பிரிந்தானா? இல்லை. அல்லது, அப் பெண்ணை அடியோடு துறந்து பிரிந்தானா? இல்லை; மற்றொரு பெண் பரத்தை ஒருத்தியின் மையலிலே சிக்கிப் பிரிந்தான் தாற்காலிகமாக; அவ்வளவுதான்!

அவ்வளவுதானா? ஆனால், அவளால் அதைப் பொறுக்கவே முடியவில்லை. தோழி தைரிய மூட்டினாள், அவன் வந்துவிடுவான் என்று. அதைக் கேட்கும்போது அவள் மகிழ்ந்தாள். சிறிது நேரத்தில் மீண்டும் துக்கம் மேலிட்டது. இவ்வாறே சில நாட்கள் சென்றன. 'தோழி' என்ற தெய்வத் தன்மை வாய்ந்த புநிதவதி ஒருத்தி இல்லையென்றால் தலைவியின் வாழ்க்கையே மெலிந்து நைந்து போயிருக்கும். தலைவியின் தளர்ச்சிக்குத் தோழியின் அந்த அன்பு மொழிகள் பலத்த எதிர்ப்பாகி, அவளைப் பராமரித்தன என்றே சொல்லவேண்டும்.

தலைவி வருந்தினாள் என்றால், 'எதற்காக' என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டுமல்லவா? 'மீண்டும் தலைவன் வந்து சேரமாட்டானா' என்று தான் வருந்தினாள். அவள் அன்பு அப்பொழுதும் குறையவில்லை; மாசு படவில்லை. எப்பொழுதும்போல் மலரின் மணம் அந்தத் தூய அன்பில் பொருந்தி இருக்கத்தான் செய்தது. ஏன்? அவள் பெண் அல்லவா? அவனின்றி அவள் வாழ்வதெங்கே! அவளுடைய அணிகலன் கற்பல்லவா? கொண்டானைப் பேணுதல் அல்லவா அவளது குடியறம்!

சிலநாட்களில் அவளது குறை தீரும் தருணம் வாய்த்துவிட்டது. அவன்—அவளைப் பிரிந்து பரத்தையை நாடிச் சென்றவன்—மீண்டும் திரும்பி அவள் இல்லத்திற்கு—இல்லை அவன் இல்லத்திற்கு—வந்து சேர்ந்தான். தோழி தலைவியின் சார்பாக அவனை வரவேற்றாள். அவனைக் கூர்ந்து நோக்கினாள். அத்தனை நாட்களும் தலைவியின் மனத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த துயரத்தையெல்லாம் சில மணியான - அழுத்தமான - சொற்களால் சொல்லிவிட்டாள். அவன் அதைக்கேட்டு மிகவும் வருந்தி வெட்காமல் வேறென்ன செய்யமுடியும்!

அவள் சொன்னதென்ன?

"தலைவ! நீ தலைவிக்குக் கொடுமை செய்த போதிலும், நின்னைவிட்டு அமைந்திருப்பதென்பது

தலைவிக்கு இயலாமையால், அவள் உன்னை மீண்டும் பழைய அன்புடனே ஏற்றுக்கொள்ளுகிருள்........''

இவ்வார்த்தைகள் எவ்வளவு ஆணித்தரமாக அமைந்திருக்கின்றன! இவைகளைவிட வேறென்ன கூறமுடியும் அவளால்? ஆனுல், அவள் தகுந்த ஓர் உபமானத்தையும் கூறுகிருள்! அதில்தான் கவிதையின் பூரணப் பாகமும் உருவாகிறது! அத்துடன், தலைவியின் தகைமையும், தோழியின் அறிவும் அதில்தான் தத்ரூபமாக விளங்குகின்றன.

அவள் சொன்னுள்:

"உழவர் உழவுத் தொழிலை நன்கு முடிக்க விரும்பி, களை பறிக்கிருர்கள். வண்டுகள் தேன் உண்ணும்படி மலர்ந்த நெய்தல் பூக்களை அவற்றின் மணம் கீழே படும்படியாய், நீண்ட வரப்பிலே வாடிப் போகுமாறு பறித்துப் போடுகிருர்கள். "ஆ! இவ் வுழவர் கொடியர்! இந்த நிலத்தில் நாம் இனியும் தங்குதல் கூடாது; இதைவிட்டே - இவரைவிட்டே - நீங்கிவிடவேண்டும்!" என்றுதானே அப்பூக்கள் கருதவேண்டும்! ஆனுல் அவைகள் அப்படிக் கருதுவதில்லை. அவைகளுக்குப் பெருந்தன்மை உண்டு; பொறுமை உண்டு; அன்பு உண்டு! ஆகையினுல், மீண்டும் அந்நிலத்திலேயே பூக்கின்றன! மேலும், அவை உன் ஊரின் கண் உள்ள நெய்தல் பூக்கள் ஆகும்! அத்தன்மையை உடையவளே தலைவி! பூப்போன்ற சாயலுடன், பூப்போன்ற உள்ளமும் படைத்தவள் தலைவி!" என்று அவள் சொன்னதும், அவன் மிகவும் நாணினுன்.

இவ்வாறு கவினுர் தோழி கூற்ருகக் கூறிய இச்செய்யுளில், அவர் எடுத்துக்கொண்ட பூ நெய்தல் பூ; தலைவன் நிலத்துப் பூ. **'உன் ஊர்ப் பூக்களின் குணம் உடையவள் தலைவி'** என்பதில் எத்தகைய நயம் இருக்கிறது, பார்த்தீர்களா? மேலும் புலவர், 'களையைக் களைந்த இடத்திலேயே போடக்கூடாது' என்னும் உலகியலையும் நன்கு உணர்ந்திருப்பது தெரிகிறது. கேட்பவர் நன்கு தெளியும்படி உவமையைக் கூறும் பண்பு இவருக்கு இருப்பதனுல்தான் இவ்வாறு மிகவும் சுலபமாக ஓர் அரிய விஷயத்தைப் பூவின் தன்மையுடன் பிணைத்துக் கூறியிருக்கிருர். இவர் பெயர் **உறையூர்ச் சல்லியன் குமாரனுர்** என்பதாகும். உறையூரைச் சேர்ந்த புலவர்கள் பலர் உண்டு. ஒரு காலத்தில் உறையூர் கல்வியில் மேம்பட்டிருந்தது என்பதை இதனுல் நன்கு அறிய முடிகிறது.

இனி அச் செய்யுள் பின்வருமாறு :

கைவினை மாக்கள் தம்செய்வினை முடிமார்
சுரும்புண மலர்ந்த வாசம் கீழ்பட
நீடின வரம்பின் வாடிய விடினும்
கொடியரோ நிலம்பெயர்க் குறைவே மென்னுது
பெயர்த்தும் கடிந்த செறுவிற் பூக்கும்
நின்னூர் நெய்தல் அனையேம் பெரும
நீ யெமக் கின்னு தனபல செய்யினும்
நின்னின் றமைதல் வல்லா மாறே.

[முடிமார்-முடிப்பாராகி; சுரும்பு-வண்டு; வாடிய-வாடும்படி; செறுவில்-வயலில்; இன்னுதன பல-பரத்தையரோடு சென்று நீராடியது முதலிய கொடுமைகள்; வல்லாமாறு-வன்மையில்லாததால்.]

குறுந்தொகை—309.

''கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை யல்லால் அறியாக் குலமகள் போல்'' என்னும் அடிகள் மேற்கண்ட கருத்துக்கு மேற்கோளாகும். இது **பெருமாள் திருமொழி** ஆகும்.

உயர்ந்த கருத்துக்கும், அரிய நயத்துக்கும், தமிழர் பண்புக்கும் இம்மாதிரியான பல உதாரணங்கள் உள்ளன. இக் கட்டுரை பூவுடன் பூவையரை இணைத்து ஒரு நுண்கருத்தை வெளியிட்டது. பழந்தமிழ்ப் புலவர் அகப் பொருளில் ரஸம் படக் கையாண்ட பல செய்யுட்களையும் தமிழர் அறிதல் நலமாகும். அழகுக் கலை அவர்கள்தம் செய்யுளில் பூப்போல் மணம் வீசுகிறது என்பதை அனைவரும் அறிதல் வேண்டும்; அறிந்தவரே பூவின் மணத்தை அநுபவித்தவராவார். *

*

குயில்

அமரகவி பாரதியார்

✲

[குயில் கவிதையை விளக்கப் படங்களுடன் தமிழ் அன்பர்கள் முதல் இதழில் நன்கு ரஸித்தார்கள் என்பதற்கு அவர்கள் எழுதியுள்ள ஆர்வம் மிகுந்த கடிதங்கள் சாட்சி கூறுகின்றன. அவர்களுடைய பாராட்டுக்கள் அனைத்தும் அப்படியே அமரர் பாரதியாருக்குத்தான் உரித்தானவையே தவிர, நமக்கல்ல. அவர்தம் கற்பனை வளத்தினால் இத்தகைய சிறந்த சித்திரங்களை நாம் தயாரிக்கவும், கவிதையுடன் அச் சித்திரங்களையும் சேர்ந்து வாசகர்கள் அநுபவிக்கவும் வாய்ப்பு அளித்துச்சென்ற அந்த மகாகவிக்கு நமது பூரண நன்றிமட்டும் உரித்தாகிறது என்று கூறுவது பொருந்தும். இவ்விதழ் அட்டைச் சித்திரமும், கவியின் இப்பாட்டில் வரும் சம்பவத்தைச் சித்திரிக்கும் அற்புதமான காட்சியாகும்.]

"வெட்டிரண்டு வீழ்ந்தனகாண் வேந்தன் முதுகினிலே.
சட்டெனவே மன்னவனுந் தான்திரும்பி வாளுருவி
வீச்சிரண்டி லாங்கவரை வீழ்த்தினான்; வீழ்ந்தவர் தாம்
பேச்சிழந்தே யங்கு பிணமாக் கிடந்து விட்டார்.
மன்னவனுஞ் சோர்வெய்தி மண்மேல் விழுந்துவிட்டான்.
பின்னவனை நீயும் பெருந்துயர்கொண்டே மடியில்
வாரி யெடுத்துவைத்து வாய்புலம்பக் கண்ணிரண்டும்
மாரி பொழிய மனமழிந்து நிற்கையிலே,
கண்ணை விழித்துனது காவலனுங் கூறுகின்றான்:

"பெண்ணே, இனி நான் பிழைத்திடேன்;
சிலகணத்தே
ஆவி துறப்பேன், அழுதோர் பயனில்லை.
சாவிலே துன்பமில்லை, தையலே,
இன்னமும் நாம்
பூமியிலே தோன்றிடுவோம். பொன்னே,
நினைக்கண்டு
காமுறுவேன்; நின்னைக் கலந்தினிது
வாழ்ந்திடுவேன்;
இன்னும் பிறவியுண்டு. மாதரசே, இன்ப
முண்டு.
நின்னுடனே வாழ்வனினி நேரும் பிறப்
பினிலே,"
என்று சொல்லிக் கண்மூடி, இன்பமுறு
புன்னகைதான்
நின்று முகத்தே நிலவுதர, மாண்டனன்
காண்.
மாடனிங்கு செய்ததோர் மாயத்தால்
இப்பொழுது
பீடையுறு புள்வடிவம் பேதையுனக்
கெய்தியது.
வாழிநின்றன் மன்னவனுந் தொண்டை
வளநாட்டில்
ஆழிக் கரையி னருகேயோர் பட்டினத்தில்
மானிடனாத் தோன்றி வளருகின்றான்.
நின்னையொரு
கானிடத்தே காண்பான். கனிந்துநீ பாடு
நல்ல
பாட்டினைத்தான் கேட்பான். பழவினையின்
கட்டினால்
மீட்டு நின்மேற் காதல்கொள்வான்,
மென்குயிலே' என்றந்தத்
தென்பொதியை மாமுனிவர் செப்பினார்.
'சாமீ,
குயிலுருவங் கொண்டேன்யான்,
கோமானே மேன்மை
பயிலு மனிதவுருப் பற்றிநின்றான்.
எம்முள்ளே
காதலிசைந் தாலுங் கடி
மணந்தான் கூடாதாம்.
சாதற் பொழிலே தார்வேந்தன்
கூறிய சொல்
பொய்யாய் முடியாதோ'? என்
றிசைத்தேன். புன்னகையில்
ஐய ருரைப்பார்— 'அடிபேதாய்,
இப்பிறவி
தன்னிலு நீ விந்தகிரிச் சார்பினி
லோர் வேடனுக்குக்
கன்னியெனத் தான் பிறந்தாய்
கர்ம வசத்தினால்,
மாடன் குரங்க னிருவருமே
வன்பேயாக்
காடுமலை சுற்றி வருகையிலே கண்டு
கொண்டார்
நின்னையங்கே. இப்பிறப்பில் நீயும்
பழமைபோல்
மன்னனையே சேர்வையென்று தாஞ்சூழ்ந்து
மற்றவரும்
நின்னைக் குயிலாக்கி நீ செல்லுந் திக்கி
லெலாம்
நின்னுடனே சுற்றுகின்றார். நீயிதனைத்தேர்
கிலையோ?'
என்றார். 'விதியே! இறந்தவர்தாம்
வாழ்வாரை
நின்று துயருறுத்தல் நீதியோ?
பேய்களெனைப்
பேதைப் படுத்திப் பிறப்பை மறப்பிறுத்தி
வாதைப் படுத்தி வருமாயில், யானெனது
காதலனைக் காணுங்கால், காய்சினத்தா
லேதேனுந்
தீதிழைத்தா லென்செய்வேன்? தேவரே,
மற்றிதற்கோர்
மாற்றிலையோ?' என்று மறுகி நான்
கேட்கையிலே,
தேற்றமுறு மாமுனிவர் செப்புகின்றார்:—
'பெண் குயிலே
தொண்டைவளநாட்டிலோர் சோலையிலே
வேந்தன் மகன்
கண்டுனது பாட்டிற் கருத்திளகிக் காதல்
கொண்டு
நேச மிகுதியுற்று நிற்கையிலே,
பேயிரண்டும்
மோசமிகுந்த முழுமாயச் செய்கைபல

செய்துபல் பொய்த்தோற்றங் காட்டித்
திறல்வேந்தன்
ஐயமுறச் செய்துவிடும். ஆங்கவனு
நின்றனையே
வஞ்சகியென் றெண்ணி மதிமருண்டு
நின்மீது
வெஞ்சினந்தா னெய்திநினை விட்டுவிட
நிச்சயிப்பான்,
பிந்தி வினைவதெல்லாம் பின்னே நீ கண்டு
கொள்வாய்,
சந்தி ஜபம் செய்யுஞ் சமய மாய் விட்ட'
தென்றே

காற்றில் மறைந்து சென்றார் மாமுனிவர்.
காதலரே,
மாற்றியுரைக்கவில்லை. மாமுனிவர் சொன்ன
தெல்லாம்
அப்படியே சொல்லிவிட்டேன். ஐயா!
திருவுளத்தில்
எப்படி நீர் கொள்வீரோ? யானறியேன்.
ஆரியரே,
காத லருள் புரிவீர். காதலில்லை
யென்றிடிலோ,
சாத லருளித் தமது கையாற்
கொன்றிடுவீர்!"
என்று குயிலு மெனதுகையில் வீழ்ந்தது
காண்.
கொன்றுவிட மனந்தான் கொள்ளுமோ?
பெண்ணென்றால்
பேயு மிரங்காதோ? பேய்க ளிரக்கமின்றி
மாயமிழைத் தாலதனை மானிடனுங்
கொள்ளுவதோ?
காதலிலே ஐயங் கலந்தாலும் நிற்ப
துண்டோ?
மாதரன்பு கூறில் மனமிளகா
ரிங்குளரோ?
அன்புடனே யானும் அருங்குயிலைக் கைக்
கொண்டு
முன்புவைத்து நோக்கியபின் மூண்டுவரு
மின்பவெறி
கொண்டதனை முத்தமிட்டேன். கோகிலத்
தைக் காணவில்லை.
விண்டுரைக்க மாட்டாத விந்தையடா!
விந்தையடா!
ஆசைக் கடலின் அமுதடா!
அற்புதத்தின்
தேசமடா! பெண்மைதான் தெய்வீகமாங்
காட்சியடா!
பெண்ணொருத்தி யங்குநின்றாள்; பேருவகை
கொண்டுதான்
கண்டெடுக்கா தென்னைக்கணப்பொழுது
நோக்கினாள்;
சற்றே தலைகுனிந்தாள். சாமீ! இவ
ளழகை
எற்றே தமிழி லிசைத்திடுவேன்? கண்ணி
ரண்டும்
ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறு
வனோ?

மீள விழியில் மிதந்த கவிதையெல்லாம்
சொல்லி லகப்படுமோ? தூயசுடர் முத்தை
யொப்பாம்
பல்லிற் கனியிதழிற் பாய்ந்த நிலவினை
யான்
என்று மறத்தல் இயலுமோ?
பாரின்மிசை
நின்றதொரு மின் கொடிபோல் நேர்ந்த
மணிப் பெண்ணரசின்
மேனி நலத்தினையும் வெட்டினையுங்
கட்டினையும்
தேனி லினியாள் திருத்த நிலை
யினையும்
மற்றவர்க்குச் சொல்ல வசமாமோ? ஓர்
வார்த்தை,
கற்றவர்க்குச் சொல்வேன் கவிதைக்கனி
பிழிந்த
சாற்றினிலே, பண் கூத்தெனுமிவற்றின்
சாரமெலாம்
ஏற்றி, யதனோடே யின்னமுதைத் தான்
கலந்து,
காதல் வெயிலிலே காயவைத்த
கட்டியினால்
மாதவளின் மேனி வகுத்தான் பிரம
னென்பேன்.
பெண்ணவளைக் கண்டு பெருங்களிகொண்
டாங்ஙனே
நண்ணித் தழுவி நறுங்கள்
ளிதழினையே
முத்தமிட்டு முத்தமிட்டு
மோகப் பெருமயக்கில்
சித்த மயங்கிச் சிலபோழ்
திருந்த பின்னே,
பக்கத் திருந்தமணிப்
பாவையுடன்சோலையெலாம்
ஒக்க மறைந்திடலும்,
ஓஹோ! வெனக் கதறி
வீழ்ந்தேன், பிறகு விழி
திறந்து பார்க்கையிலே
சூழ்ந்திருக்கும் பண்டைச்
சுவடி, எழுதுகோல்
பத்திரிகைக் கூட்டம், பழம்
பாய்—வரிசையெல்லாம்—
ஒத்திருக்க 'நாம் வீட்டில் உள்ளோம்' என
உணர்ந்தேன்.
சோலை, குயில், காதல், சொன்ன கதை
யத்தனையும்,
மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி
யென்றே கண்டுகொண்டேன்.
ஆன்ற தமிழ்ப் புலவீர், கற்பனையே
யானாலும்,
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே யிடமிருந்தாற்
கூறிரோ?

[முற்றும்]

மேல் வானம் சிவந்திருந்தது; சுருள் சுருளாய் அணி வகுத்ததுபோல் வியாபித்துக் கிடந்த மேகப் படலங்கள் செவ்வரி படர்ந்து ஜோதி மயமாகத் திகழ்ந்தன.

கைலாசம் வானத்தைப் பார்த்து மலைத்து நின்றான். இயற்கையின் மாயாஜாலத்தை எண்ணியதும் தான் அவனுக்கு மலைப்புத் தட்டியது. சற்று முன் நீலம் பூத்து, சூரியனின் வெப்பத்தைத் தாங்கி அதைப் பூமியில் எதிரொலித்துக் கொண்டிருந்த மேலை வானம் அப்படித் திடீர் மாறுதல் அடைந்ததை அவனால் நம்பவே முடியவில்லை.

'வானம்கூட அழகு பெற்றுத் திகழ்கிறதே!' என்றெண்ணினான். அவன் கால்கள் நிலைபெயரவில்லை. அப்போது அவன் ஓர் ஏரிக்கரை மீது நடந்துவந்துகொண்டிருந்தான்; வீட்டை நோக்கிச் 'சர சர' வென்று யந்திரம்போல் நடந்து கொண்டிருந்த அவன் கால்கள், வானத்தின் எழிலில் அவன் மனம் லயித்தவுடன் 'டப்'பென்று நின்று விட்டன. இன்னும் இரண்டு பர்லாங்கு தூரம் ஏரிக்கரையை விட்டிறங்கிக் குறுக்குச் சாலையில் நடந்து அவன் வீடடைய வேண்டும். ஆனால், கவிஞனின் தோரணையில்—வெறி பிடித்தவன் பாவனையில்—அவன் வானத்தை முறைத்துப் பார்த்து நின்ற நிலையில் அவன் ஊர் மறந்து, வீடுமறந்து, வீட்டிலுள்ளோர் யாவரையும் மறந்து, தன்னையும் தன் உணர்வையும் மறந்த ஏகாந்த மனிதனாய்க் காணப்பட்டான்!

சலனமற்று, சித்திரத்தில் வரைந்து வைக்கப்பட்டதுபோல் ஏரியின் நீர்ப் பரப்பு 'கம்'மென்றிருந்தது. சில கணநேரத்தில் நெருப்புக்கோளமாய் மாறி 'ஜிவ்' வென்று ஒளி வீசிய வானம் அந்த ஏரி முழுமையையும் எந்த நிலையில் ஆக்கி விட்டிருந்தது! சாதாரண சமயங்களில் மாலை நேரத்தின் வெண் கதிர்களால் வெள்ளி நிறம் பெற்று ஜொலிக்கும் அதே நீர் நிலைதான் இன்று பிரமாத முறையில் ரசாயன மாறுதல் பெற்று, பொன்னிறம் வீசிப் பொலிந்தது. தங்கப் பாளங்கள் வெட்டி யெடுக்கத் தகுந்த சுரங்க தளம் போலக் காட்சி யளித்தது.

கைலாசம் உண்மையிலேயே உணர்விழந்தான்.

'வாழ்நாளில் இப்படிச் சந்தர்ப்பம் வாய்ப்பதே அரிது! இப்படி எத்தனை முறைகள் இந்த மாயா ஜாலம் காட்சிகள் தோன்றுகின்றனவோ; நான் எத்தனை முறைகள் இவைகளைப் பார்க்காமல் சந்தர்ப்பத்தை இழந்திருக்கிறேனே! இன்றைக்கு நன்கு வாய்த்துக்கொண்டது!.......' என்று நீளச் சிந்தித்துக் கொண் டிருந்தான் அவன்.

'குப்'பென்று அவன் கண்கள் பொங்கின. அகலத் திறந்த விழிகளிடையே செவ்வானத்தின் சாயை புகுந்தது. சற்றைக் கெல்லாம் அவன் முகத்திலும் அந்தச் சாயை! ரத்தச் செவேல் என்ற சிவப்பு நிறம்! ரத்தச் சோகை பரவி விட்டதா அவன் முகத்தில் 'திடுதிப்'பென்று?

திறந்த விழிகளினூடே கிளம்பிய தீர்க்கமான பார்வையில் அவன் எதிரே அண்மையில் வியாபித்திருந்த வெட்ட வெளியும், அதற்கும் அப்பால் ஏரியின் எல்லையற்ற நீர்ப்பரப்பின் முடிவு போன்ற நேர்க்கோடும் தெரிந்தன. அவன் பார்வை நிலைத் திருந்தது. மேலே வானத்தின் செக்கர் நிறம் முழுமையும் அவன் கண்களினால் கிரகிக்கப்படுவதுபோன்ற தோற்ற மளித்தன அவன் கண்கள். செவ்வரி படர்ந்த வானமும் மேகக் கூட்டங்களும் அவன் பார்வையால் அசைய வில்லை! ஒரு வேளை அவன் விழிகள் இழிந்து சென்று செவ்வானத்தின் மத்தியிலே சென்று இடம்பெற்றுவிடுமோ?........பின் ஏன் அவன் அப்படி வெறித்துப் பார்க்கிறான்?.... அவன் உடல் முழுவதுமே இப்போது சிவந்து விட்டது. கள்ளிப் பழத்தின் சாற்றைப் பூசிக்கொண்டு நின்ற மாதிரி இருந்தது, அவனுடைய பயங்கர செம்மைத் தோற்றம்! உடலுக்குள்ளே நரம்புகளினூடே ஓடும் ரத்தம் அவ்வளவும் வெளிப்பட்டு அவன் உடம்பின் வெளிப்புறத்திலே அருவிகளைப் பாதாதிகேசம் பாய்வதுபோல் தெரிந்தது.

அவன் சிலையாகி விட்டானா?

காட்சியில் கருத்தழிந்த அவன் பின்நடை போட்டு, கரையின் ஓரத்தை யடைந்தான். அவன் பின்னால் ஒரு வேப்பமரம்; மரத்தின் வேர் முட்டுக்கள் காலில் தட்டுப்பட, பின்பக்கம் மரமிருப்பதை உணர்ந்துகொண்டு அந்த நிலையிலேயே மரத்துடன் உராய்ந்தவாறே கீழே உட்கார்ந்தான். அவன் கண்கள் மூடவில்லை; பார்வை குலைய வில்லை; அவன் உடம்பின் மீதிருந்த செம்மை நிறமும் மாறவில்லை!

கைலாசம் கையிலிருந்த பொருள் ஒன்றைக் கீழே வைத்தான்; வைக்கும் நிலையில் நிதானமின்றி, செய்யும் காரியத்தின் உணர்வின்றிச் செய்ததில் அந்தப் பொருளும் தன் நிலை குலைந்தது; கவிழ்ந்தது. கவிழ்ந்த அதனினும் ஒரு திரவப் பொருள் கீழே தரையில் பாய்ந்து ஓடி, 'ஜிவ்' வென்று மண்ணில் ஐக்கிய மடைந்தது. அந்தப் பொருள் ஒரு மருந்துக் குப்பி; அந்தத் திரவப் பொருள் ஒரு மருந்து தான்!

கைலாசம் இதை உணரவில்லை. நில உலகின் நினைவில் அவன் அப்போது இருக்க வில்லை! அழகைப் பருகிய அவனையே அந்த அழகு பெற்ற செவ்வானம் அள்ளிப் பருகி, உறிஞ்சி, சக்கையென அவனை எறிந்து விட்ட நிலையில் அவன் சக்கை போலத்தான் மரத்தடியில் மயங்கிக் கிடந்தான்.

* * *

"வேதா!"

வேதத்தின் நினைவை அன்றும் மறக்க முடியவில்லை கைலாசத்தினால்.

"வேதா!"

இன்னொரு முறை இரைந்து கூவிற்று அவன் வாய். கூப்பிடு தூரத்தில் செல்வோரைத் திரும்பிப் பார்க்க அழைக்கும் தோரணையில், அவன் உடலும் கண்டமும் அதிர்ச்சியுறும் வகையில் அப்படி இரைந்து கூப்பிட்டான். அவன் என்ன, பைத்தியமா?

இல்லை. உண்மையில் பைத்தியமாயிருந்தால், அவன் நடவடிக்கையில் இத்தனை நிதானமும் எளிய தன்மையும் இருந்திருக்காது. கொதித்த அவன் உள்ளத்தைக் கை நகங்களால் கிழித்துக் கொண்டு ஒழிந்திருப்பான்; அவனுக்குப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இடமளித்து அவனைப் பராமரிப்பது என்பது முடியாத காரியமாகும். நல்ல வேளையாக அவன் பைத்தியமில்லை.

ஆனால் வேதத்தை அவனால் மறக்க முடியாது. உள்ளத்தினுள்ளே கணத்துக்கு ஒரு தடவை 'வேதா' என்று ஆயிரமாயிரம் தடவைகள் அழைத்துக் கொள்வான்; முடிவற்ற முறையில் ஏற்பட்ட இந்த நூதன சுபாவம் அவனையே கொஞ்சம் கொஞ்சமாக அரிக்க வாரம்பித்து விட்டது. அவன் உயிரே வேதத்தின் உருவாயும், அவன் விடும் மூச்சு ஒவ்வொன்றும் 'வேதா' என்ற குரலினால் வெளியேறுவ

தாயும் ஆகிவிட்டது. தன்னுள்ளே குரல் எழுப்பி, தன் காதுகளில் மட்டுமே கேட்கும் வகையில் இதுகாறும் அவன் வேதாவை அழைத்திருக் கிருன்; இன்றே அவனுக்கு ஏற்ற தொரு வாய்ப்பான சூழ் நிலை! அவனுடைய நெடு நாளைய ஆவல், தன் சக்தியை யெல்லாம் ஒன்று திரட்டித் தன்னுடைய தொண்டையே அத் துடன் அடைத்துப் போய்விடும் வகையில் குரல் எழுப்பி, சராசரங்கள் பூராவிலும் எதிரொலிக்கும் வகையில் 'வேதா!' என்று கூப்பிடவேண்டும் என்பதே! அதனுல்தான் இன்று கூப்பிட்டான். இன்னும் அதே முறையில் தொண்டை வறளக் கூப்பிட்டான்.

'வேதா!'

வேதத்தினிடமிருந்து பதில் கிடைக்காதென்று அவனுக்குத் தெரியும். தெரிந்தும், அவன் வேதத்தைக் கூப்பிட்டான்; அவள் உருவைக் காண விரும்பினுன்; அவளுடன் பேச விரும்பி னுன். எல்லாவற்றையும் விட அவன் மிகவும் முக்கியமென்று கருதிய காரணம் ஒன்றிருந்தது, வேதத்தைக் கூப்பிட்டதற்கு. அவளிடம் மன்னிப் புக் கோரவேண்டும்! தன்னை அவள் தெரிந்து கொள்ளச் செய்யவேண்டும்!

'வேதா!'

இப்படி வாழ்நாள் முழுவதும் வாய் ஓயாமல் கூப்பிட்டுக் கொண் டிருந்தால் அவள் வந்துவிட மாட்டாளா என்ற ஒரு ஆதங்கம்—சபலம் கூட! அவன் தொடர்ந்து கூப்பிட்டுக் கொண் டிருந் தான்!

அவனுடைய எண்ணப்படியே அவள் வருவதா யிருந்தால் அவள் அன்றைக்கே வந்திருக்க வேண்டியவள். அவன் இப்போது கூப்பிடுவ தெல்லாம் பொய் என்னும்படியாக அன்று அவ ளுடைய உயிர் பிரிந்து விட்ட செய்தியைக் கொண்டு வந்த கடிதத்தைப் பார்த்துவிட்டு, அவள் பெயரைச் சொல்லி அவன் அழைத்தது உண்டே! ஒய்ந்து போன தன் உடலில் சக்தி யைத் திணித்துக்கொண்டு விட்டதான பிரமை யுடன் மீண்டும் மீண்டும் அவன் அவள் பெயரைக் கூவிக் கதறினுன். பதினைந்து நிமிஷ நேர காலம் அவன் கதறிய கதறல் உண்மையில் அவன் இன்று விரும்பியதுபோல் அன்று சரா சரங்கள் பூராவிலும் எதிரொலித் திருக்கும். காற்றலைகள் அவன் பேரொலியைச் சுமந்து தாம் பரவும் இடங்களி லெல்லாம் அதைப் பரப்பியிருக் கும்! என்—பிரிந்து சென்ற வேதத்தின் உயிர் கூட அவள் உடலிலே வந்து ஒட்டிக்கொண்டு, அவளை அவன் கூப்பிட்டதற்கு 'ஏன்?' என்று கேட்டிருக்கும்! ஆனல் பிரிந்த அவளுடைய ஆன்மா மீண்டும் கைலாசத்தின் முன் விழிக்கத் துணியாது! வேதத்தின் உடலை மட்டுமில்லை; கைலாசத்தின் தொடர்பினின்றும் பிரிவதற்கு அதற்கு அத்தனை ஆர்வம்! அவனை லட்சியம் செய்யாது அது!

வேதத்திற்கு அவன் இழைத்த கொடுமை களுக்கு அவன் பிராயச்சித்தம் செய்துவிடத் தயாராயிருப்பினும் அவளுடைய ஆன்மா அதற்கு உடன்படாது! அத்தனை வெறுப்படைந்திருந் தது அது!

'வேதா! நீ அழகுள்ளவள்தான்! இந்த செவ்வானத்தின் சாட்சியாய்ச் சொல்கிறேன்! என்னை மன்னிக்கமாட்டாயா?'

கைலாசத்தின் மனம் கசிந்துருகிற்று. அவ னிருந்த நிலையில் செவ்வானம் நிறம் மாறிக் கொண்டிருந்ததைக் கூட அறியவில்லை. வானத் தின் மேல் கோடியில் அணி வகுத்தாற்போல் படிந்திருந்த மேகங்கள் உரு மாறின; நிறமும் மாறின. சில பஞ்சுப் பொதிகளெனத் தூய வெண்மை நிறம் பெற்றுவிட்டன; சில நீல நிறத்தை அடிப்பாகத்திலும மேலே இலேசான செவ்வர்ணத்தையும் கொண்டன. ஒரு மேகம் மட்டில் தனித்து நல்ல கருமை நிறம் கொண்டு தன் எல்லை விளிம்பில் வெள்ளிப் பூண்கள் கட்டியதுபோன்ற வெண்மை நிறமும் கொண்டிருந்தது. ஏரியின் நீர்ப்பரப்பும் பனிப் படலமாய் மாறிக் காட்சியளித்தது!

ஆனலும் கைலாசத்தின் மனக் கண்ணெதிரே இவற்றின் தோற்றங்கள் பழைய முறையில்தான் இருந்தன. அவன் மனம் பழமையினின்றும்—கடந்த காலத்தினின்றும்—விடுபட்டு கணப்பொழு துக் கொருவிதமாய் மாறிக்கொண்டிருக்கும் உல கத்திடம்தான் ஒட்டவேயில்லையே!

அவன் வேதத்தைத் தன் முன் கொண்டு வருவதில் ஈடுபட்டிருந்தான். அவளுடைய அழ கைப்பற்றிய பிரச்னை பெரும் பிரச்னை; அவன் வாழ்க்கையின் ஏடுகள் ஒவ்வொன்றினும் குறுக் குக் கோடுகள் இட்டுக்காட்டிய மகத்தான பிரச்னை! அதில் ஈடுபட்டுத்தான் சூழ்நிலை மாறிப் போயிருந்ததையும் உணராமல் உன்மத்தம் பிடித்தவனைப்போல் சிந்தித்துக் கொண்டிருந் தான்.

* * *

வேதம் அழகியல்ல என்பது வீட்டிலிருந்தோர்

அனைவரின் கட்சியாகும். கைலாசத்தின் வாழ்க்கையைப் பாழ்படுத்தவே அந்தப் பெண் அவனுக்குக் கழுத்தை நீட்டினுள் என்பது எல்லோரும் கொண்டிருந்த முடிவாகும்....

கைலாசம் - வேதம் இவர்களின் கல்யாணத்தின்போது அவர்களுக்கு முறையே பதினுறு - பத்து வயதுதான். குடும்பத்தில் பிரதான நிலை வகித்த பெரியவர்கள் ஒன்றுகூடி நிச்சயித்துக் கல்யாணத்தை நடத்திவிட்டனர். இந்தச் சம்பவம் கைலாசத்தையும் வேதத்தையும் தவிர மற்ற யாருக்கும் அவ்வளவாகப் பொருட்டான தாகத் தோன்றவில்லை. மிகவும் சர்வ சாதாரண மானதொரு சம்பவமாகவே கருதினர்........

கைலாசம் சென்னையில் படித்துக்கொண்டிருந்தான். வேதம் அவள் பெற்ருேரிடமே இருந்துவந்தாள்........

கைலாசத்துக்கு இருபது வயதாயிற்று. படிப்பு முடிந்துவிட்டது. நல்ல வேலை ஒன்றும் கிடைத்தது. சென்னையில் குடித்தனம் வைத்துவிடலாம் என்ற தீர்மானத்தில் தன் தாயாரையும் தன் சகோதரியையும் தன்னுடன் அழைத்துக் கொண்டான். சௌகரியமான வீடாகக் கிடைத்தது; நல்ல சம்பளம்; வாழ்க்கையை இன்பமாகத் தொடங்கினர்......

கைலாசத்தின் அத்தை ஒருத்தி அதுகாறும் பர்மாவிலிருந்துவிட்டு, 'திடுதிப்'பென்று ஒருநாள் இந்தியாவில் வந்து குதித்தாள். மருமகனையும் மற்றையோரையும் கண்டாள். அவனுக்குக் கல்யாணமான செய்தி திடீரென்று தெரிய வரவும் அவளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

"பெண் யாரடி, மீனு?" என்று ஆர்வம் பொங்கக் கேட்டாள்.

"உங்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன் அக்கா; நம்ம ஊரிலே ரெவினியூ இன்ஸ்பெக்டராயிருந்தாரே அவர் பெண்....."

"யாரு, வேதமா?"

"ஆமாம்!"

அத்தை இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டாள்.

"போயும் போயும் அதையா பிடித்தீர்கள்? பெண்ணு அது? பேயல்லவா? எனக்குத் தெரிந்திருந்தால் இந்தக் கல்யாணத்தை நடக்க விட்டிருக்கமாட்டேன்........"

அத்தையும் அவள் புருஷனும் பர்மாவில் அஞ்ஞாதவாசம் செய்தனர். அவர்களைப்பற்றிய விவரம் அதுவரை யாருக்கும் ஒன்றும் தெரியாது. ஜப்பான்காரன் பீதிக்குப் பயந்துகொண்டு கால்நடையாகக் கிளம்பிய அத்தையும் அவள் புருஷனும் கல்கத்தா வந்தடைந்தனர். கல்கத்தாவில் அத்தையின் புருஷன் இறந்துவிட்டார். கடிதமும் தந்தியும் அனுப்பி, கடைசியில் கைலாசமும் அவன் குடும்பத்தாரும் சென்னையில் இருப்பதறிந்து அங்கே வந்து சேர்ந்தாள் அத்தை. அவள் வந்த பிறகுதான் அவளைப் பற்றிய விவரங்கள் பூராவும் தெரியவந்தன.

"இனிமேல் என்ன செய்யறது அக்கா? நடந்தது நடந்துவிட்டது; இவனுக்கு அவள்தான் என்று தலையில் எழுதியிருக்கும்போது........"

"தலையிலாவது எழுதியிருக்கிறதாவது! நன்னாச் சொன்னே நீ, மீனு! வேறே பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிவைக்கிறது!"

அத்தையின் வாக்கு அபசகுனம் போல் பட்டது கைலாசத்துக்கும் அவன் தாயாருக்கும்

'ஐயோ! இதைக் காதுகொடுத்துக் கேட்டால் வேதத்தின் நிலை எப்படியிருக்கும்!' என்று ஒரு கணம் அவள் முகபாவத்தைக் கண்முன் கொணரப் பார்த்தான்; இயலவில்லை! கல்யாண சந்தடியில் ஓரிருமுறைகள் கண்ட முகம் எப்படி மனத்தில் நிலைத்துவிட முடியும்?

"அப்படியானால் அந்தப் பெண் என்ன ஆகிறது, அக்கா?" என்று கேட்டாள் கைலாசத்தின் தாயார்.

"தலையெழுத்துன்னு இப்பதானே சொன்னே! அதும் தலையெழுத்துப்படி ஆறது!" என்று தீர்க்கமாக மொழிந்தாள் அத்தை. இதைச் சொல்லும்போது அவள் முகத்தில் ஒரு உணர்ச்சியும் இல்லை. தானும் ஒரு ஸ்திரீதான் என்பதற்காகவாவது பெண் இனத்தின்மீது அந்த நிலையில் காட்டவேண்டிய அநுதாபத்தின் சாயை அவள் முகத்தில் துருவித் துருவிப் பார்த்தாலும் காணப் படவில்லை.

கைலாசத்தின் தாயார் இணங்கிவிட்டாள். "எற்கெனவே நான் நினைச்சதுதான் அக்கா! அழகில்லாவிட்டாலும், சனி, களையுடனாவது இருக்கக்கூடாதா? மூதேவிக் களைதான்!" என்று ஒத்துப்பாடும் நிலைக்கும் வந்துவிட்டாள்.

கைலாசத்தின் மனச் சாட்சி தலை நீட்டியது. பாவம், ஆண்மை படைத்திருந்தும், சர்வ உரிமைகளையும் அவன் கொண்டிருந்தும் அவனிடம் ஒரு பெருங்குறை இருந்தது. தன்னுள் தோன்றுவதை ஸ்தாபித்துப் பேசி எதிர்வாதம் புரிகிறவர்களைத் தன் கருத்துக்கிசைய வைக்கும் ஆற்றல் அவனிடம் இல்லை. அதற்குப் பதிலாகத் தன் மன நிலையைப் புரியவைத்துப் பேச முற்படும் இடங்களில், பேச்சினிடை, தன் மனநிலையை மாற்றிக் கொள்ளும் அளவுக்கு வந்துவிடுவான்.

அப்படி ஒரு கோழை அவன்!

மனச் சாட்சி வலியுறுத்துவதை ஒப்புக்கொண்டு வேதத்திற்காகப் பரிவு காட்டித் தன் தாயாரிடம் வாதம் புரிந்தான்—பலனில்லை!

'வேதா!' என்று முதன் முதலாக அவனுள்ளத்தில் அன்றே ஒரு ஒலி எழும்பிவிட்டது!

வேதம் அழகுள்ளவளா இல்லையா என்பதைப்பற்றி அவனும் சிந்திக்க வாரம்பித்துவிட்டான்: 'அவளிடம் அழகு இல்லையா? அல்லது இருந்தும் ஒருவேளை என் கண்களுக்கு அந்த அழகு புலப்படவில்லையா?'

அழகு என்று அவன் எதைக் கருதினான்? அழகு என்பதற்கும் மனைவி என்பதற்கும் அவசியம் தொடர்பு வேண்டும் என்பது எல்லோருடைய சித்தாந்தம் தான்! அழகில்லாதவரை யாரும் விரும்பமாட்டார்கள். கைலாசத்தின் அத்தையும், அம்மாவும், அவன் சகோதரியும் கூட அந்த சித்தாந்தத்தைக் கடைப்பிடித்ததில் அதிசய மொன்றுமில்லை.

ஆனால் கல்யாணம் நடக்கு முன் அழகைப் பற்றி ஆயிரம் தடவைகள் சிந்திக்கலாம்; ஒரு ஆணோ பெண்ணோ அழகுள்ள ஒரு பெண்ணையோ ஆணையோ மணப்பதொன்றையே லட்சியமாகக் கொண்டு விடலாம்; ஆனால் கல்யாணம் ஆன பிறகு அழகைப்பற்றிச் சிந்தித்தால்........?

ஒரு பிரச்னையைப்பற்றிக் கிளறி விட்டுவிட்டதால் தான் கைலாசம் இப்போது மனம் புழுங்கினான்.

அவன் மனத்தில் நிலைத்துக் கிடந்த ஒரே கேள்வி 'அவள் அழகுள்ளவளா, இல்லையா ?' என்ப தொன்றுதான்.

வேதத்தை அழைத்துக்கொண்டு வந்து கைலாசத்தின் வீட்டில் விட்டுச் சென்றார் அவள் தகப்பனார். வேதத்தின் தாயார் இதை ஆட்சேபித்தாள். ஆனால் அவள் தகப்பனார் ஒரே யடியாக, "பெண் உங்களுடையது; தொட்டுத் தாலி கட்டியவனுக்கு உரியவள் அவள்!" என்று, விவாதத்திற் கிடமில்லாமல், முடிவாகக் கூறி விட்டுச் சென்றார்........

கைலாசம் தன் ஆராய்ச்சியிலீடு பட்டான். வேதம் அழகுள்ளவளா இல்லையா என்று அவனால் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

'இதென்ன இது! வாழ்க்கை நடத்த இந்த முடிவு தெரிந்துதான் ஆகவேண்டுமா ? கட்டின வீட்டிற்குப் பழுது சொல்வது போல் அத்தையும் மற்றவர்களும், 'இவள் அழகில்லாதவள்' என் கின்றனர். எனக்கு ஒன்றுமே பிடிபடவில்லை ! அழகில்லா விட்டாலும் இவளுடன் வாழ்க்கை நடத்த முடியாதா?........' என்று சிந்தித்தான்.

அத்தை ஊரில் இல்லை; வீட்டிலுள்ளோர் மூவர்தாம். கைலாசம் இருப்பதும் இல் லாததும் ஒன்றுதான். அவன் தாயாரும் சகோதரியும் பொழுது முழுவதையும் வேதத் தைக் கண் காணிப்பதில் கழித்தனர். அவள் பேச்சுக்கொரு விமரிசனம் செய்தனர்; நடைக் கொரு கோணங்கி காட்டினர்; பரிகாச மயம் !

வேதம் பொறுமையின் அவதாரம்; குரூபி யல்ல; அதிக அழகுள்ளவளல்ல. பெண்மை யின் இனிமையான தன்மையை உணர்த்தும் அளவுக்கு அவளிடம் அழகு இருக்கத்தான் செய்தது. கைலாசத்தைப் புரிந்து கொள்ளும் லட்சியத்திலே அவள் தன்னை முழுவதும் ஈடு படுத்தியிருந்தாள். அவனோ ஒரு விசித்திரமான வியூகத்தில் தன்னை மாட்டி வைத்துக்கொண்டு பிறர் நோக்கிற்குப் பெரும் புதிராக விளங்கினான். ஆனால் வேதத்துடன் ஓரளவுக்குப் பழகிக் கொண்டு வந்தான். மூன்று மாதங்கள் சென்றன.

ஊரிலிருந்து அத்தை வந்தாள். பல வருஷங்களுக்குப் பின் முதன் முதலாக வேதத்தைக் கண்டாள். அவளுக்குத் 'திகீர்' என்றது. அவள் அபிப்பிராயத்தைத் தலை கீழாக்கும் வகையில் காட்சி யளித்தாள் வேதம்; அவளுடைய சிறு வயதில் அவளைப் பார்த்து விட்டு, 'அழகில்லாத வள்' என்ற தப்பபிப்பிராயம் கொண்டு விட்டது அத்தைக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் அதற்காகத் தன் அபிப்பிராயத்தை இப்போது மாற்றிக் கொள்ளவும் தயாராயில்லை அவள்.

"மீனா, என்ன இது?"

"அவள் தகப்பனார்தான் ஒரே பிடிவாதமாக இங்கே கொண்டு வந்து அவளைத் தள்ளிவிட்டுப் போய் விட்டார் !"

"கைலாசத்துக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணி யிருக்கிறேன், தெரியுமல்லவா ?"

"தெரியாது."

"அவளை ஊருக்குக் கூட்டி அனுப்பிவிடச்சொல், முதலில்."

கைலாசமே தான் அன்றிரவு வேதத்தை ரயி லேற்றி விட்டு வந்தான். அவளிடம் கல்யாணம் நிச்சயமாகி யிருந்த விஷயத்தை அவன் சொல்ல வில்லை. ஆனாலும் திடீரென்று தன்னை ஊருக்கு அனுப்பி வைக்கும் காரணமும் விளங்காது வேதம், அந்தப் பழைய காரணத்தையே கொண்டு, வெட்கத்தையும் மீறிக்கைலாசத்தினிடம் கேட்டாள் :

"நீங்கள் கூடவா என்னை அழகில்லாதவள் என்று சொல்கிறீர்கள் ?"

"இல்லை, வேதா !"

"பின் என் என்னை இப்போது ஊருக்கு அனுப்புகிறீர்கள் ?"—அவள் குரல் இழைந்து கேட்டது ; கொஞ்சலாகவும் இருந்தது. அதே சமயம் கைலாசத்தின் இதயத்தை அறுக்கவும் செய்தது. அவன் உள்ளத்தினுள்ளே மூட்டை போல் கிடந்த உண்மை மேலே உருண்டு தொண்டைவரை வந்து அடைத்துக்கொண்டு விட்டது.

அவன் ஒன்றுமே பதில் சொல்லாமல் ரயிலுக்கு எதிர்ப்புற மிருந்த புத்தகக் கடையை நோக்கிக் கொண்டிருந்தான்.

" என்னைத் தள்ளி வைத்து விடுவீர்களா ?"

எதிர்பாராதவிதமாக 'வீல்' என்று எஞ்சின் விகாரமாக நீண்டு ஒலித்தது. அந்த ஒலியிடையே அவள் கேள்வியும் அவளுடைய விம்மல் ஒலியும் சிதறிப்போயின. காதில் ஒன்றுமே விழாததாக இந்தச் சாக்கில் 'கம்'மென்றிருந்தான் கைலாசம்.

வண்டி நகர்ந்தது.

வேதம் போய் விட்டாள்.

கைலாசத்துக்கு அத்தையின் விருப்பப்படியே வேறு கல்யாணம் நடந்தது. ராஜேசுவரி வீட்டுக்கு வந்தாள்.

"எண்டா குழந்தை, நான் உனக்குக் கெடுதல் பண்ணி விட்டேனே என்னவோ ?"

" என் அத்தை அப்படிக் கேட்கிறாய் ?"

"இல்லே; வேறே கல்யாணம் பண்ணி வைத்ததைக் குறித்து நீ எப்படி எண்ணிக்கொண்டிருக்கிறாயோ!"

" நான் ஒரு மாதிரியும் எண்ணிக் கொள்ள வில்லே !"

இவனைவிட வேறு அப்பாவியைக் காண முடியாது. வேதத்தை மனமாறப் பிறந்தகத்துக்கு ரயிலேற்றி அனுப்பிவிட்டு வேறு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டது ஒரு புறமிருக்கட்டும் ; அவன் மனச்சாட்சி அவனைக் குத்திக் கொண்டிருப்பதையும் மறைத்து அத்தையிடம் வெள்ளை உள்ளத்துடன் பேசிய அவன் சுபாவத்தை என்ன சொல்வது ?

ராஜேசுவரியைப் பார்த்ததும் அவன் மனம் தடுமாறத்தான் செய்தது. வேதத்தைப்பற்றி வீட்டில் எல்லோரும் கொண்டிருந்த அபிப்பிராயத்தில் சிறிதுநேரம் தானும் பங்குகொண்டு அந்தச் சாக்கில் ராஜேசுவரியைக் கல்யாணம் செய்து கொள்ளலாமா என்று நினைத்துப் பார்த்தான். அவன் மனம் இடங்கொடுத்துவிட்டது. அவன் மனம் இடம்கொடாவிடினும், அத்தையும் அம்மாவும் அவனைச் சும்மா விட்டுவிடப் போகிறார்களா ? இதை ஒருவாறு முன்கூட்டியே எதிர்பார்த்து, தன் சுய கௌரவத்தை இழந்துவிடாமல் தானாகவே ஒப்புக்கொண்டுவிட்டான். கல்யாணம் நடந்துவிட்டது.

வேதம் கடிதத்தின்மேல் கடிதம் எழுதினாள். 'என்னை எப்போது அழைத்துக்கொள்ளப் போகிறீர்கள்?' என்று கேட்டு மீண்டும் மீண்டும் எழுதினாள்.

ஒவ்வொரு கடிதமும் ஒவ்வொரு சரம்போல் வந்து கைலாசத்தைத் துளைத்தது. ஒன்றுக்கும் பதில் எழுதத் துணியவில்லை அவன்.

எதிர்பாராவிதமாய்த் திடீரென்று ஒரு கடிதம் வேதத்திடமிருந்து வந்தது. அக்கடிதத்தைப் படித்ததும் அவன் மூளை குழம்பியே போய் விட்டது.

"என்னுடைய கடைசிக் கடிதம் இது:

"உங்களைப்போல் ஒரு கல் நெஞ்சம் படைத்தவர் இந்த உலகில் இருப்பதாக நான் சொல்ல மாட்டேன். என் கடிதங்களுள் ஒன்றுக்காவது பதில் இல்லே. தங்கள் நோக்கத்தை ஒருவாறு நானே தெரிந்து கொள்ள முற்பட்ட சமயம் உண்மையும் காற்று வாக்கில் வந்து விட்டது.

'தாங்கள் வேறு கல்யாணம் செய்து கொண்டு விட்டீர்களாம்! என்னைத் தள்ளி வைத்து வேறு கல்யாணம் செய்து கொண்டதன் உண்மையான காரணம்தான் என்ன ? உங்களை இதெல்லாம் எதற்காகக் கேட்கிறேன் ? நீங்கள் பதிலா எழுதப் போகிறீர்கள் ? இல்லே ; எழுதினால் தான் நான் இருந்து அதைப் படிக்கப் போகிறேனா ?

'இருக்கட்டும் ; போவதன் முன் ஒன்று அறிவுறுத்தி விட்டுப்போக எண்ணம். ஏனெனில், மணந்திருக்கும் அந்த மற்றப் பெண்ணையும் நீங்கள் மோசம் செய்ய முற்படலாமல்லவா ? அதற்காகத்தான். நீங்கள் 'நான் அழகில்லே' என்ற காரணத்துக்காக வேறு கல்யாணம் செய்து கொண்டீர்கள் என்றால் உங்களை நான் 'முட்டாள்' என்றே அழைக்கிறேன். உங்கள் அத்தையும், அம்மாவும், சகோதரியும் இந்த எண்ணத்துடன்தான் இருக்கிறார்கள். அவர்களை விட்டுத் தள்ளுங்கள்; படித்த உங்கள் அறிவில் இந்த விஷயம் ஏறவேண்டும். என்னிடம் அழகில்லே என்று நீங்கள் சொன்னால் நான் அதை ஒப்ப மாட்டேன் ; என் அழகைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் தங்களுக்கு இல்லே என்பேன். உங்கள் அத்தையையும் அம்மாவையும், " நீங்கள் எல்லாம் அழகுள்ளவர்களா ?" என்று ஒரு நொடியில் கேட்டுவிட முடியும் ; ஆனால் அப்படிக் கேட்பதை விடக் கேட்காமலிருப்பதுதான் விவேகம் என்று நான் அங்கிருந்த போதெல்லாம் பேசாதிருந்து விட்டேன்.

'வெளியழகை வாழ்க்கையுடன் பிணைப்பது அனர்த்தம் ; அதுவும் கல்யாணமானபின் அப்படிச் செய்வது மதியீனம். வாழ்க்கை மலர, குண விசேஷம் என்ற உள் அழகைத்தான் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள், பாவம், என்ன செய்வீர்கள் ? ஆற்றுடன் அடித்துக்கொண்டு போகப்படும் சருகு நீங்கள் ; உங்கள் அறிவு விளக்கைத் தூண்டுவதற்குப் பதில் அவித்து விட்டனர் உங்கள் குடும்பத்தினர்.

'நான் இப்படிக் கடுமையாக எழுதியதைப் பாராட்ட வேண்டாமென்று காலில் விழுந்து

கேட்டுக் கொள்கிறேன். சமூகத்தின் பிரதிநிதியாக—தங்கள் மனைவி என்ற ஸ்தானத்தைச் சற்று நேரம் துறந்து—தங்களுக்கு உண்மையை எழுதி விளாசவேண்டும் என்ற எண்ணத்தினுல் இப்படி எழுதினேன். தங்கள் பால் உள்ள அன்பில் சிறிதும் குறையாத நிலையுடன் என்றும் இருந்திருக்கிறேன்; தங்களுடன் வாழக் கொடுத்து வைக்கவில்லை என்பதற்காக நான் எல்லையை மீறிவிடவில்லை.

'நிற்க, நான் நிறை மாதக் கர்ப்பிணி என்பதைக் கேட்க நீங்கள் வியப்புறுவீர்கள். நான் அங்கிருந்தபோதே தங்களையும் மீறித் தாங்கள் என்பால் சிறிதே கொண்டிருந்த அன்பின் அடையாளம் தான் இது! ஆம்; வெளியழகை மோகிக்கும் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் வெளியழகு பொய்மையானது என்று உணரச் செய்ய இது நல்ல சான்றல்லவா?

'ஆயினும் மறு விவாகம் செய்து கொண்டு வாழும் உங்கள் அன்பை நான் மீண்டும் பெறுவது நிச்சயமில்லை; இந்த நிலையில் நான் பிள்ளை பெற்று, பிள்ளையுடன் இந்த உலகில் கஷ்டப்பட விரும்பவில்லை. என் பெயர் புநிதமாகவே நிலைத்திருக்கும் என்பது என்ன நிச்சயம்?......

'எனவே நான் போகிறேன்........

தங்கள் அடியாள்
வேதம்''

* * *

"வேதா!"

"வேதா!"

ஆறு வருஷங்களாய்க் கதறிய அதே குரல் தானே? சம சுருதியில் நிலைத்துக் கேட்கும் வகையில், பதிவு செய்யப்பட்ட இசைத்தட்டு அலறுவது போல அலறினுன்.

"வேதா!''

ஏரிக்கரையில் ஆழ்ந்த மௌனம் நிலவியிருந்தது. கையெழுத்து மறையும் நேரம். குளிர்ந்த காற்று மெல்ல வந்து அவனை ஆச்வாசப் படுத்தியது. ஏரியின் நீர்ப்பரப்பின் மேல் ஏதோ பிம்பம் தெரிந்தது. பின்னுல் செவ்வானம் இன்னும் அதே நிலையில் இருப்பதாக உணர்ந்தான் கைலாசம்.

இது என்ன? ஏரியின் நீர்ப் பரப்பின் மேல் வெட்ட வெளியைப் பின்னணியாகக் கொண்டு வேதத்தின் உருவம் எழும்பியது! ஏரியின் நடுப்பாகத்திலிருந்து மெல்ல நெருங்கிவந்து கைலாசத்தின் முன்னுல் நின்றது.

''வேதா!'' என்று மெதுவாக அழைத்தான் கைலாசம்.

"என்?" என்று கேட்டாள் வேதம்.

"நீ வந்துவிட்டாயா? இனிமேல் போய்விடமாட்டாயே!......"

"போகமாட்டேன்!"

"அப்படியானுல் சரி; என்னுடைய பாக்கியம் தான்! உலகத்தில் யாருக்குமே இந்த பாக்கியம் கிட்டாதென்று நினைக்கிறேன்; இறந்தவர்களை மீண்டும் அடைவதென்றுல் முடியுமா?.... அது

சரி; உன் கடிதத்தில் கண்டபடி நான் முட்டா ளல்ல, வேதம்!''

''நான் அப்படிக் குறிப்பிடவில்லையே! நீங்கள் தவருன முடிவுடன் இல்லாதவரையில் உங்களை யாரும் ஒன்றும் சொல்ல உரிமையில்லை!''

''அப்படிச் சொல்; இந்த செவ்வானத்தின் சாட்சியாய் நீ அழகிதான், வேதம்!''

''செவ்வானமா? எங்கே?....''

''சற்றுமுன் இருந்ததே, வேதம்! அதைக் கண்டு மோகித்துத்தான் நான் வழி நடந்தவன் இங்கே தங்கிவிட்டேன்!''

''உங்களுடைய பிரமை! வானம் ஒரே நிலை யில் எத்துணை நேரம் இருக்கும்! அப்போதே செம்மை மாறியிருக்கும்! சொல்லப்போனுல் இப் போது வானம் கறுத்துக்கொண்டு வருகிறது. இதிலிருந்தே உங்கள் இயல்பு புரிகிறதே! அழகை நி ர ந் த ர மா க் கி அநுபவிக்கிறவர்தானு நீங் கள்!....''

''இல்லை வேதம்!... நீ வீட்டுக்கு வரு கிருயா?''

''ஐயோ! உங்கள் ராஜேசுவரிக்குத் தெரிந் தால்?...''

''அவள் ஒன்றும் சொல்லமாட்டாள்....''

''அவள் சௌக்கியமாகத்தானே இருக்கிருள்?''

''ஐயோ! அதுதானே இல்லை....! அவளுக் குத் தீராத வியாதி—டி. பி.!''

''ஐயையோ! அவள் அழகு குலைந்திருப் பாளே!''

''வேதா, என் புண்பட்ட நெஞ்சில் ஊசியால் குத்துகிருய்! என் கண்கள் திறந்துகொண்டு விட்டன வேதம்! அழகு நிலையாமை; அதற்கு நான் அடிமைப்படவில்லை!''

ஆறு வருஷங்கள் அழகியான ராஜேசுவரி யுடன் வாழ்க்கை நடத்தியும் கைலாசத்தின் மனம் நிம்மதியடையவில்லை. அவள் வேதத்தை விட அழகி என்பது உண்மைதான் என்ருலும், அழகு அவளிடம் பூரணமாய்—சாசுவதமாய்— நிலைத்துவிடவில்லை. அவளை டி. பி. பற்றிக் கொண்டது. அவள் அழகு பறந்தது! வைத் தியர் ஆ லோ ச னை யி ன் ப டி அவளைச் சென்னையினின்றும் கிராமத்துக்குக் கூட்டிக் கொண்டு வந்திருந்தான்.

''போகலாமா?''

பதில் இல்லை.

''வேதா !........''

அவன் மூளை குழம்பியது. நடப்பெல்லாம் மறந்து விட்டன.

''ராஜேசுவரி !''

'வந்தது யார் ? வேதமா ? ராஜேசுவரியா ? யாரிடம் பேசிக் கொண்டிருந்தேன் ?'

கைலாசம் எழுந்தான். வீட்டை நோக்கி நடந் தான்.

வானம் குமுறிற்று. சற்றுமுன் வீசிய குளிர் காற்று பெருங்காற்ருய் மாறியது. பெருங்காற்று அவனைப் பிடரியைப் பிடித்துத் தள்ளியது.

காற்று ஓலமிட்டு அழுதது. 'உஸ்' ஸென்று காதினுள் நாராசம் போல் கேட்டது.

திடீரென்று சிறு தூறல்கள் ; ஓட்டமும் நடையு மாக, தலையைச் சுற்றி மேல் துணியைப் போட்டுக் கொண்டு ஓடி வந்தான்.

வீட்டுமுன் காலை வைத்தபோது அவன் இதயம் பிளப்பது போல் வீட்டுள்ளிருந்து அவன் தாயா ரின் பேரொலி கேட்டது.

''ஐயோ ! ராஜேசுவரி ! எங்கள் வாயில் மண் ணைப் போட்டையேடி !''

தட்டுத் தடுமாறிக் கொண்டு, திண்ணையில் உட் கார்ந்தான் கைலாசம்.

''வேதா ! ராஜேசுவரி!'' என்று முணு முணுத் தது அவன் வாய்.

சற்று முன் பார்த்த செவ்வானத்தின் தோற்றம் அவன் கண்முன் தெரிந்தது. செவ் வானம் பிளந்து கொண்டு ரத்த மழை பெய் கிறதாக உணர்ந்தான்.

உக்கிரமாகப் பெய்த மழைத்தாரைகள் எரிக் கரையில் கவிழ்ந்து கிடந்த மருந்துக் குப்பியைப் புரட்டித் தள்ளிக் கொண்டிருந்தன. குப்பியி லிருந்து கொட்டிப்போய், மண்ணில் ஐக்கியமாகி யிருந்த மருந்தையும் மழைத் தாரைகள் கரைத்து நீருடன் நீராய்ச் சேர்த்துக் கொண் டிருந்தன.

*

அச்சுக் கலை

✲ ஓர் அருங்கலையாக இந்தச் சகாப்தத்தில் மதிக்கப் பெறுவது அச்சுக் கலை. மனித வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் உறுதுணையாய் நின்று உதவுவதும் அச்சுக் கலைதான்!

✲ பல வகைகளிலும் அச்சு வேலைகளின் சாதனைகள் வியக்கத் தக்க முறையில் அமைந் துள்ளன. உயர்தரமான அச்சு வேலைகள் சுத்தமான முறையில் அமைந்து விட்டால், அவற்றின் மதிப்பும் அலாதியாகத்தான் இருக்கும்!

✲ இத்தகைய அச்சு வேலைகளுக்கு நமது ஸ்தாபனம் முதன்மை ஸ்தானம் வகிக்கின்றது. குறித்த காலத்தில் வேலைகளை முடித்து வழங்குவது எங்கள் முதல் லட்சியம்.

ராயல் பிரிண்டிங் ஒர்க்ஸ்

11-A, மவுண்ட்ரோடு, சென்னை - 2.

காதலி கடிதம்

ம. ப. பெரியசாமித்தூரன்

ஓர் இளநங்கை
அழகுக்கு அழகு செயும் அழகி
மதனனே மயங்கிவிழும் வனப்புடையாள்
சிற்றோடை யொன்றில்
  சேலை துவைத்திருந்தாள் :
கட்டழகன் காளை
  காவலனும் கண்ணுற்றான்
காதலித்தான்.
' மங்கையே உன்னை
  மணக்க மிக விழைகின்றேன் ;

சங்கையுற வேண்டா
தரணிக்கு நாயகன் நான்.
மேற்கொண்டு நான் செல்லும்
வினைமுடித்துக் கூப்பிடுவேன்
வரவேணும் 'என்றிரந்தான்:
பாவை உடன்பட்டாள்—
சென்றுவிட்டான் இளவேந்தன்.
காத்திருந்தாள் பெண்ணமுது
காதலினால்:—

மங்கைப் பருவம்போய்
வயோதிகமும் வந்ததன்றே;
மேனி சுருங்கிற்று;
முகமதியம் கலைமாறிச்
சாகும் பருவத்தைச்
சார்ந்துவிட்டாள் கற்பரசி.
'அண்ணலை நான் மற்றொருகால்
காண்பேனோ?
கண்டாலே பாக்கியமே'
என்றே அரசுறையும்
எழில் நகரம்தான் வந்தாள்:
மன்னவனைக் கண்டாள்
மற்றவன்தன் வார்த்தை சொன்னாள்,
'ஐயகோ அரசுப் பெரும்பாரம்
உள்ளத்தில் மலையாகி
உன்னை உளத்தாலும்
அறவே மறந்துவிட ஆக்கினதே!
மற்றோர் இளமாதை
மணம் புரிந்த காலத்தும்
உன்னை மறந்தேனே ஐயையோ!
பெண்மை அணிவிளக்கைப்
பெருந்துயரில் வைத்தேனே'
என்னத்துயர் உழந்தான்.
கன்னியும் சோர்ந்தாள்:
காதற் கடவுளுக்குக் காணிக்கையாகச்
சேர்ந்தாள்.

உதயச் சுடர்நாட்டில்
உற்ற அவலமிது:—
காதல் தனித்திருந்து
கண்மறைந்து வாடுவதை
இக்கதையிற் கண்டோம்
என்கதையும் இதுதானோ?

❊ ❊ ❊

அடுத்த இதழில்

தமிழ் நாட்டுக்கு அறிமுகமான எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியன வெளியாகின்றன.

அடுத்த இதழ்

மார்ச்சு மீ முதல் தேதி வெளியாகிறது

கதைகள்:

* லா. ச. ராமாமிருதம் — புற்று
* 'கேதாரி' — பிரம்மசாரி
* ரா. ஆறுமுகம் — பரிசு
* 'சுகி' — கோழை
* ஜி. எஸ். மணி — எதிரொலி
* 'விஜயபதி' — வாழ்க்கைச் சங்கிலி
* ஸ்ரீமதி குமாரி — தியாகச் சின்னம்

கட்டுரைகள்:

* 'கனல்' — ரஸ விளக்கம்
* மு. வரதராசன் — இன்பவாழ்வு
* 'சிட்டி' — பிசாசு இல்லை!

கவிதைகள்:

* பாரதியார் — பாஞ்சாலி சபதம்
* 'குஹன்' — துன்பத்தின் இன்பம்

நாடகம்:

* சி. வ. ரா. — காற்றினிலே வரும்கீதம்

பாலர் கதை

* 'கீரன்' — வஞ்சம் வெல்லுமா?

சினிமா விமரிசனம்:

ரத்னகுமார்

'பார்வதி' இதழ் ஒவ்வொன்றும் பாதுகாக்கப்படவேண்டிய பொக்கிஷமாகும்.

மந்திரபுரி என்ற நாட்டில் கடற்கரையோரத்தில் கருப்பன் சுப்பன் என்ற இரு செம்படவர்கள் சம்பாஷித்துககொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் நண்பர்கள்; இணை பிரியாமல் தொழிலிலும் மற்றக் காரியங்களிலும் ஒருமனப்பட்டுக் காரியங்கள் செய்பவர்கள்.

"என்ன அண்ணே இது! அதிசயமாயிருக்குது !'' என்று மூக்கின் மேல் விரலை வைத்துக் கேட்டான் கருப்பன்.

" அதிசயமில்லே கருப்பா ! ஆச்சரியம் ! அரமனைக்குள்ளே இருக்கிற நம் ராசகுமாரியை ஒருவன் ராவோடுராவாத் தூக்கிககிட்டுப் போறதுன்னு அது ஆச்சரியம்தானே ?'' என்று கூறினன் சுப்பன்.

"ஆமாம்; இந்தக் காவக்காரனுங்க, ராசாவோடே யானைப் படை, குதிரைப் படை, தேருப் படை எல்லாம் எங்கே போச்சுதாம்? ராச குமாரியை ஒருவன் தூக்கிக்கிட்டுப் போகும்போது இத்தனை பேரும் தூங்கிக்கிட்டா இருந்தாங்க?'' என்று அதிசய மிகுதியால் கேட்டான் கருப்பன்.

"சரியான கேள்விதான் கேட்டா

யப்பா! அந்தப் படைகள் எல்லாம் இந்த மாதிரிச் சமயங்களுக்கு இல்லேண்ணு உனக்குத் தெரியலேயே! ராஜா பவனி வரும்போது ஜோரா அவருக்கு முன்னுலே அலங்காரமாப் போறதுக்குத்தானே இந்தப் படைகளெல்லாம்!'' என்று சொல்லிச் சிரித்தான் சுப்பன். கருப்பனும் அவனுடன் சேர்ந்துகொண்டு சிரித்தான்.

திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவன் போலக் கேட்டான் கருப்பன்: "ஆமாம், அப்பா! அந்தப் பெண்ணுக்கு எத்தனை வயசு இருக்கும்?''

"ரொம்பச் சின்னப் பொண்ணு தானப்பா! பதினுறு வயசு ஆகுதாம்! ஆனு அதுக்குத் தெரியாத வித்தை கிடையாது! இந்த வயசிலே இவ்வளவு புத்தியும் வித்தையும் கத்திருக்கிறதனுலேதான் கடவுளுக்கே இது சகிக்கவில்லை போலிருக்கு! போகட்டும் அந்தப் பொண்ணை யாரு தூக்கிக்கிட்டுப் போயிருக்கிறதுண்ணு உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான் சுப்பன்.

"தெரியாதே! யாரு தூக்கிக்கிட்டுப் போனு? சொல்லு. சீக்கிரம்!'' என்று பதட்டத்துடன் கேட்டான் கருப்பன்.

"அட! இம்மாம் அவசரப்படுறியே? தெரிஞ்சா, ராசகுமாரியைப் போய்க் கொண்டாந்துடுவியா?'' என்று கேலியாகக் கேட்டான் சுப்பன்.

"அது வேறே பேச்சு! விசயத்தைத் தெரிஞ்சுக்கிலாமில்லே; அதுக்காவக் கேட்டேன்!'' என்று கருப்பன் சொன்ன பிறகு சுப்பன் ராஜகுமாரியை யார் கவர்ந்து சென்றது என்ற விவரத்தை நிதானமாகக் கூறினன். பூமிக்குள்ளே இருக்கின்ற ஒரு மந்திரவாதி இதேமாதிரி நல்ல பெண்களையெல்லாம் யாருமறியாமல் தூக்கிச் செல்வது வழக்கமென்றும், அவன்தான் மந்திரபுரி ராஜகுமாரியையும் தூக்கிச் சென்றிருக்கிறனென்றும் கூறினன்.

"நம்ம ராஜாவின் சேனை பூராவும் திரண்டு அந்த மந்திரவாதியை எதிர்த்து

அவனைக் கொன்று ராஜகுமாரியையும் மற்றப் பெண்களையும் மீட்டு வரக் கூடாதா, சுப்பா ?'' என்று கேட்டான் கருப்பன்.

''போடா, பைத்தியக்காரா! இந்த யோசனை உன் மூளையிலேதான் அபாரமா எட்டி விட்டதாக்கும்! ராஜாவுக்கு இது தெரியாதாக்கும்! அதெல்லாம் இல்லே வழி! மந்திரத்தை மந்திரத்தாலேயும் தந்திரத்தைத் தந்திரத்தாலேயும் வெல்ல வேணும் என்கிற மாதிரி அந்த மந்திரவாதியை இந்த வழிகளிலெல்லாம் தோற்கடிக்க முடியாதென்று தான், ராஜா வேறு உபாயத்தைக் கையாண்டிருக்கிறார். ராஜகுமாரியைக் கண்டுபிடித்து அரசாங்கத்தில் கொண்டுவந்து சேர்ப்பவர்களுக்கு ராஜகுமாரியைக் கலியாணம்செய்து கொடுப்பதுடன் தன் ராஜ்யத்தையும் கொடுக்கிறேன் என்று தண்டோராப் போட்டிருக்கிறார்!'' என்று விளக்கிக் கூறினான் சுப்பன்.

கருப்பன் எல்லாவற்றையும் நிதானமாகக் கேட்டுவிட்டு ஏதோ யோசனையிலாழ்ந்தான்.

''என்னப்பா, கருப்பா! சைத்தான் பிடிச்ச மாதிரி உக்காந்துப் பிட்டே! பொழப்பைக் கவனிக்க வேணுமா? இன்னிக்கிக் கடல் மேலே போவ வாணுமா ?'' என்று கேட்டான்.

திடீரென்றுசிந்தனையினின்றும் விடுபட்ட கருப்பன், ''ஓ! வருகிறேன். வீட்டுக்குப் போய் ஒருவாய் கஞ்சி ஊத்திக்கிட்டு வந்துடறேன்'' என்று சொல்லிவிட்டு அவசரமாக எழுந்து சென்றான். சுப்பனும் தன் வீட்டை நோக்கி நடந்தான்.

கருப்பனுக்குக் கஞ்சி ஊற்றிக் கொண்டே அவன் தாயார் கருப்பனிடம் கேட்டாள்: ''ஏண்டா மகனே, கேட்டியா அதிசயம் ?'' என்றாள்.

''என்ன ? என்று கேட்டான் கருப்பன்.

''நம்ம ராசா மகளை யாரோ தூக்கிக்கிட்டுப் போய்ட்டானாமே!''என்று அதிசயித்து மூக்கின்மேல் விரலை வைத்துக் கேட்டாள்.

''ஆமாம்! அதான் தெரிஞ்சிருக்குதே !....''

''அந்தப் பொண்ணைத் தேடித் தருகிறவங்களுக்கு அந்தப் பொண்ணைக் கல்யாணம் செஞ்சு கொடுத்து ராச்சியமும் தருவாராமே, நம்ம ராசா !''

''ஆமாம் !''

''நீ ராசகுமாரியைக் கொஞ்சம் தேடிப் பாரேன் !'' என்று சொன்னாள் கருப்பனின் தாய்.

''ராசகுமாரியைத் தேடிக்கிட்டிருந்தா பொழப்பு வாயிலே மண் உழுந்துடும் !'' என்று சொல்லிவிட்டுக் கையைக் கழுவிக்கொண்டு அவசரமாக வெளியே சென்று விட்டான் கருப்பன். தன் மகன் ராஜகுமாரியைக் கண்டுபிடித்தால் தன் மகனுக்கு அந்தப் பேரதிருஷ்டம் கிட்டுமே என்று எண்ணினாள் கருப்பனின் தாய்.

கருப்பனும் சுப்பனும் கட்டுமரத்தின் மீது ஏறிக்கொண்டு கடல்மீது சென்றனர். வெகு நேரத்திற்குப் பின்

வலையை இழுக்க வாரம்பித்தார்கள் அவர்கள். வலை இழுப்பதற்கு இலகுவில் வரவில்லை இருவரும் சேர்ந்து பிரயாசை யுடன் வலையை இழுத்தனர். வலைக்குள் ஒரு பெரிய மீன் அகப்பட்டிருப்பதைக் கண்டனர்.

"ஏ, அப்பா! எம்மாம் பெரிய மீனு! என்று அதிசயித்தான் சுப்பன்.

மீன் துள்ளிக் குதித்தது. அதன் தலையை அமுக்கிப் பிடித்தான் கருப்பன்! என்ன ஆச்சரியம்! மீனுக் குள்ளிருந்து திடீரென்று ஒரு மந்திர வாதி வெளிப்பட்டான்! கருப்பனும் சுப்பனும் பிரமித்துப் போனார்கள். கருப்பன், "ஐயையோ, என்ன இது! பிசாசு வந்திடிச்சே! மீனு பிசாசாப் போயிடிச்சே! அதிசயமீனுக வல்ல இருக்குது இது!" என்று கத்தினான்.

அவர்கள் முன் தோன்றிய உருவம் திடீரென்று ஒரு சுந்தர வடிவத்தில் மாறியது.

"நண்பர்களே! நான் ஒரு மந்திர வாதி! என் உயிரை எனக்குத் திரும்ப அளித்த தெய்வம் நீங்கள்! என் கதை யைச் சுருங்கச் சொல்கிறேன். நான் ஒரு முனிவரிடம் சாபம் பெற்றேன். அவர் மனைவியைத் தூக்கிச் செல்ல முயன்றபோதுதான் அவர் எனக்குச் சாபம் கொடுத்தார். மீனுக மாறிக் கடலில் கிடக்க வேண்டுமென்று சாப மிட்டார். சாப விமோசனம் கேட்ட போது, 'இரண்டு செம்படவர்கள் உன்னை அவர்கள் வலையினுள் இழுத் துத் தலையைப்பிடித்து அமுக்குவர். அப்போது நீ உன் சுயரூபத்தை அடைவாய்' என்றார். அதன்படி நான் என் சுயரூபத்தை இப்போது அடைந்து விட்டேன். இந்த உபகாரத்துக்குப் பிரதிபலனுக உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள்!" என்று கேட்டான் மந்திரவாதி.

"கேட்டதெல்லாம் தருவாயா?" என்று கேட்டான் கருப்பன்.

"ஓ! தாராளமாய்!"

"அப்படியானல் நாங்கள் நினைத்த இடத்திற்கெல்லாம் போகவேண்டும். உன்னுடைய மந்திரபலத்தினல் எங்க ளுக்கு அந்தச் சக்தியைக் கொடுக்க வேண்டும்!"

உடனே மந்திரவாதி ஒரு மோதிரத் தைக் கருப்பன் கையில் கொடுத்து, "இந்தா! இதை வைத்துக்கொண்டு நீ போகவேண்டிய இடங்களுக்கெல் லாம் போ!" என்று கூறிச் சென்றான்.

கருப்பனுக்குச் சந்தோஷம் தாங்க வில்லை. "சுப்பா! இந்த மோதிரத்தை வைத்துக்கொண்டு நாம் நம்ம ராசா வின் பெண்ணைத் தேடுவோம், வறியா?" என்று கேட்டான். சுப்பன் அதற்கு இணங்க வில்லை. மந்திரவாதியின் காரியத்தில் குறுக்கிட்டு ராஜகுமாரி யைத் தேடும் முயற்சியில் இறங்கினல் நம் உயிருக்கே ஆபத்து வரும் என்று கூறிச் சென்று விட்டான்.

ஆனல், கருப்பன் மிகவும் தைரிய சாலியாகையால் தான் மட்டும் எப்படி யாவது ராஜகுமாரியைத் தேடிக்கண்டு பிடித்து அவளை அரசனிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று தீர்மானித்தான். மோதிரத்தை விரலில் மாட்டிக்கொண்டு "ஏமோதிரமே என்னை எங்கள் ராஜ குமாரி இருக்குமிடம் கொண்டுபோ!" என்றான்.

அடுத்த நிமிஷம் அவன் ஒரு பாதாளக் குகைக்குள் இருந்தான். எதிரே மனிதர்களின் மண்டை ஓடுகளும் எலும்புத் துண்டுகளும் கிடந்தன. ஒரு இளம் பெண் தூக்குப் போட்டுக்கொண்டு இறக்க முயற்சி செய்துகொண்டிருந்தாள். கருப்பன் அவள் அருகில் சென்று, "பெண்ணே, நில்! நீ ஏன் சாகத்துணிந்தாய்? நான் உன்னைக் காப்பாற்றமுடியும்! என்னுடன் வா! இந்தக் குகையை விட்டு வெளியேறி விடலாம்!" என்றான்.

அந்தப் பெண் அவனிடம் கூறினாள்: "ஐயோ, பாவம்! நீ யாரப்பா? இந்தக் குகையின் அதிபனான மந்திரவாதியின் செய்தியை நீ அறியாய் போலும்! மந்திரவாதி என்னை எங்கள் அரண்மனையினின்றும் இங்குக்கொண்டு வந்து சிறை வைத்திருக்கிறான். இன்றுடன் எட்டு நாட்கள் ஆகின்றன. நானோ அவனிடம் அகப்பட்டுக்கொண்டு என் கற்பை இழப்பதைவிட இறந்து போவதே மேல்! என்னை நீ தடுக்காதே! அப்பால் சென்றுவிடு!" என்று உருக்கமாகக் கூறினாள்.

"நீ எந்த ராஜ்யத்துக்குரியவள், பெண்ணே?" என்று கேட்டான் கருப்பன்.

"மந்திரபுரி என்ற ராஜ்யத்தின் அரசகுமாரி நான்!" என்றாள் அப் பெண்.

"ஹா! எங்கள் நாட்டு ராஜகுமாரியா? நான் உன்னைத் தேடிக் கொண்டு தானே வந்தேன்! என்னுடன் கிளம்பு. என்னிடம் ஒரு மாய மோதிரம் உள்ளது. இங்கிருந்து நாம் வெளியேறி விடலாம்!" என்றான் கருப்பன்.

"ஐயா, உங்கள் உதவிக்கு வந்தனம் ஆனால் நீங்கள் நினைப்பது போல் இவ்விடம் விட்டு வெளியேறுவது அவ்வளவு சுலபம் இல்லை. இந்தக் குகையின் கதவுச் சாவி எங்கிருக்கிறது, உமக்குத் தெரியுமா?"

"எங்கே இருக்கிறது!"

"என்னைத் தூக்கி வந்த மந்திரவாதியினிடம் இருக்கிறது!"

"அப்படியா?" என்று கேட்டு விட்டுக் கருப்பன் தனக்கு மோதிரம் அளித்துச் சென்ற மந்திரவாதியை அவ்விடம் வரவேண்டுமென்று மனதுள் கோரினான். உடனே மறுகணம் மந்திரவாதி அந்த இடத்தில் பிரசன்னமானான்.

"ஐயோ! இவன்தான் என்னை இங்கே தூக்கி வந்தவன். இவனை ஏன் கூப்பிட்டாய்?" என்று பதறினாள் ராஜகுமாரி.

"கருப்பா! என்ன வேண்டும்?" என்று வினவினான் மந்திரவாதி.

"ஐயா! இந்தக் குகைக்கதவின் சாவி வேண்டும்! இப்பெண்ணை விடுதலை செய்யவேண்டும்!" என்று சொன்னான் கருப்பன்.

மந்திரவாதியும் அவ்வாறே மந்திரபுரி அரசகுமாரியையும், மற்றும் தான் சிறைப்பிடித்து வைத்திருந்த மற்றப் பெண்களையும் அக்கணமே விடுதலை செய்தான். மந்திரவாதி நற்புத்தி பெற்றதை நினைந்து ராஜகுமாரியும் கருப்பனும் வியந்தார்கள்.

கருப்பன் ராஜகுமாரியை அரசன் வசம் கொண்டு போய்ச் சேர்த்தான். தன் புதல்வியைக் கண்ட அரசன் மிக்க மகிழ்ச்சியுடன் கருப்பனைத் தன் சபையில் பகிரங்கமாகப் பாராட்டினான். சபையோர் அவன் விடாமுயற்சியை எண்ணி அதிசயமுற்றனர்.

தான் முன்பே அறிவித்திருந்தபடித் தம் குமாரியை மணந்து கொண்டு ராஜ்யத்தின் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளும்படி கருப்பனை வேண்டினான் அரசன். ஆனால் கருப்பன் அந்த இரண்டு காரியங்களுக்கும் தான் துளிக் கூட லாயக்கற்றவன் என்றும், அரசனின் பரிபூரண அன்பிற்குப் பாத்திரமானதே தனக்குப் பூரண திருப்தியை அளித்ததென்றும் கூறி, அரசனின் கோரிக்கைக்கு மறுத்துவிட்டான். அவனுடைய தன்னடக்கத்தையும் எளிய குணத்தையும் கண்டு அரசனும் சபையோரும் அவனை மிகமிகப் போற்றினர்.

தண்டனை

விவேகம் மறந்த நிலையில், 'எளியாரை வலியார் வாட்டினுல் வலியாரைத் தெய்வம் வாட்டும்' என்ற நடைமுறை மொழியும் மறந்துவிடுகிறது. புரிந்த கொடுமைக்குப் பலனுய்க் கிடைத்த் தண்டனை 'முதுமொழி பொய்யாமை'என்பதை உணர்த்துகிறது.

"ஏய்! உண்மையைச் சொல்லிவிடு!...... எங்கே வச்சிருக்கே அதை?...." என்று கேட்டான் ரங்கராஜன் மூன்ரும் முறையாக.

"ஐயோ! நான் பாக்கவே இல்லே சாமி!.." என்ற பதில்தான் வேதாசலத்தின் வாயிலிருந்து வெளிவந்தது.

இதற்குமேல் ரங்கராஜனுக்குக் கோபம் தாளவில்லே. உள்ளே சென்று ஒரு கம்பைக் கையில் எடுத்துக்கொண்டு வந்தான்.

"திருட்டுக் காரியம் செஞ்சதுமில்லாம பொய் வேறே சொல்றயா..?" என்று அதட்டிக் கொண்டே மோட்டாருக்குப் பக்கத்தில், கையில் ஒரு நீல நிற அழுக்குத் துணியுடன் நின்றுகொண்டிருந்த வேதாசலத்தை நெருங்கினுன்.

கையில் குச்சியுடன், கண்கள் கோவைப் பழம் போல் சிவக்கத் தன்னை நோக்கி வந்துகொண்டிருந்த ரங்கராஜனைக் கண்டதும் வேதாசலம் நடு நடுங்கிவிட்டான்.

வேதாசலத்தை நெருங்கிய ரங்கராஜன் கையிலிருந்த குச்சியால் அவனைச் 'சுளீர் சுளீ'ரென்று நான்கு ஐந்து அடிகள் வைத்துவிட்டான். வேதாசலத்தால் அந்த அடிகளைத் தாங்கமுடியவில்லே.

"ஐயோ! சாமி! நான் உண்மையைச் சொல்றேன். என்னை அடிக்காதேங்கோ சாமி! அது எங்கே போச்சுன்னு எனக்குத் தெரியாது சாமி.... ஐயோ! ஐயோ!" என்று அலறினுன். ஆனுல் ரங்கராஜன் விடவில்லே.

"குழந்தை கையிலிருந்தது எங்கேடா போயிடும்? நீதானேடா அதன் பக்கத்திலே உட்கார்ந்திருந்தே! எங்கே ஒளிச்சு வச்சிருக்கே, சொல்..." என்று மறுபடியும் இரண்டடி அடித்தான். வேதாசலத்தின் கண்களிலிருந்து கண்ணீர் 'மளமள'வென்று பெருகிக்கொண் டிருந்தது. ரங்கராஜன்குச்சியால் பலமாக அடித்ததால் அவன் உடம்பில் பல இடங்களில் அப்படியே வீங்கி விட்டது. தேகம் தலேமுதல் கால்வரை நடுங்கிக் கொண்டிருந்தது. அவன் மெள்ளக் கூறினுன்.

"நான் படிக்கட்டிலே உட்கார்ந்திருக்கச்சொல்ல, குழந்தை கையிலே வச்சுக்கிட்டிருந்தது. நீங்க என்னைக் கூப்பிட்டு, மோட்டார் டிரைவர்கூடக் கொஞ்சம் வேலே செய்யிண்ணு சொன்னீங்க. நான் அப்படியே எழுந்து வந்துட்டேனுங்க" என்று தேம்பித் தேம்பி அழுதுகொண்டே கூறினுன் வேதாசலம். ஆனுல் அந்தப் பதில் ரங்கராஜனுக்குச் சமாதானமளித்ததாகத் தெரியவில்லே. நிச்சயமாக அவனுக்கு வேதாசலத்தின் மேல்தான் சந்தேகம். ஆகவே வேதாசலத்தினிடமிருந்து உண்மையை வரவழைப்பதற்காக அவன் மறுபடியும், "இப்பவாவது உண்மையைச் சொல்லிவிடு...." என்று அதட்டிக் கொண்டே குச்சியை ஓங்கினுன்.

அதே சமயத்தில் கையில் ஒரு பையில் கறிகாயுடன் 'கேட்'டைத் தாண்டிக்கொண்டு உள்ளே நுழைந்தாள் பாஞ்சாலி. கண்களிலிருந்து கண்ணீர் பெருக, உடம்பெல்லாம் அடிபட்ட தழும்புடன் 'எஜமானர்' முன் நின்றுகொண்டிருந்த தன் மகனைக் கண்டதும், அவளுடைய பெற்ற வயிறு 'பகீ'ரென்றது. விஷயத்தை முழுதும் யூகித்துக்கொள்ள முடியாவிடினும், 'எஜமானர்' அசாத்தியக் கோபத்துடன் வேதாசலத்தை அடித்திருக்கிருர் என்பது மாத்திரம் அவளுக்குச் சட்டென்று புரிந்துவிட்டது. அவ்வளவு அடிபடும்படி அவன் என்ன குற்றத்தைச் செய்துவிட்டான் என்பதுதான் அவளுக்கு விளங்கவில்லே.

மறுபடியும் ஒரு தடவை தன் மகனை உற்று நோக்கினுள் அவள். அவனுடைய பரிதாபகரமான தோற்றத்தைக் கண்டதும் தாயுள்ளம் துடித்தது. எங்கிருந்தோ அவளுக்கு அசாத்தியமான தைரியம் வந்துவிட்டது.

இரண்டே எட்டில் தாவி வேதாசலத்தண்டை சென்ருள். அம்மாவைக் கண்டதும் அவன் அப்படியே அவளிடம் ஓடி வந்து அவளைக் கட்டிக் கொண்டான். இதை யெல்லாம் பார்த்துக் கொண்டே இருந்த ரங்கராஜன், "அம்மாகிட்டே போய் அவளைக் கட்டிண்டுட்டா உன்னை விட்டுடுவேனு.... அதைத் திருப்பிக் கொடுக்காத போனு, இப்பவே 'போன்லே' கூப்பிட்டு, போலீசுக்குத் தகவல் சொல்லி விடுவேன்..............." என்று உறுமினுன். தன் மகனின் தேகத்தைத்

எழுதியவர்: எஸ். டி. ஸ்ரீநிவாஸன்

தடவினுள் பாஞ்சாலி. அருகில் வந்தபிறகுதான் ரங்கராஜண எவ்வளவு முரட்டுத்தனமாகத் தன் மகனை அடித்திருக்கிறுன் என்பது அவளுக்குப் புரிநதது. என்னதான் குற்றம் செய்திருந்தா லும் இப்படியா அடிப்பார்கள் என்று வருந்தியது அவள் மனம்.

அரை மணி நேரத்திற்குமுன்தான் அவள் மார்க்கெட்டுக்குச் சென்ருள். அப்போது வேதா சலம், எஜமானரின் குழந்தை—ராஜுவை-வைத் துக் கொண்டு தோட்டத்தில் உட்கார்ந்து விளே யாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான். தான் திரும்பி வருவதற்குள் 'ரத்தக்களரி ரணக்களரி' யாகத் தன் மகன் அடிபட்டுக்கொண்டு நிற்பதைக் காண அவள் வயிறு கலங்கியது.

"என்ன, அநியாயமா இருக்குதே சாமி! கொழந்தையை இப்படியா போட்டுக் கொல்லு வாங்க ? இப்படி அடிபடும்படியா அவன் என்ன குத்தம் செஞ்சுட்டான சாமி! ....உடம்பெல்லாம் 'தத்து தத்தா' எழும்பிப்போய் இருக்குதே!.." என்று சொல்லிக் கொண்டே தன் புடைவைத் தலைப்பால் அவன் கண்களிலிருந்து பெருகிய நீரைத் துடைத்தாள்.

"என்ன செஞ்சுட்டானு ? மணியான பிள்ளை யைப் பெத்துட்டயே, அவனுக்குச் சிபார்சு பண்ண வந்துட்டாயோ ?....இந்த வயசிலேயே இந்தக் காரியம் பண்றவன்...." என்று அவன் முடிப்பதற் குள் எஜமானியம்மாள் – கீதா—அங்கே வந்தாள்.

"அவர் குளிக்கப் போறதுக்கு முன்னே மணி பர்ஸிலேயிருந்து நோட்டுக்களை யெல்லாம் எண்ணி மேஜைமேலே வச்சார்! அப்பொ குழந்தை ராஜா அழுது பிடிவாதம் பண்ணி ஒரு அஞ்சு ரூபா நோட்டைக் கையிலே வாங்கிண்டு வாசலிலே வந்துது. அப்புறம் வாங்கிக்லாம்னு 'அவர்' குளிக்கப் போயிட்டார். வேதாசலம்தான் குழந்தையோடு உட்கார்ந்திருந்தான். அவர் ஸ்நானமெல்லாம் பண்ணிட்டு ஒரு பதினைஞ்சு நிமி ஷம் கழிச்சு வந்து பார்த்தா, குழந்தை ஹாலிலே பொம்மையை வச்சிண்டு விளையாடிண்டிருக்கு; வேதாசலம் இங்கே மோட்டார் ஷெட்டிலே இருக் கான். குழந்தை கையிலே இருந்த நோட்டு, வேதாசலம் அறியாமெ எங்கடீ போயிடும் ?..." என்று 'மட மட' வென்று அடுக்கிக் கொண்டே போனுள் கீதா.

பாஞ்சாலிக்கு விஷயம் ஒருவாறு விளங்கியது. ஆனுல் வேதாசலம் குழந்தையிடம் இருந்து நோட்டைப் பிடுங்கிக் கொண்டிருக்கமாட்டான் என்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். ஆகவே அவள் தைரியமாக, "நாங்க ஏழைங்க தாம்மா; ஆனுலும் எங்க வேதாசலம் திருடறது, பொய் சொல்றது இநத மாதிரிக் காரியங்களுக் கெல்லாம் போகமாட்டான். நிச்சயமாக அவன் எடுத்திருக்கமாட்டான். அநியாயமா அவன் மேலே பழியைப் போடாதேயுங்க, அம்மா—" என்று சொல்லிக் கொண்டே, வேதாசலத்தின் முகத்தை ஒரு தடவை குனிந்து பார்த்தாள். அவன் விக்கலும் அழுகையும் இன்னும் ஓய்ந்த பாடில்லே.

கீதாவுக்கும் ரங்கராஜனுக்கும் பாஞ்சாலி சொன்ன வார்த்தைகளைக்கேட்டதும் பிரமாதமான கோபம் வந்துவிட்டது. கீதா பாஞ்சாலியை விறைப் பாகப் பார்த்துவிட்டு, "நீ மனசிலே என்னடி நெனைச்சிண்டிருக்கே ? அரிச்சந்திரன் போகும் போது உன் பிள்ளையைத்தான் அவனுக்கு வார் சாக உன்னிடம் விட்டுவிட்டுப்போனுனே' .. வேலைக் காரிக்கு வாயைப் பாரு.... அவனைத் தவிர அதை யாரும் எடுக்கலே....மரியாதையா கொடுத்துடச் சொல்லு...." என்ருள்.

பாஞ்சாலிக்கும் மிதமிஞ்சிய கோபம் வந்தது. "ஏழைங்கமேலே எந்தப் பழியைப் போட்டாலும் ஏத்துக்குவாங்கன்னு நினைக்காதீங்க அம்மா; அவன் நிச்சயமா அதை எடுத்திருக்கமாட்டான்.. அப்படித்தான் உங்களுக்கு அவன்மேலேசநதேகம் இருந்தா, நான் வந்தப்புறம் எங்கிட்டே சொல்லி, என் சம்பளத்திலே பிடிக்கிறதுதானே? அதுக்காக இப்படியா குழந்தையை அடிச்சுக் கொல்லுவாங்க? இந்த வீட்டிலேதான் இதுமாதிரி அநியாயமெல் லாம் நடக்குது!" என்ருள் கடுமையாகவே.

கீதா விடுவதாகக் காணேம்.

"ஆமாம்! இப்போ இதைப் பார்த்ததனுலே போச்சு; நாங்க பார்ககாமெ இருக்கச்சே இது மாதிரி இன்னும் என்னென்ன போயிருக்குதோ, யார் கண்டா ?" என்று சொல்லிக்கொண்டே தன் கணவனைப் பார்த்து, "இந்த தரித்திரங் கள் நம்ம வீட்டிலே வேலைக்கு வேண்டாம். இன்னியோடு சம்பளத்தைக் கணக்குப் பண்ணிக் கொடுத்துடுங்கோ" என்று உத்தரவு போட்டு விட்டு, பாஞ்சாலியின் கையிலிருந்த பையை 'வெடுக்'கென்று பிடுங்கிக் கொண்டு உள்ளே சென்றுவிட்டாள்.

"இன்னிவரை உனக்குச் சம்பளம் அஞ்சு ரூபா கணக்காச்சு....அவன் அஞ்சு ரூபா எடுத்ததுக்கு அது சரியாய்ப் போச்சு....நீ வீட்டுக்குப் போக

லாம்....இனிமேல் நீ வேலைக்கு வேண்டாம்....” என்று கூறிக்கொண்டே தன் கையில் வைத்திருந்த குச்சியைக் கீழே போட்டுவிட்டு ஷெட்டைவிட்டு வெளியே கிளம்பினான் ரங்கராஜன்.

வேலைபோனதுகூடப் பாஞ்சாலிக்கு வருத்தமாகத் தோன்றவில்லை. தன் மகன்மேல் திருட்டுக் குற்றம் சாட்டிவிட்டார்களே என்றுதான் அவள் மனம் தவித்தது. ஆகவே கடைசித் தடவையாக அவள் “சாமி! நீங்க அஞ்சு ரூபா பிடிச்சுக்கிறதா யிருந்தா பிடிச்சுக்குங்கோ! ஆனா என் மவன் திருடினான்னு அவன் மேலே பழி போடாதிங்க! சாபம் பொல்லாது......” என்றாள். ஆனால் அவள் வார்த்தை ரங்கராஜனின் காதுகளில் விழுந்ததாகத் தோன்றவில்லை.

ஒன்றிரண்டு நிமிஷ நேரம் பாஞ்சாலி திக்பிரமை பிடித்தவள்போல் சற்றுநேரம் அங்கேயே நின்றாள். இதற்குள் வேதாசலம் சிறிது அழுகையை நிறுத்திவிட்டு, “அம்மா! உடம்பெல்லாம் ஒரே வலியா வலிக்குது....வா! வூட்டுக்குப் போவலாம்....” என்றான். வேதாசலத்தின் கால்கள் ‘வெடவெட’ வென்று நடுங்கிக் கொண்டிருந்தன. பாஞ்சாலி ஒரு பெருமூச்சுவிட்டுக்கொண்டே அவனை அழைத்துக் கொண்டு மெதுவாகப் பங்களாவைவிட்டு வெளியே நடந்தாள்.

கேட்டைத் தாண்டும்போது ஒருமுறை பங்களாவைத் திரும்பிப்பார்த்தாள். மாடியில் கீதா ராஜுவைக் கையில் வைத்துக்கொண்டு கொஞ்சிக் கொண்டிருப்பதைக் கண்ட பாஞ்சாலியின் வாய் ஏதோ முணுமுணுத்தது.

2

பாஞ்சாலியின் துன்பகரமான வாழ்க்கையில் உயிர்நாடியாக விளங்கியவன் வேதாசலம். அவனைப் பாஞ்சாலி கருவுற்றிருந்தபோதே பாஞ்சாலியின் கணவன் இரண்டாவது யுத்த ஆரம்ப காலத்தில் ராணுவத்தில் சேர்ந்தான். ராணுவத்தில் நிறையப் பணம் சம்பாதித்தான். மாதாமாதம் பாஞ்சாலிக்குப் பணமும் அனுப்பிக் கடிதங்களும் எழுதிக் கொண்டிருந்தான். வேதாசலம் பிறந்தபின்னர் மகிழ்ச்சியுடன் கடிதம் எழுதினாள் பாஞ்சாலி. மகனைக் காண்பதற்கான அடுத்த சந்தர்ப்பத்தைக் கண்குத்திப் பாம்பு போல் எதிர்பார்த்திருந்தான். ஆனால் தெய்வம் செய்த சதி அவனை, பாஞ்சாலி—வேதாசலம் இருவரிடமிருதும் நிரந்தரமாகப் பிரித்து, போர் முனையில் உயிரையும் துறக்கச் செய்துவிட்டது.

தன் வாழ்க்கைச்சூரியன் அஸ்தமித்துவிட்டதையறிந்த பாஞ்சாலி அழுதாள்; அலறினாள்; புழுப்போல் துடித்தாள். இப்பயங்கர உலகில் கதி

அற்றவளாய் ஆகிவிட்டதை எண்ணி எண்ணி மனம் புழுங்கினாள்.

இளவயதில், கணவனை இழந்து, கைக் குழந்தையுடன், இப் பரந்த உலகில் தன் சோக வாழ்க்கையை ஆரம்பித்தாள் பாஞ்சாலி. காலம் கொஞ்சம் கொஞ்சமாக அவள் மனப் புண்ணை ஆற்றி வந்தது. வளர்ந்து கொண்டே வந்த வேதாசலத்தை அஸ்திவாரமாக வைத்துத் தன் பிற்கால வாழ்க்கை என்னும் கட்டி டத்தை அதன்மேல் எழுப்ப முயன்றாள்.

எழெட்டு வருஷங்களாகவே அவள் ரங்க ராஜன் வீட்டில் வேலை செய்து வருகிறாள்; மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம். அது தவிர இரண் டொரு வீட்டில் பாத்திரம் தேய்க்கும் வேலை.

ரங்கராஜனுடைய பங்களா ஸான்தோமில் இருந்தது. ரங்கராஜன் முன்கோபக்காரன். சீதா மகா கர்வி. அவர்கள் வீட்டில் எந்த வேலைக்காரியும் நிலைத்ததில்லை. ஆயினும் தன் ஏழைமை நிலையையும் அவர்கள் கொடுக்கும் சம்பளத்தையும் உத்தேசித்துப் பாஞ்சாலி ஒருவிதமாக அவர்கள் வீட்டில் தன் காலத்தைத் தள்ளி வந்தாள்.

வேதாசலத்துக்கு ஏழு வயது நடந்து கொண் டிருந்தது; அவன் இரண்டாவது வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தான். பாஞ்சாலி யின் அபிலாஷை ஒன்றுதான்; எப்படியாவது தான் கஷ்டப்பட்டாவது சம்பாதித்து, வேதா சலத்தை ஒரு பத்து வகுப்புவரையில் படிக்க வைத்துவிட வேண்டியது; பின் யாராவது ஒரு பெரிய மனுஷரைப் பிடித்து அவர் தயவால் அவனுக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்து விடலாம் என்பதுதான். அந்த இன்பக் கனவு நனவாகும் நாளை எதிர் பார்த்துக்கொண்டிருந் தாள்.

வேதாசலமும் தன் தாயுடன் ரங்கராஜன் பங் களாவுக்குச் செல்வான்; தன் தாய் வேலையில் இருக்கும்போது அவர்கள் வீட்டுக் குழந்தையைப் பார்த்துக் கொள்வான். அவர்கள் வீட்டில் தயா ரிக்கப்படும் பட்சணம், பலகாரங்களின் மிச்சம் மீதியெல்லாம் கொஞ்சம் இவனுக்கும் கிடைக்கும். வேதாசலம் ரங்கராஜனின் பங்களாவுக்குப் போய்விட்டால், ரங்கராஜனும் சீதாவும், அவ னுக்கும் ஏதாவது வேலை இட்டுக் கொண்டே யிருப்பர்; சிலசமயம் சரியாகச் செய்யாமற்போனல் ரங்கராஜன் கோபித்துக் கொள்வான்.

ஆனல் இன்று நடந்ததை நினைக்க நினைக்கப் பாஞ்சாலியின் உள்ளம் குமுறியது. தன் செல்வப் புதல்வனை ரங்கராஜன் 'கண் மண்' தெரியாமல் முரட்டுத்தனமாகக்குச்சியால் அடித்த தோடல்லாமல், திருட்டுக் குற்றத்தையும் அல்லவா வேதாசலத்தின்மேல் சாட்டிவிட்டான் என்று வருந்தியது அந்த ஏழையின் மனம்; அந்த அவமானத்தை நினைக்க நினைக்க அவள் உடலே குன்றிப் போயிற்று.

3

வேதாசலத்தால் பாதி வழிக்குமேல் நடக்க முடியவில்லை; பாஞ்சாலி அவனைத் தோளில் தூக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. தன் குடிசைக்குப் போவதற்குள்ளாகவே வேதாசலத் துக்குப் பயத்தினலும் அடிபட்ட அதிர்ச்சியினலும் ஜுரம் வந்துவிட்டது. பாஞ்சாலி மிகவும் கலவர மடைந்து விட்டாள்.

குடிசையை அடைந்ததும் பாஞ்சாலி ஒரு பாயைப்போட்டு அதன்மேல் வேதாசலத்தைப் படுக்கவிட்டாள். வேதாசலத்துக்கு ஜுரம்.

'கோ'வென அழ ஆரம்பித்துவிட்டாள் பாஞ் சாலி. தங்கள் குல தெய்வமான மாரியமனுக்கு வேண்டிக்கொண்டாள்.

மாலை நான்கு மணி இருக்கும். பித்துப் பிடித்தாற்போல் உட்கார்ந்திருந்த பாஞ்சாலி, வேதாசலம் ஏதோ பிதற்றுவதைக் கேட்டு அவன் பக்கத்தில் ஓடி வந்து அவனைத் தொட்டுப் பார்த்தாள்; ஜுரத்தின் வேகம் அதிகமாக இருந் தது; உடம்பில் கையை வைத்ததும் 'சுரீர்' என்று சுட்டது. அதோடு வேதாசலத்துக்கு அடி யின் உபாதை பொறுக்கமுடியவில்லை.

"ஐயோ! அம்மா! உடம்பெல்லாம் நோவுதே! ஐயோ! எரியுதே...." என்று கத்திக் கொண் டிருந்தான். அதோடு அவனுடைய இளம் உள் ளம் வேறு ஒரு விஷயத்தைப்பற்றியும் எண்ணிப் பெரும் வேதனைக்குள்ளாயிருந்தது. தான் தவறு ஒன்றும் செய்யாதிருந்தும், தன்மேல் திருட்டுக் குற்றத்தை எஜமான் சாட்டிவிட்டது அவன் மனத்தை அரித்துக் கொண்டிருந்தது. ஆகவே ஜுர வேகத்தில் இடையிடையே, "நான் எடுக்கவே இல்லே! சாமி! என்னை அடிக்காதே யுங்கோ சாமி!" என்று ஏதோ தொடர்ச்சி யற்ற வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்தன.

பாஞ்சாலியின் மூளை கலங்கிவிட்டது; துயரம்,

கோபம், பாசம்—எல்லா உணர்ச்சிகளும் ஒன்று சேர்ந்து அவள் உள்ளத்தின் அடியிலிருந்து பீரிட்டுக்கொண்டு எழுந்தன. கையைப் பிசைந்துகொண்டே நின்றிருந்த அவள் 'தடா' ரென்று கீழே உட்கார்ந்து, "கண்ணு! வேதா சலம்! இந்தப் பாவி வவுத்திலே பாலே வாருடா! கண்ணு! அவங்க கிடக்கராங்க! நீ ஒரு குற்றத் தையும் செய்யலேடா! மேலே இருக்கிற கட வுளுக்குத் தெரியும்டா...." என்று பிரலாபிக்க ஆரம்பித்துவிட்டாள்.

இரண்டு நிமிஷங்களில் அவள் உள்ளம் ஒரு புதுத் தெம்பு கொண்டது. வீணுக அரற்றுவதிலும் அழுவதிலும் என்ன பயன் என்று கருதி, வேதாசலத்தை எந்த டாக்டரிடமாவது காண் பித்து அவன் உடம்பை ஜாக்கிரதையாகக் கவ னிக்க முடிவு செய்தாள்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மெதுவாக எழுந்தாள். டாக்டரிடம் காட்டுவதென்றால் பணம் வேண்டுமே; அதற்கு எங்கே போவது என்ற யோசனை உண்டாகிவிட்டது அவளுக்கு. இரண்டு நிமிஷ யோசனைக்குப் பிறகு அவளுக்கு ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. நெடு நாட்களாக ஒரு ஜதை வெள்ளிக்காப்பு கள் அவளுடைய ஓட்டைப் பெட்டியில் கிடந்தன. 'பரபர'வென்று சென்று அதை எடுத்தாள். நேராகக் காசுக் கடைக்குச் சென்றாள். அதற்கு நான்கு ரூபாய்கள்தாம் கிடைத்தன. திரும்பத் தன் குடிசைக்கு ஓடோடியும் வந்தாள்; வேதாசலத்தை எடுத்துத் தோளில் சார்த்திக்கொண்டு அடுத்த தெருவில் இருந்த டாக்டரிடம்சென்றாள். அவர் பாஞ்சாலி கையிலிருந்த நான்கு ரூபாயை வாங்கிக் கொண்டு, உடம்பின் மேலி ருந்த ரணத்துக் கெல் லாம் ஏதோ ஒரு மருந் தைத் தடவிவிட்டு, ஜுரத் துக்கும் மருந்து கொடுத்து அனுப்பிவிட்டார். டாக்டரின் மருந்தினலெல்லாம்வேதா சலத்தின் நிலையில் இம்மி யளவு மாறுதலும் காணப் படவில்லை. அதற்குப் பதி லாக அவன் மீண்டும்

வீட்டுக்கு அழைத்துவரப்பட்டவுடனே ஜன்னி கண்டுவிட்டது. பாஞ்சாலி செயலற்றுக் காணப் பட்டாள் பிரமையே உருவாக!

* * *

விடியற்காலே; 'சில்'லென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. தூரத்தில் எங்கோ கடி யாரம் நான்கடித்தது. இதுவரை மூடிய கண் திறவாமல் படுத்திருந்த வேதாசலம் சற்றுக் கண் திறந்தான்; பக்கத்தில் தன் தாய் உட் கார்ந்திருப்பதைப் பார்த்து, ஒரு கணம் 'மிரள மிரள' விழித்தான். கையைச் சற்றுத் தூக்கி ஏதோ சைகை காட்ட நினைத்தான். ஆனால்.... மறுகணம் அவன் கை கீழே தொப்பென்று விழுந்தது; தலை ஒரு பக்கம் சாய்ந்தது; உயிர் கூட்டைவிட்டுப் பிரிந்தது; உடல் சில்லிட்டது.

"ஐயோ! கண்ணே! பாவிங்க அடிச்சுக் கொன்னுட்டாங்களே! எனக்கு இனிமே இங் கென்னடா வேலே...." என்று பாஞ்சாலியின் அலறல் வெளியே பரவி இருந்த இருளைக் கிழித்துக்கொண்டு வெளியே சென்றது.

4

ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்த ரங்கராஜன் கடுகடுத்த முகத்தோடு தன் அறைக்குச்சென்று

தன் உடைகளைக் களைந்துகொண் டிருந்தான். கீதா கையில் காபி டம்ளரை எடுத்துக்கொண்டு மெதுவாக அவன் அறைக்குள் சென்ருள். அவளைக் கண்ட ரங்கராஜன், "எங்கே உன் அருமைத் தம்பி? பள்ளிக்கூடத்திலிருந்து வந்துட்டாஞ?" என்று சற்றுக் கோபமாகக் கேட்டான்.

"வந்தாச்சு! கீழே டிபன் சாப்பிட்டிண்டிருக்கான்! எதுக்காகக் கேக்கறேள்?......" என்ருள்.

"அவன் என்ன இங்கே ஒழுங்கா படிச்சிண்டு இருக்கப் போருனு, இல்லே ஊர் சுத்திண்டிருந்துட்டு, காலத்தைக் கழிச்சுட்டுப் போகப் போருனு, கேளு!"

"ஏன்? என்ன சமாசாரம்?...."

"அவனைக் கூப்பிடு இங்கே...." என்ருன் ரங்கராஜன். கீதா காபியை மேஜையின்மேல் வைத்துவிட்டு சமையற்கட்டில் 'டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்த வாஸுவைக் கூப்பிட்டுக் கொண்டு வந்தாள். ரங்கராஜன் அவனை விறைத்துப் பார்த்துவிட்டு, "போன ஞாயிற்றுக் கிழமை, மத்தியானம் நீ எங்கே போயிருந்தே?" என்று அதட்டினன்.

வாஸு பேந்தப்பேந்த விழித்தானே தவிர, அவன் வாயிலிருந்து பதில் வரவில்லே.

"என்ன ஆடு திருடின கள்ளன் மாதிரி முழிக்கறே?...." என்ருன் ரங்கராஜன்.

இதற்குள் கீதா, "ஏதோ பள்ளிக்கூடத்திலே ஸ்பெஷல் கிளாஸ் வச்சிருக்கான்னுட்டு இரண்டு மணிக்குப் போஞன்; அப்படியே விளேயாடிட்டு ஆறரை மணிக்கு வந்தான்...." என்ருள்.

"நீ ஸ்பெஷல் கிளாஸுக்கா போனே! உண்மையைச் சொல்லிடு......" என்று மறுபடியும் அதட்டினன் ரங்கராஜன்.

வாஸு அக்காவையும், அத்திம்பேரையும் மாறி மாறிப் பார்த்தான். பின் மெதுவாக, "என் 'பிரண்'ஸோடு சினிமாவுக்குப் போனேன்...." என்ருன்.

"கீதா! பார்த்துக்கோ! இங்கே பிள்ளே படிச்சிண்டிருக்கிறதாக அங்கே உங்க அப்பா நினைச்சிண்டிருக்கார். இவன் இங்கே சினிமாவுக்கும், நாடகத்துக்கும் போயிண்டிருக்கான். என் சிநேகிதன் ஒருவன் இவனைத் தியேட்டரிலே பார்த்தாஞம்; சொன்ஞன்.... இல்லாத போனு, நீயும் நானும் இவன் ஸ்பெஷல் கிளாஸுக்குத்தான் போயிருக்கிறதாக நினைச்சிண்டிருப்போம்......"

இதற்குள் கீதா, "உனக்குக் காசு ஏதுடா?...." என்று கேட்டாள்.

வாஸு ஒரு நிமிஷம் பதில் சொல்லவில்லே.

மறுநிமிஷம் ரங்கராஜன் கோபத்துடன் அவனைப் பார்க்கவே, "சனிக்கிழமையன்னிக்கு ராஜு கையிலே ஒரு அஞ்சு ரூபா நோட்டு வச்சிருந்தான்; அதை நான் பிடுங்கி வச்சிண்டேன்...." என்று இழுத்தான். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் கீதா, ரங்கராஜன் இருவர் முகங்களும் மாறுதலடைந்தன.

"நீயா பிடுங்கிண்டு போயிட்டே? அந்த வேலேக்காரப் பையன் மேலே சந்தேகப்பட்டு உங்க அத்திம்பேர் அவனைப்போட்டு அடிஅடின்னு அடிச்சுப்பிட்டாரே, அன்னிக்கு....! என்னு! அந்தப் பையன்கூட ஜுரம் வந்து ரெண்டு நாளிலே செத்துப் போயிடுத்தாம்....பாஞ்சாலிக்குப் பைத்தியம் பிடிச்சுப் போச்சாம்! தெருத்தெருவா சுத்திண்டிருக்களாம்......" என்ற சொற்கள் கீதாவின் வாயிலிருந்து வெளிவந்தன. உடனே அவள் வயிறு 'பகீர்' என்றது. நிரபராதியான ஒருவன் மேல் குற்றம் சாட்டி, அவனைக் கண்டபடிஅடித்து அவன் உயிருக்கே உலே வைத்து, அவனையே நம்பி இருந்த அவன் தாயைத் தவிக்கவிட்டதங்களுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என்ற பயம் அவள் மனத்தில் உண்டாகியது. ஆனல் ரங்கராஜன் அதைப் பற்றிக் கவலேகொண்டதாகக் காணேம்.

ரங்கராஜன் வாஸுவைப் பார்த்து, "சரி நீ போ! இனிமேல் இது மாதிரி திருட்டுக் காரியமெல்லாம் செய்யாதே! நீ இங்கே வாசிக்கிறதுக்குத்தான் வந்திருக்கே; வந்த காரியத்தைப் பாரு...." என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு, "கீதா! சீக்கிரம் டிரஸ் பண்ணிக்கொண்டு கிளம்பு! வெளியே போய்விட்டு வரலாம்" என்ருன்.

உற்சாகத்துடன் வெளியே கிளம்பக்கூடிய நிலேயில் அப்போது கீதா இல்லேயாஞலும், தன் மனத்தில் எழுந்துள்ள ஒரு பெரும் சங்கடத்தைப் போக்கிக்கொள்ள எங்காவது சென்ருல்தான் தேவலேபோல் தோன்றிற்று அவளுக்கு.

அரைமணி நேரத்தில் இருவரும் புறப்பட்டனர். குழந்தை வாஸுவைத் தோட்டக்காரன், தள்ளு

வண்டியில் வைத்துத் தோட்டத்தைச்சுற்றி வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தான்.

* * *

இரவு சுமார் ஏழு மணிக்குப் பங்களாவுக்குத் திரும்பிய கீதாவும், ரங்கராஜனும், ராஜு கட்டிலில் படுத்துக்கொண்டு அழுது கொண்டிப்பதையும், வாஸுவும், வேலைக்கார முனியனும் பக்கத்தில் நின்றுகொண்டு அவனைச் சமாதானம் செய்துகொண்டிருப்பதையும் கண்டு திடுக்கிட்டனர்.

"என்னடா குழந்தைக்கு?...." என்று கேட்டுக்கொண்டே ராஜுவின் அருகில் ஓடிவந்த கீதா குழந்தையின் உடம்பு பூராவும், 'தத்து' தத்தாக வீங்கி இருப்பதையும், குழந்தை 'வீல் வீ'லென்று அழுவதையும் கண்டு பயந்துவிட்டாள். கட்டிலருகில் உட்கார்ந்துகொண்டு அதைத் தடவிக்கொண்டே, "என்னடா! உடம்பெல்லாம் இப்படி இருக்கு?" என்று கேட்டாள், முனியனைப் பார்த்து. அவன் முகம் மிகவும் கலவரமடைந் திருந்தது.

"குழந்தை தோட்டத்திலே விளையாடிக்கிட்டு இருக்கச்சொல்ல ஏதோ பூச்சி கடிச்சிட்டாப்போல இருக்குது அம்மா...."என்றான் முனியன், நடுங்கிக்கொண்டே.

"டாம் இடியட்! பூச்சி கடிக்கும்படியா குழந்தையை விட்டுட்டு நீ என்னடா பண்ணிண்டிருந்தே!" என்று இரையவாரம்பித்துவிட்டான் ரங்கராஜன்.

கீதாவுக்கு உடம்பு 'வெடவெட' வென்று உதற ஆரம்பித்துவிட்டது.

"சீக்கிரம் டாக்டருக்கு "போன், பண்ணுங்கோ.." என்றாள் அவள்.

ரங்கராஜன் ஓடிப்போய், உடனே புறப்பட்டு வரும்படி டாக்டரைப் 'போ'னில் கூப்பிட்டுச் சொன்னான்.

பதினைந்து நிமிஷத்தில் டாக்டர் வந்தார்; குழந்தையைப் பரீட்சித்தார். ஆனால் அவருடைய முகபாவனை நம்பிக்கையளிப்பதாகத் தோன்றவில்லை. ஏதோ விஷப் பூச்சி கடித்து, விஷம் ரத்தத்திலும் கலந்துவிட்டதென்றும், எனினும் தன்னாலானதைச் செய்வதாகவும் சொல்லி டாக்டர் ஏதோ ஒரு இஞ்ஜெக்ஷனைக் கொடுத்துவிட்டு, மறுபடியும் இரவு பத்து மணிக்கு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார்!

கீதாவின் நெஞ்சு பதைபதைத்தது; அவள் குழந்தையின் பக்கத்திலேயே உட்கார்ந்து விட்டாள். ரங்கராஜனும் திக் பிரமை பிடித்தவன்போல் ஒரு சோபாவில் சாய்ந்து விட்டான்.

டாக்டர் மறுபடியும் பத்து மணிக்கு வந்து மறுபடியும் ஒரு இஞ்ஜெக்ஷன் கொடுத்துவிட்டுச் சென்றார்; ஆனால் முன்னேற்றம் ஒன்றும் காணப்படவில்லை. இருக்க இருக்கக் குழந்தையின் கத்தலும் அழுகையும் அதிகமாகிக் கொண்டே யிருந்தது. அது படும் வேதனையைக் காணச் சகிக்கமுடியவில்லை யாராலும்.

இரவெல்லாம் கீதாவும், ரங்கராஜனும் விழித்துக் கொண்டே அதன் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தனர்.

பொழுது விடிந்தது; குழந்தையின் தேகம் நீலம் பூத்துவிட்டது. டாக்டர் வந்தார்; ஆனால் இனி ஒன்றும் பிரயோஜனமில்லை என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

கடியாரம் எட்டடித்தது; பங்களா கேட்டண்டை யாரோ கத்துவதுபோல் கேட்டது. கீதா மாடி வராண்டாவுக்குச் சென்று பார்த்தாள். கேட்டண்டை பாஞ்சாலி நின்றுகொண்டிருந்தாள், சித்த ஸ்வாதீனமற்ற நிலையில்!

கீதாவைக் கண்டதும், அவள், "என் குழந்தை பொய் சொல்லமாட்டான்! அவன் எடுக்கலை ரூபாயை....நாங்க ஏழைங்கதான்! ஆனா பொய் சொல்லமாட்டோம்...." என்று சொல்லிவிட்டு ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்துவிட்டு கேட்டைத் தாண்டிச் சென்றாள்.

கீதாவின் கலங்கிய உள்ளத்தின் அடியிலிருந்து அழுகை பீரிட்டுக் கொண்டு வந்தது; ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. உள்ளே வந்தாள் அவள்; பின்பக்கம் இருந்த கடலைப் பார்த்தாள். அதன் அலைகள் 'ஓ' வென்ற பேரிரைச்சலுடன் கரையில் மோதிக்கொண்டிருந்தன; கட்டு மரம் ஒன்று கொந்தளிக்கும் கடலில் தத்தளித்துக்கொண் டிருந்தது. ஆம்; அது மாதிரியேதான் துக்கம் என்னும் கடலில் கீதாவின் மனமும் தத்தளித்துக்கொண் டிருந்தது. அடுத்த கணம், அந்தக்கட்டு மரம் நீரில் சற்று மூழ்கியது; அதே சமயத்தில் 'அம்மா' என்று அலறியது குழந்தை. அதன் படுக்கையண்டை ஓடினாள் கீதா. ஆனால், ராஜு நிரந்தர நித்திரையில் ஆழ்ந்துவிட்டான்.

"ஐயோ! ராஜு! நீ போயிட்டையேடா! அவள் வயிறு எரிஞ்சாப்போல என் வயிறும் எரியும்படிக் கடவுள் தண்டிச்சுட்டாரே...." என்று அலறிக்கொண்டே சில்லிட்டிருந்த குழந்தையின் சடலத்தின் மேல் 'தொப்' பென்று விழுந்தாள் அவள்.

*

மதராஸ் தியேட்டர்களில்

இப்பொழுது நடைபெறுகின்றன!

பிரபாத்

பேமஸ் பிக்சர்ஸ்

ஹமாரி மன்ஸில்

10—2—50 முதல்

முருகன் டாக்கீஸாரின்

ரத்ன குமார்

பிராட்வே

மாடர்ன் தியேட்டர்ஸின்

பொன்முடி

நரசிம்மபாரதி—மாதுரி தேவி நடித்தது

டைரக்ஷன் : எல்லிஸ் ஆர். டங்கன்

சினிமா சென்ட்ரல்

ஆர். பி. லக்ஷ்மி தேவி நடித்த

வீர வனிதா

அடுத்த படம்

என். எஸ். கே. பிலிம்ஸ்

நல்ல தம்பி

ஸரஸ்வதி

மாடர்ன் தியேட்டர்ஸின்

பொன்முடி

நரசிம்மபாரதி — மாதுரி தேவி

நடித்தது

கதை : 'பாரதிதாசன்'

MANAGING DIRECTOR: SRI. C. P. SARATHY.

MADRAS THEATRES LTD MADRAS. I

மனைவி

ஹரிகுப்தன்

*

"சரஸு! அந்தக் கிராதகியின் நெஞ்சம் நெருப்பு! அனல்! அது என்னைச் சித்திரவதை செய்கிறது. ......ஆனால் நீ புஷ்பம்! உன் நெஞ்சம் மென்மையானது!"

*

அந்தி மயங்கி, மெல்ல இருள் படர்ந்து வந்தது; வீட்டுக்குள் நுழைந்த என் கணவர் நேரே தம் அறைக்குள் சென்றார்; என்னுடன் பேசவில்லை. அவர் ஆபிசிலிருந்து வருவதை எதிர்பார்த்து இவ்வளவு நேரமாய் நின்று கொண்டிருந்தேன் நான். அவர் மௌனம் என் இதயத்தை என்னவோ செய்தது. கடந்த மூன்று நாட்களாகவே அவர் இவ்விதம்தான் இருக்கிறார்.

கண்ணில் நீர் சோர்ந்தது; அதைத் துடைத்துக் கொண்டு உள்ளே வந்தேன். அவர் தம் அறையில் உட்கார்ந்து தம் பெட்டியைத் திறந்து எதையோ பார்த்துக்கொண்டிருந்தார்; அடிக்கடி பெருமூச்செறிவது என் காதில் தெளிவாக விழுந்தது. என் மனம் வேதனைப் பட்டது. 'பாவம், ஏதோ வருத்தம்' என்று எண்ணினேன்; அவரைத் தேற்றவும் விழைந்தேன். ஆனால் நானாகப் போய் அவரை "என்ன வருத்தம்?" என்று கேட்பதா? இல்லை, அவராகச் சொல்லும்வரை காத்திருப்பதா?—என் மனம் குழம்பியது. இருப்புக் கொள்ளாமல் துடித்தேன். அவர் இன்னும் எதையோ கையில் வைத்துக்கொண்டு அதைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டார். அவர் துக்கம் எதுவாயிருந்தாலும் அதில் பங்கு கொள்ள எண்ணினேன். 'பாவம், மனைவிக்குச் சொல்லக் கூடாத வருத்தம் கணவனுக்கு எவ்வளவோ இருக்கலாம்; அதைக் கணவன் மனைவியிடம் சொல்ல விருப்பப் படாமலிருக்கலாம்—இதை மனைவி தெரிந்துகொண்டும் சும்மா இருக்கலாமா? எப்படியாகிலும் அவர் வருத்தத்திற்குக் காரணத்தை அறிந்துகொண்டு, அவரிடம் கோபமின்றி, அவரை அதனின்றும் காப்பாற்ற உதவி செய்யவேண்டும்....' என்று என் மனம் சொல்லிற்று.

அவர் அறையில் நுழைய நினைத்து ஓரடி முன்னே எடுத்துவைத்ததும், அவர் தம் பெட்டியை மூடிவிட்டுத் திரும்புவது கண்டு, சமயலறைக்குள் நுழைந்தேன். அவருக்குக் களைப்பாயிருக்கலாமென்றெண்ணிக் காப்பி தயார் செய்தேன். என்னருகில் வந்து அவர் உட்கார்ந்து கொண்டார்; வாய் திறக்கவில்லை. அவர் பக்கம் திரும்பிய நான் கலங்கிப்போனேன். அவர் கண்களில் நீர் தளும்பியது. நான் ஏதும் பேசாது, குமுறி வரும் துக்கத்தை மனத்தின்

ஆழத்தில் அமுத்திவிட்டு அவரிடம் 'காப்பி'யை வைத்தேன். அவர் சாப்பிட்டுவிட்டு எங்கேயோ சென்றார். வேண்டாவெறுப்பாக நானும் ஒரு வாய் சாப்பிட்டுவிட்டு எழுந்தேன். மனசில் நிம்மதி இல்லை. எப்படி இருக்கும்? அவர் எதையோ நினைத்துத் துக்கப் படும்போது?

கூடத்துக்குச் சென்றேன். அவரைக் காணோம். 'அவர் பெட்டியைத் திறந்து அதில் என்ன வைத்திருக்கிறரென்று பார்த்தாலென்ன?' என்ற எண்ணம் மெல்லத் தலை தூக்கியது; தொடர்ந்து பயத்தினால் உடல் நடுங்கியது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, திருடன்மாதிரி நடந்தேன். அறைக்குள் நுழைந்து, பெட்டியைத் திறந்தேன். என் உள்ளத்தை அளவற்ற பயம் கவ்விக்கொண்டது. என் கண்ணில் ஒரு கடிதம் தென்பட்டது. பெட்டியைத் திறந்ததும், மேலே கிடந்தது. ஒரு கணம் என் இதயம் நின்றுவிடுவதுபோல் படபடத்தது. கடிதத்தை எடுத்தேன்; படிக்க ஆரம்பித்தேன்.

"அன்புள்ள........,

இந்தக் கடிதம் உங்கள் மனசைப் புண்படுத்தலாம்; இதை எழுதுவது உங்கள் மனைவி லீலா.

என்னுடன் உங்களுக்கு வாழப் பிடிக்கவில்லையா? என் குணம் தங்களுக்கு வெறுப்பூட்டியதா? இல்லை, நம்மிருவருக்கும் பிறந்த குழந்தை கண்ணன்மீது கோபமா?—பின் ஏன் என்னிடம் சொல்லிக்கொள்ளாமல், நடு நிசியில் புறப்பட்டுப் போனீர்கள்? அதற்குப் பின் தங்களைக் காணாது என் மனம் எவ்வளவு அவதிப்பட்டது தெரியுமா? எங்கெங்கெல்லாமோ அலைந்த பின் உங்கள் விலாசப் கிடைத்தது. அநாதை என்று சொல்லி என்னை மணந்தீர்கள் கண்ணன் பிறந்தான். ஆனால் திடீரென்று சொல்லாமல், கொள்ளாமல் போய்விட்டீர்களே? கண்ணன் 'அப்பா அப்பா!' என்று புலம்புகிறானே, இந்தக் கடிதம் கண்ட 5-வது நாள் கண்ணனுடன் அங்கு வருகிறேன்.

நமஸ்காரம்

தங்களன்புள்ள,

லீலா!"

இந்தக் கடிதத்தைப் படித்ததும் என் நிலைமையை உங்களால் ஊகிக்க முடியுமா? "கோபம் பொங்கி எழுந்திருக்கும்; லீலாவைச் சபித்திருப்பாய்......." என்றெல்லாம் தானே சொல்லுகிறீர்கள்? அதுதான் இல்லை. என் கணவர்மீது கோபத்துக்குப் பதில் வருத்தமே உதித்தது. அவருக்கு முதலிலேயே மணமாகி விட்டதா? குழந்தையும் பிறந்துவிட்டதா? எதற்காக அவர்களை விட்டு இவர் ஓடிவரவேண்டும்? லீலாவின் குணம் ஒருமாதிரியாய் இருந்திருக்குமோ?........ அவள் இங்கு இச் சமயம் வந்துவிட்டால், என கதி என்னவாகுமோ என்ற துக்கந்தானா அவருக்கு? நான் ஏதாவது கோபிப்பேனோ என்ற கலக்கந்தானா? இல்லை, நான் அவரைக் கோபிக்கவே மாட்டேன்! லீலா இங்கு வரட்டும்! பாவம், குழந்தையுடன் இவரைக் காணமல் எங்கெல்லாம் அலைந்தாளோ?........' என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்த நான், என் பின்னால் ஏதோ சப்தம் கேட்டுத் திரும்பினேன்.

கண்களில் நீர்வழிய அவர் நின்றுகொண்டிருந்தார். நான் சாந்தமான முகத்துடன் அவரைப் பார்த்தேன். அவர் என் காலடியில் 'பொத்'தென்று வீழ்ந்துவிட்டார்.

"சரஸு! இந்தப் பாவியை மன்னிப்பாயா?" என்று கத்தினார்.

நான் அழுதுவிட்டேன். "எனக்குச் சிறிதும் கோபமில்லை; எழுந்திருங்கள்!" என்று பரிவுடன் பேசி அவரைத் தூக்கினேன். என்னைச் சிறிது நேரம் பிரமை பிடித்தவர்மாதிரி பார்த்துவிட்டு வாசலுக்குச் சென்றார். நான் மௌனமாய் எழுந்துவந்தேன். என் மனசில் பூரண அமைதியும், சாந்தமும், கணவனின் துக்கத்தை அறிந்து

கொண்டதனுல் ஓரளவு மகிழ்ச்சியுங் கூட ஏற் பட்டது.

* * *

வாசலில் வண்டிவந்து நின்றது. வெயில் கடுமையா யிருந்ததனுல் கண்ணை லேசாக மூடிக் கொண்டிருந்த நான் எழுந்து வாயிற் கதவைத் திறந்தேன். ஒரு பெண் இடுப்பில் சின்னஞ் சிறு குழந்தையுடன் இறங்கினுள்.

“இதுதானே மிஸ்டர் நாகராஜனின் வீடு ?“ என்று கேட்டாள்.

நான் “ஆமாம்....” என்றுசொல்லிக் குழந் தையை அன்புடன்வாங்கப்போனேன்.ஏனே லீலா என்னிடம் அதைக் கொடுக்காமல் உள்ளே,‘ விடு விடு’ வென்று நுழைந்தாள். அவள் என்னை என்னவோ போல் பார்த்தது என் மன சை வருத்திற்றெனி னும் உள்ளே சென் றேன். அவள் அங்கு மிங்கும் அவரைத் தேடினுள்; பிறகு, என் பக்கம் திரும்பி, “ எங்கே இந்த வீட் டுக்காரர்?”என்றுள். என் இதயத்தைச் ‘சுருக்’கென்றுதைத் தது, இந்த வார்த் தை. என்னை அவரது மனைவி என்று அவள் தெரிந்து கொள்ள வில்லை. முகத்தில் புன்முறு வலுடன், “அவர் இன்னும் ஆபீசி லிருந்து வரவில்லை ....” என்று சொல்லி அவளுக்குப் பக்கத் தில் ஒரு நாற்காலி யை இழுத்துப்போட் டேன். அவள் பார் வையில் ரத்த நிறம் ஜ்வலித்தது. குழந் தையை நான் இமை யசைக்காது பார்த் துக் கொண்டிருந் தேன். அவர் முகத் தையே உரித்துவைத் திருந்தது ! திடீ ரென்று அவள், “நீ யார்?” என்று கேட்டதும் நான் அதிர்ச்சி யடைந்தேன். மனசில் புயல் எழுந்து வீசியது. கண்ணீர் பொங்கிவரப் பார்த்தது. பதில் சொல் லத் தெரியாது தயங்கினேன். முடிவில், “உன் னைப்போலத்தான் நான்” என்று சொல்லிவிட் டேன். அவள் துள்ளி எழுந்தாள். குழந்தை ‘வீல்’ என்று கத்திற்று. “ என்னைப்போல நீயா ? அப்படியானுல்....”

“ நான்அவர் மனைவி...”—அழுகையும், விம் மலுமாய் இதைச் சொல்லிவிட்ட நான், அவள் கோபத்தினுல் பற்களை ‘நறநற’ வென்று கடிப் பதை அறிந்தேன். பொறுமையை வரவழைத் துக்கொண்டு, அழும் குழந்தையை, முன்பு லீலா கொடுக்க மறுத்ததையும் மறந்து, வாரி

எடுத்து அணைத்துக்கொள்ள என் இரு கரங் களையும் அதனிடம் கொண்டுபோனேன். 'சீ! போடீ ! அவனைத் தூக்காதே!'' என்று லீலா எரிந்து விழுந்ததும், அவர் அவளைவிட்டு ஓடி வந்ததற்குக் காரணம் எனக்குப் புரிந்துவிட்டது. ஒரு சமயம் ரயிலில் வந்த களைப்பினால் கோபமோ என்றெண்ணி உள்ளேபோய் 'காப்பி' போட்டுக் கொண்டுவந்தேன். ஆனால் அப்போது அவள் கூடத்திலில்லை. அவர் அறையில் ஏதோ பேச்சுக் குரல் கேட்டது. உன்னிப்பாகக் கவனித்த நான் லீலா 'சள்சள்'ளென்று அவர் மீது எரிந்துவிழுவதை அறிந்தேன்.

''குழந்தையையும், என்னையும் தவிக்கவிட்டு இங்கே ஓடிவந்தீர்களே! உங்கள் மனசு கல்லா? என்னைப் பார்த்தால் பத்திரகாளிமாதிரித் தோனு கிறதோ?—அது சரி. அவள் உங்கள் மனைவியா? அவளை என் மணம்செய்துகொண்டீர்கள்? அந்த நாய் எனக்குச் சரியாக, 'நானும் உன்னைப் போலத்தான் என்கிறதே !....''

இதற்குமேல் என் காது அடைத்துக்கொண் டது; கட்டுமீறிக் குமுறும் துக்கம் கண்ணீராய் வழியச் சமையலறைக்குள் ஓடிவந்து, கட்டிலில் வீழ்ந்து விம்மினேன். பாவம், லீலா சொன்ன தற்கெல்லாம் பதில்பேசாது பொறுமையா யிருந்த அவர் மனசு படும்பாட்டை நான் எண் ணியபோது, என் உள்ளமே உடைந்து விட்டது. வெகுநேரம் லீலா இரைந்து கத்தியது என்காதில் விழுந்தது.

* * *

அவ்வளவுதான்; என் வாழ்க்கை ஒரு தினுசாக மாறிவிட்டது. அவருடன் ஒரு வார்த்தை பேசக்கூட என்னால் இப்போதெல்லாம் முடிய வில்லை. அவர் லீலாவின் பேயிரைச்சலுக்கு அடிமைப்பட்டுப் போனார். நான் இதை நினைத்து விம்மினேன். ஆபீசிலிருந்து களைப்புடன் வரும் அவருக்கு உடனே காப்பி கொடுக்கவேண்டாமா? இன்மொழிகள் ஒன்றிரண்டு கூறி அவரை வர வேற்கவேண்டாமா?—அதெல்லாமில்லை. அவர் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக என்னைப் பற்றி ஏதாகிலும் குறை சொல்லுவாள். அவர் இதை எலலாம் கேட்டுக்கொண்டு மௌனம் சாதிப்பது கண்டு அவர்மீது எரிந்து விழுவாள்.

* * *

நடு நிசியில் மாதத்துக் கொருமுறை அல்லது இருமுறைகள் லீலா உறங்கும்போது அவரைச் சந் திக்கச்செல்வேன், அவர் கண்ணீரை நான் துடைப் பேன். ''சரஸு ! நீ பாக்யசாலி யில்லை....இந்தப் பாவியை மன்னித்து விடு....'' என்று அவர் கூறி விம்மும்போது, அவர் தலைமயிரை மெல்லக் கோதுவேன்! ஆறுதல் கூறிக் குழந்தையை உறங்கச் செய்வது போல் லேசாக இன்பத்துடன் தட்டி அவரை உறங்கவைத்து விட்டு, எழுந்து என் படுக்கைக்கு வருவேன்.

நான் துரும்பானேன்; அவர் உடலிலும் எலும்பு ஆங்காங்கே நீட்டிக் கொண்டிருந்தது. லீலா அளவற்ற அழகுடன் திகழ்ந்தாள். அவளுக்கு எதைப் பற்றியுமே கவலையில்லை !

அவருக்கு ஒருநாள் ஜுரம்கண்டது. என் மனசு துடியாய்த் துடித்தது. இரவு முழுவதும் உறக்க மின்றி, அவரருகிலே அவருக்குப் பணிவிடை செய்து கழித்தேன். கண்ணீருடன் அவர் என்னைப் பார்த்துக் கூறினார். ''சரஸு ! எப்படி இன்ப மாய் இருக்கவேண்டிய நீ இப்படிக் கண்ணீரும் கம்பலையுமா யிருக்கிறாய் ? பொறுமையும், அன் பும் உன்னிடம் இருக்கிறது—நீ என் மனைவி; ஆனால் அவள், அந்த லீலா... ஐயோ அவள் பெயரைச் சொல்லக்கூட எனக்குப் பயமாயிருக்கி றதே ! கண்ணே, அழாதே ! இந்த ஜென்மத் தில் நாம் செய்த பாக்கியம் இவ்வளவுதான்.''

நான் அவர் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விக்கி விக்கி அழுதேன். அவர் கூறிக் கொண்டே போனார்: ''என் கண்ணே! ஜுரத்தின் வேகம் அதிகமாகிறது; இனி நான் பிழைப்பே னென்று எனக்கே தோன்றவில்லை...என்னு டன் வாழ்ந்து ஒரு சுகத்தையும் அநுபவிக்காத நீ என் பிரிவை எப்படிப் பொறுப்பாய் ? சரஸு ! அந்தக் கிராதகியின் நெஞ்சம் நெருப்பு! அனல் ! அது என்னைச் சித்திரவதை செய் கிறது. நீயோ! 'புஷ்பம்!' உன் நெஞ்சம் மென்மை யானது ! உன் வாழ்வைப் பாழாக்கியதற்கு என்னை மன்னித்து விடு! . . . .

அவர் பேச முடியாமல் 'லொக் லொக்' கென்று இருமினார். ''அப்படி எல்லாம் சொல் லாதீர்கள்; உங்களால் நான் ஒரு துன்பமுமடைய வில்லை ; இன்பமே அடைகிறேன்........'' என்று சொல்லி விசித்து அழுத என்னை, ஒரு கணம் பித்துப் பிடித்தவர் மாதிரி பார்த்து 'சரஸு!........ போய்ப் படுத்துக்கொள்........அதோ லீலா !'' என்றார். என் இதயமே நழுவிவிட்டது.

''ஏண்டீ! என்னைப் பற்றிக் குற்றம் குறை கூறவேண்டுமென்று எத்தனை நாளாய்க் கறுவிக் கொண்டிருக்கிறாய் ? போடிபோ! இனி உனக்கு

வீட்டில் வேலையில்லை!....'' என்று கட்டிடமே அதிரும்படிக் கூச்சலிட்டு என் கன்னத்தில் 'பளீர்' என்று அறைந்து, பிடித்துத் தள்ளினாள் லீலா. நான் நடுவாசலில் வீழ்ந்தேன். கதவு 'படீர்' என்று சாத்தப்பட்டு, தாழ்ப்பாளிடப்பட்டது.

எட்டுமாதக் கர்ப்பிணியாயிருந்த நான், அவரது முதல் மனைவியின் அபாண்டமான பழிக்கு ஆளாகி, என் பிறந்தகம் வந்து சேர்ந்தேன். எனக்குத் தாயில்லை. தகப்பனாருக்கு வயதாகி விட்டது; கிழவர்; கண்ணீரும், கம்பலையுமாய் நான் அங்கே வந்து நின்றது கண்டு அவர் உடல் அதிர்ச்சியால் குலுங்கியது. நான் அவர் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதேன்.

''சரஸு! என்னம்மா அழுகிறாய்?'' என்று கேட்ட அவருக்கு எதையோ கூறி மழுப்பினேன். ஆனால் அதை அவர் நம்பவில்லை.

நாட்கள் ஓடிக்கொண்டுதானிருந்தன இரவில் நான் படுக்கையில் உறங்காமல் புரண்டேன். அவர் நினைவுதான்! ''ஜுரத்துடன் விட்டுவிட்டு வந்தேனே!.......அவர் உடம்பு குணமா யிருக்குமா? 'இனி நான் பிழைப்பேனென்று எனக்குத் தோணவில்லை' என்றாரே! ஒரு சமயம்.....'' இந்த எண்ணச் சுழற்சியில் பல இரவுகள் கண்ணீர் வடித்தேன்.

மாதங்கள் உருண்டன; எனக்குத் தங்க விக்கிரகம் போன்ற ஒரு குழந்தை பிறந்தது! அன்று வானில் நிலா அழகாகப் பூத்திருந்தது; ஆனால் அதனின்றும் ததும்பி வழிந்த குளிர்ச்சியான ஒளி வெள்ளத்தை நான் ரஸிக்கவில்லை. என்மனம் எங்கோ லயித்துப்போயிருந்தது. கன்னத்தில் கை வைத்தவாறு உட்கார்ந்திருந்தேன் சிலை மாதிரி. குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. நான் உறங்காமல் விழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த என் தந்தை மெள்ள என்னருகில் எழுந்து வந்தார். என் முகத்தைப் பார்த்தார். என் கண்ணீரைத் துடைத்து ''சரஸு! எதை நினைத்தம்மா தினமும் அழுகிறாய்? அவனை எண்ணியா? அவன் சம்மதித்துத் தானே அம்மா இங்கு வந்தாய்? சொல்லேன், சரஸு!......'' என்றெல்லாம் கேட்டார். நான் பதில் பேசாமல் உள்ளே அழுத என் குழந்தை மோகனைத் தேற்றச் சென்றேன். என் தகப்பனார் ஏதோ துக்கத்துடன் முனகிக்கொண்டே, உறங்காமல் தம் படுக்கையில் புரளுவதை நான் பார்த்தேன்.

* * *

மறுதினம் என் தந்தை பரபரப்புடன் தென்பட்டார்; விடியற்காலையிலேயே ஸ்நானம் செய்து விட்டு எங்கேயோ கிளம்பினார். நான் அவர் கரத்தை

அன்புடன் பற்றியபடி, "எங்கேயப்பா போகிறீர்கள் ?" என்று கேட்டேன். அவர்தம் கண்களில் நீர் தளும்பியது. "சரஸு! உன் சுகத்துக்காகப் பாடுபடுவதைத் தவிர எனக்கு வேறென்ன வேலே? குழந்தை பிறந்து விட்டது: உடனே வா...." என்று அவனுக்குக் கொடுத்த தந்திகூடத் திரும்பி வந்துவிட்டதே! அவன் எங்கே இருக்கிறுன் என்பதை அறிந்துவரத்தானம்மா போகிறேன்........" என்று கூறி அன்புடன் என் தலே மயிரை ஒழுங்கு படுத்திஞர் அவர். சில நிமிஷ மௌனத்துக்குப்பின் அவர் தம் தள்ளாத உடலே நிமிர்த்திக்கொண்டு நடந்து, கோடியில் சென்று மறைந்தார்.

* * *

மாலே மணி 5 அடித்தது. 5-30 மணிக்கு வரும் வண்டியில் தந்தை வரலாமென்றெண்ணி, வாசலில் நின்று பார்த்துக்கொண்டேயிருந்தேன். குறிப்பிட்ட ரயில் 'கூக்கூ..' என்று கூவிவிட்டுக் கிளம்பியது காதில் விழுந்தது. என் தந்தை தெருக்கோடியில் வருவதும் தெரிந்தது. ஆனுல்......ஐயோ! நான் அதை எப்படிச் சொல்வேன் ?—'அவ'ரைக் காணேம்; குழந்தை கண்ணன் மட்டும் அவர் இடுப்பில் இருந்தான்.

"எங்கேயப்பா அவர்? எங்கே அப்பா லீலா ?" என்று பதறிப்போய்க்கேட்டேன். அவர் கண்ணனே என்னிடம் தந்துவிட்டுப் பேசாமல் உள்ளே சென்ருர். நான் வழியும் கண்ணீருடன் அவரைத் தொடர்ந்தேன். அவர் தம் படுக்கையில் வீழ்ந்து அழுது கொண்டிருந்தார். கண்ணனே அணைத்துக்கொண்டு அவரருகில் சென்றேன். அவர் மெல்லத் தலேயைத் தூக்கி என்னேப் பார்த்தார். நான், "என்னப்பா?" என்றேன். "சரஸு! என் கண்ணே! அதை நான் எப்படிச் சொல்வேன்?" என்று விம்மிஞர் அவர். "சரஸு! நாகராஜனுக்கு, உனக்கு முந்தியே ஒருமுறை மணமாகி விட்டதாமே? அவள் பெயர் லீலாவாமே? இந்தக் குழந்தை அவளுடைய தாமே? அவள் உன்னே அளவுக்கு மீறி இம்சித்தாளாமே? அவள்தான் உன்னே விரட்டிஞளாமே?.......சரஸு, அழாமல் கேளம்மா; உன்னே லீலா விரட்டிவிட்டதும்; நாகராஜன் அவள் மீது கோபித்துக்கொண்டு எங்கேயோ போய்விட்டானும். லீலா கதறிஞளாம். அதனுலேயே அவளுக்கு ஜுரம் கண்டு........இந்த ஒரு குழந்தையையும் தனியே தவிக்கவிட்டு இறந்துவிட்டாள்—இதெல்லாம் என்னிடம் கூறி, எதிர்வீட்டு மனிதர் என்னிடம் அந்தக் குழந்தையை ஒப்படைத்தார்......"

"என்ன லீலா போய்விட்டாளா...." என்று என்னேயுமறியாமல் இரைந்து கேட்ட நான் துக்கம் நெஞ்சை அழுத்த, 'பொத்'தென்று வீழ்ந்துவிட்டேன்.

* * *

கண்ணீர் விட்டுக்கொண்டே இடது கையால் கண்ணனேயும், வலது கையால் மோகனேயும் பிடித்தபடி நிற்கும் என்னே என் தந்தை அப்புறம் பார்க்கவில்லே; கண்ணனும், மோகனும் உல்லாசமாய் சகல துக்கத்தையும் மறந்து விளேயாடுவதைப் பார்க்காமல் கண்ணே மூடிவிட்டார்!

நான் ஆதரிப்பாரற்றுக் கிடந்தேன்; 'எனக்கு இனி யார் கதி? என்னேக் காப்பாற்றுவார் யார்?' என்றெல்லாம் எண்ணி, தெய்வத்தைச் சரணமடைந்தேன். உண்மையில் என்னேப்பற்றிக் கவலே கொள்ளவில்லே. ஆனுல் குழந்தை கண்ணனும், மோகனும் காப்பாற்றப்பட்டால் போதும் என்ற சிறு ஆசையே என் மனசில் தேங்கி யிருந்தது.

எதிர்வீட்டில்ஒரு மனிதர் இருந்தார்; வயசானவர்தாம். இளகிய இருதயம் படைத்தவர். ஒரு சமயம் என் தந்தை அவருக்கு அளவற்ற உதவி புரிந்தாராம். அதை மறக்காத அவர் எங்களேக் காப்பாற்றி ஆயுள் பூராவும் பாதுகாப்பதாய்க் கூறிஞர். அவர் மனேவியின் உதார குணத்தையும், விரிந்த மனப்பான்மையையும் என்ஞல் கூறமுடியாது. என் பரிதாபமான நிலேமையைக் கண்டு அந்த வருத்தம் தனக்கே நேர்ந்துவிட்டதாய்க் கருதி உள்ளமுடைந்து போஞள்; என்னேத் தேற்றிஞள். வித்தியாசமே இல்லாமல் எனக்குத் துணிமணிகள் நிறைய வாங்கித் தந்தாள். மோகனும், கண்ணனும் ஒற்றுமையாய்ப் பள்ளிக்குப் போய்வந்தனர். அவரில்லாத குறை ஒன்றைத் தவிர மீதி எல்லாவற்றிலும் அளவற்ற சந்தோஷமடைந்தேன் நான்.

* * *

ஏதோ காரணமாய் பம்பாய்க்கு அவர்கள் குடும்பம் மாறியது. என்னேயும், குழந்தை மோகன், கண்ணன் இவர்களேயும் அழைத்துச் சென்றனர். மோகனும் கண்ணனும் அங்கே, பக்கத்திலிருந்த ஒரு பள்ளியில் படித்து வந்தனர்.

தினமும் மாலே மணி 5 அடித்ததும் அவர்க

ளிருவரும் பள்ளியிலிருந்து திரும்புவார்கள். அப்போது அவர்நினைவு வரும். கண்ணீர் விடுவேன்,

* * *

அன்றைய தினம் மணி ஐந்துக்குமேலாகியும், இருவரும் பள்ளியினின்றும் திரும்பவில்லை. என் மனம் என்ன வெல்லாமோ எண்ணியது. மோகனும், கண்ணனும் தினமும் திரும்பிவரும் சாலையை வெகுநேரம் வரை பார்த்துக்கொண்டே யிருந்தேன். ஒருவரையும் காணோம். சாலையில் ஒரு குழந்தைமட்டும் ஓடி வருவது தெரிந்தது. மோகனா கண்ணனா என்று தெரியவில்லை; "அம்மா...." என்று அலறிக் கொண்டுவந்து மோகன் என் இடுப்பைக் கட்டிக்கொண்டான்; அவன் கண்களில் நீர் பெருகியது.

"என்னடா மோகன்? எங்கேடாகண்ணன்?" என்று பதட்டத்துடன் கேட்டேன். அவன் விம்மலுடன் கூறினான: "அவனை ஒரு மோட்டார் அறைச்சுடுத்து...."

என் தலையில் இடி விழுந்தது! ஆஸ்பத்திரிக்கு ஓடினேன்; கண்ணன் தலையில் ஒருகட்டு இருந்தது. சுயநினைவு இல்லை; கண் இமைகள் மூடிக் கிடந்தன. 'கண்ணா! கண்ணா!' என்று கூவி அழைத்தேன்; அவன் எழுந்திருக்க வில்லை. டாக்டரும் "பிழைப்பதரிது" என்று கூறிவிட்டுச் சென்றார். நான் விம்மி அழுதேன்.

சிறிதுநேரங் கழித்து டாக்டர் இன்னொரு முறை உள்ளே கண்ணனைச் சோதிக்கவந்தார். அவர் பின்னாடி வந்துகொண்டிருந்த மனிதரைப் பார்த்ததும் என் உடலில் மின்சார அதிர்ச்சி பாய்ந்தது. அது என் கணவர்!—அவர் கண்ணனிடம் ஓடி வந்தார். "டாக்டர்!இவன் பிழைப்பானா? இந்தக் குழந்தைமீது காரை மோதியது இந்தப் பாவிதான்...."என்று அழுதார். என்னைத் திரும்பிப்பார்த்த அவர், "சரஸு!" என்று விண் எதிரொலிக்கக் கதற எண்ணியதை எப்படியோ அடக்கிக்கொண்டார்.

நானும் அவரும் கண்களில் நீர் தளும்ப, கண்ணனையே பார்த்துக் கொண்டிருந்தோம். டாக்டர் அவனைச் சோதித்துக் கொண்டிருந்தார். வரவர அவரது முகம் மலர்வதைக் கண்டேன். கடைசியில் "நல்லவேளை....பையனுக்கு இனி ஆபத்தில்லை; பிழைத்துவிடுவான்!" என்று சொல்லிவிட்டுப் போனார். நான் பாயந்து கண்ணனருகில் சென்றேன். அவர், அவன் கன்னத்தில் ஆயிரம் முத்தங்கள் கொடுத்தார். கண் விழித்த கண்ணன் அவரைக் கண்டதும், "அ..ப்..பா!" என்று கூறி அவர் முகத்தைத் தடவினான்.



அவர் கண்களில் 'குபு குபு' வென்று நீர் பெருகிவிட்டது. நான், "அழாதீர்கள்!" என்று தேற்றினேன்.

* * *

அன்று எங்கள் மனம் குதூகலத்திலாழ்ந்து கிடந்தது. அவரும் ஆபீசிலிருந்து முன்னாடியே வந்து விட்டார். மாலை மெல்லப் படர்ந்து வருவது கண்டு, மோகனையும் கண்ணனையும் வரவேற்க நானும் அவரும் வாசலில் நின்று கொண்டிருந்தோம். குழந்தை மோகனும், கண்ணனும் ஒருவர் கரத்தை மற்றொருவர் பிடித்துக்கொண்டு வேகமாய் ஓடிவந்தனர். "கண்ணா! என்னிடம் வா!" என்று நான் கூப்பிட்டதும், அவன் வேகமாய் ஓடிவந்து என்னைக் கட்டிக்கொண்டான். நான் அவனை அளவற்ற பாசத்துடன் வாரி அணைத்து முத்தமிட்டேன். அவர் மோகனை அணைத்தபடி இன்மொழிகள் பல பேசி, ஹாஸ்யத்தை நடுவே புகுத்தி, அவனைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்து, அவரும் அச்சிரிப்பில் கலந்து கொண்டார்.

*


பார்வதி
விமர்சனம்
வாழ்க்கை

திரை அழகு

"அந்தக் காலத்திலே நான் காலேஜிலே படிச்சிண்டிருந்த போது இந்தமாதிரி ஒரு சினிமா, டிராமா... ஊஹூம்; மூச்சு விடக்கூடாது!" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தார் நண்பர்.

"என்ன, ஸ்வாமி! திடீரென்று உங்களுக்கு இப்போது பூர்வாசிரமத்தின் நினைவு வந்துவிட்டது? அந்தக் காலத்திலே, அதுவும் சினிமாவிலே காண என்ன இருக்கிறது—என்ன கண்டீர்?" என்று கேட்டேன்.

"வாழ்க்கைதான் ஐயா, வாழ்க்கைதான்!" என்று பளிச்சென்று பதில் வந்தது.

"வாழ்க்கைக்கும் சினிமாவுக்கும் என்ன சம்பந்தம்?"

"நன்றாய்க் கேட்டீர்! நீர் என்ன பூலோகத்தில் இருக்கிறீரா, கைலாசத்தில் இருக்கிறீரா?...... நீர 'வாழ்க்கை' என்ற படத்தை இன்னும் பார்க்கவில்லை யென்று தெரிகிறது—"

நண்பர் இதைச் சொன்னதும் எனக்கு அரை விநாடியில் விஷயம் விளங்கிவிட்டது, அந்தப் படத்தை நான் அதுவரை பார்க்கவில்லைதான்!

"இல்லை ஸ்வாமி; இன்னும் பார்க்கவில்லை. எங்கே, நம்ம வாழ்க்கையே பெரிய சினிமாவாக......"

"நிறுத்தும்! இந்த வேதாந்தத்தை யெல்லாம் நீர் இன்னும் அந்தச் சினிமாவைப் பார்க்காததற்காக என்னிடம் அளந்து கொட்டாதேயும்! உமது வாழ்க்கையே ஒரு சினிமாவாக இருப்பதை நீர் மனசால் எண்ணிப் பார்த்துகொண்டிருப்பது மட்டும் போதாது; ஏவி. எம். தயாரிப்பான 'வாழ்க்கை'யில் உம்மைத் தத்ரூபமாய்க் காணலாம்; போய்ப் பாரும்..."

"பார்த்தால் போகிறது...."

"அப்படி இழுத்தாற்போல் சொல்லாதேயும். இப்படித்தான் அந்தக் காலத்துலே நான் காலேஜிலே வாசிச்சிண்டிருந்த போது எந்த விஷயத்திலேயும் அசிரத்தையாயிருப்பேன்..."

"நான் அப்படி இருக்கமாட்டேன்; இன்று அவசியம் போய்ப் பார்க்கிறேன்" என்று, நண்பர் என்னை நூற்றுக்கு நூறு நம்பும் முறையில் சொன்னேன்.

"'வாழ்க்கை'யைப் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்; மறுபடியும் நான் வருகிறேன். படத்தைப்பற்றிய உங்கள் சாங்கோபாங்கமான அபிப்பிராயத்தைச் சொல்லவேணும். நான் இந்தப் படத்தைப்பற்றிக் கொண்டிருக்கிற ஒரு முக்கியமான—ரகசியமான அபிப்பிராயத்தைக் கடைசியில்தான் உம்மிடம் சொல்லப்போகிறேன்" என்று சொல்லிவிட்டு நண்பர் எழுந்து சென்றுவிட்டார்.

அடுத்த இரண்டு நிமிஷங்களில் தெருவில் மீண்டும் நண்பரின் குரல் கேட்டது.

வாழ்க்கை

கதை, வசனம்: ப. நீலகண்டன்

டைரக்ஷன்:

ஏவி. மெய்யப்பன்

நடிகர்கள்:

டி. ஆர் ராமச்சந்திரன் கே. சாரங்கபாணி, எஸ். வி. சகஸ்ரநாமம், சுப்பையா, எம். எஸ். கருப்பையா, வைஜயந்திமாலா எம் எஸ் திரௌபதி எஸ் ஆர் ஜானகி முதலியோர்

நடனம்:

லலிதா—பத்மினி

தயாரிப்பு:

ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்

“அந்தக் காலத்திலே நான் காலேஜிலே வாசிச்சிண்டிருந்தபோது....”

ஜன்னல் வழியாகப் பார்த்தேன். இன்னொரு புது நண்பரிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தார் நண்பர்.

* * *

அன்றிரவே ‘வாழ்க்கை’யைப் பார்த்தேன். அப்போதுதான் புரிந்தது, நண்பர் என்னைச் சந்தித்தபோது, “அந்தக் காலத்திலே நான் காலேஜிலே” என்று பல்லவி பாடியதன் ரகசியம்.

‘வாழ்க்கை’ கதை மிகவும் அபாரமான கதை. தமிழ்நாட்டு மக்களிடை இன்று மலிந்து காணப் பெறும் பல்வேறு சம்பவங்களின் தொகுப்பே யாகும் வாழ்க்கை கதை. ஆயினும், அநுபவத்தில் பல சந்தர்ப்பங்களில் மேலெழுந்தவாரியாக நாம் நோக்கும் பல சம்பவங்களும் இங்கே கதையில் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு இணைந்து, மோதி, எதிரொலி செய்கின்றன. கருத்தைக் கவரும் உயர்வான சம்பாஷணையும் சம்பவங்களின் விறு விறுப்பும் கூடிக் கதையை நம் மனத்தில் நன்கு ஒட்ட வைக்கின்றன.

மிகவும் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த சிவசங்கர முதலியாரின் மகள் மோஹனா கலாசாலையில் வாசித்துக் கொண்டிருக்கிறாள்; மிகவும் அழகு வாய்ந்தவள் என்பதுடன் நாகரிகப் பண்புகள் பலவும் வாய்ந்து, சங்கீதம் நடனம் முதலியவற்றில் தேர்ந்தவளாயும் விளங்குகிறாள். தன் தம்பி மூர்த்திக்கே தன் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்துவிடவேண்டும் என்று நினைக்கிறாள் மோஹனாவின் தாயார். இடையில் மூர்த்தி கிராமத்தில் உள்ள தன் மாமாவின் இல்லத்திற்குச் செல்கிறான். அங்கே மீனாட்சி என்ற ஒரு அழகான பெண்ணைக் காண்கிறான்; அவள் அழகிலும் தோற்றத்திலும் மனத்தைப் பறி கொடுக்கிறான். மீனாட்சியின் தகப்பனாருக்குப் பத்தாயிரம் ரூபாய் கடன் இருப்பதாலும் அக்கடனை அடைக்க வேறு வழி யில்லாததாலும், கடன் கொடுத்தவன் விருப்பத்திற் கிணங்கக் கடனுக்கு ஈடாக மீனாட்சியை அக்கிழவனுக்கு மணம் செய்து கொடுத்துவிடுவதென்றும் அவள் பெற்றோர் மனமில்லாது தீர்மானம் செய்கின்றனர். இதையறிந்த மீனாட்சி தனியே சென்று மனம் வருந்துகிறாள். அவள் மனோ நிலை யறிந்த மூர்த்தி அவளை இந்த ஆபத்தினின்றும் காப்பாற்றத் தன் ஊருக்குச் சென்று பத்தாயிரம் ரூபாய் கொண்டு வந்து அவள் தகப்பனாரிடம் கொடுத்துக் கடனை அடைக்கச் செய்து விடுவதுடன் மீனாட்சியைத்

தானே கல்யாணம் செய்து கொள்வதாயும் வாக்குறுதி கொடுக்கிறான். அவன் பேச்சில் கருத்தழிந்த மீனாட்சி தன் கற்பையும் அவனுக்கு அர்ப்பணித்து விடுகிறாள். மூர்த்தி ஊர் திரும்பினான். தன் சகோதரியின் பெண் மோஹனாவின்மீது காதல் கொண்டிருந்த மூர்த்தி தன் சகோதரியிடம் அடிக்கடி மோஹனாவின் விருப்பத்தையறிந்து சொல்லும்படிக் கோருகிறான். மோஹனாவோ தான் முன்பின்னறியாத எழுத்தாளன் ‘அசோகன்’ என்பவன்மீது காதல் கொண்டிருக்கிறாள். அவன் எழுத்துக்களில் அவளுக்கு அபாரமான மோகம். ‘காதல் பரிசு என்ற அசோக’னின் பரிசு நாவலை ஆர்வத்துடன் படிக்கிறாள். அந்த நாவலை எழுதியதற்காக அசோகனைப் பாராட்டு

கிருர் பத்திரிகாசிரியர்; பாராட்டு விழாவில் அசோகனும் மோஹனுவும் அறிமுக மாகின்றனர்.

மூர்த்தி மீனுட்சியை மறந்து விடுகிருன். ஆனால அவளோ அவன் பேச்சை நம்பி, தன் கற்பையும் இழந்தபின் கர்ப்பம் தரித்துவிடுகிருள். அவள் தாயார் இதை யறிந்து மனம் பதறு கிருள். ஊராருக்குத் தெரியாம லிருப்பதற்காக இந்த உலகத்தை விட்டே போய்விடுவதென்ற தீர்மானத்துடன் நள்ளிரவில் கடும் மழையில் வெளியேறி விடுகிருள் மீனுட்சி. சாகத் துணியும் தறுவாயில் மனச்சாட்சி இடம் கொடாமல் மூர்த்தியைத் தேடிக்கொண்டு செல்லத் தூண்டுகிறது. மூர்த்தியைத் தேடிக்கொண்டு சென்னையில் அலை கிருள் அவள். இடையில் ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தையைப் பெறுகிருள். குழந்தையுடன் மீண்டும் அலைந்து கடைசியில் மூர்த்தியின் வீட்டைக் கண்டு பிடிக்கிருள். மூர்த்தி அவளை ஏற்றுக் கொள்ள மறுக்கிருன்.

மோஹனுவுக்கும் அசோகனுக்கும் கல்யாணம் நிச்சயமாகிறது. கல்யாண தினத்தன்று அசோகன் ஒரு நகைக் கடையின்முன் காரை நிறுத்தி விட்டு உள்ளே சென்று பேரம் செய்து கொண்டிருக்கிருன். குழந்தையை மட்டும் எங்காவது ஓரிடத்தில் விட்டு விட்டுத் தான் இறந்து விடுவது என்ற தீர்மானத்துடன் குழந்தையை அசோகனின் காரின் பின்புறம் விட்டுச்செல்கிருள் மீனுட்சி. நடுவழியில் இதையறிந்த அசோகன் காரை நிறுத்திவிட்டுக் குழந்தையை எடுத்துப் பக்கத்தில் இருந்த ரிக்ஷாவில் வைத்துவிட்டுப் போய் விடுகிருன். இதைப் பார்த்துக்கொண்டே வந்த மூர்த்தி அக் காட்சியைப் படம் எடுத்து விடுவதுடன் தன் ஆள் ஒருவன் மூலம் அக் குழந்தையையும் எடுத்துக்கொண்டு கல்யாண வீட்டினுள் நுழைகிருன். அவன் முயற்சியால் அசோகன் -மோஹனு கல்யாணம் தடைப் படுகிறது.

கதையின் முடிவைத் திரையில் காணுங்கள். விறு விறுப்பு அதிகம வாய்ந்த கதை என்பதற்கு உதாரணமாகக் கதையை இம் மட்டோடு நிறுத்துவது பொருந்தும்.

டைரக்ஷன்

வாழ்க்கையை வறுமை—செம்மை என இரு கூறுகளாகப் பிரித்து, காட்சிகளை அவற்றுக்கிசைய மாறிமாறிக் காண்பிப்பதானது ஏவி. மெய்யப்பன் அவர்களின் டைரக்ஷன் திறமையைக் குறிக்கின்றது. நடிகர் சாரங்க பாணிக்கு மிகப் பொருத்தமான ஒரு பாத்திரத்தை யளித்து, அவர் தோன்றும் காட்சிகளிலெல்லாம் ‘கலகல’ வென்று அவர் விளங்குமாறு செய்துள்ளார் டைரக்டர். அவர் படம் ஆரம்பமுதல் முடியும் வரையிலும் “அந்தக் காலத்திலே நான் காலேஜிலே படிசசிண்டிருந்த போது” என்று சொல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நம்மால் சிரிக்காமல் இருக்கமுடியவில்லை.

ஸ்ரீ ஏவி. மெய்யப்பன் அவர்களின் சிறந்த டைரக்ஷனுக்கு அத்தாட்சியாகப் பல காட்சிகள் படத்தில் உள்ளன; அவை நம் மனத்திலும் உள்ளன. மோஹனுவும் அசோகனும் தத்தம் வீடுகளின் மாடியிலிருந்து சம்பாஷித்துக் கொள்ளும் காட்சி, கிராமத்தில் ஊர் வாய்க்குப் பயந்து சாகத்துணியும் நிலையில் உள்ள மீனுட்சியின் மனோநிலையை எதிரொலிக்கும் காட்சி முதலியவை அபாரம்.

நடிப்பு

இந்தப் படத்தில் யார் யார் ‘நடி’த்திருக்கிருர்கள் என்றே திட்டமாகச் சொல்ல முடியவில்லை. ஏனெனில், கதையின் வேகத்தில் நம் மனம் இழுபட்டுச் செல்லும் நிலையில் படத்தின் மற்ற அம்சங்களில் மனத்தை ஈடுபடுத்தவே இயலவில்லை. கண்முன்னுல் தோன்றி யிருப்பவர்கள் நடிகர்கள் என்ற எண்ணம் நம் மனத்தில் இருந்தால்தானே? ஒவ்வொருவரும் அந்தந்தக் கதாபாத்திரமாகவே மாறி நிற்கின்றனர். அவரவர் இயல்புக்கேற்ற பாத்திரம் அளித்திருப்ப

தானது அவர்களின் திறமையை இன்னும் வளர்க்க உதவி செய்கிறது.

'சோகரஸத்தை இதைவிடத் திறமையுடன் ஏற்று நடிக்க முடியாது' என்று சொல்லும் அளவுக்கு எம். எஸ். திரௌபதி நடித்திருக்கிருர். வைஜயந்திமாலா திரைக்கு ஒரு புது நடசத்திரமாயினும், சினிமா உலகில் பத்துவருஷங்களுக்கு மேற்பட்ட அநுபவம் வாய்நத நடிகை என்று மதிப்பிடும் அளவில் நடித்திருக்கிருர். அவருடைய நடிப்பு, பேச்சு, பாட்டு, நடனம், முகம், தோற்றம் முதலிய யாவும் படம் பார்த்தோர் அனைவரின் மனக்கண் முன்பு நிரந்தரமாய் நிலைத்து நின்றுவிடும் என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன். டி. ஆர். ராமச்சந்திரன் மிகவும் ஹாஸ்யம் ததும்ப நடிக்கிருர். தனக்குத் துளியும் சம்பந்தமில்லாத அந்தக் குழந்தையுடன் அவர் படும்பாடு! அந்தக் காட்சியை, படம் பார்த்த யாரும் தனிமையில் நினைத்துக்கொண்டாலகூட சிரிப்பு வராமலிராது. எஸ். வி. சகஸ்ர நாமம் வழக்கம்போல் வில்லன் வேடம் தாங்கி நடிக்கிருர். அவர் தோன்றும் காட்சிகளில், குறிப்பாக படத்தின் பிற்பகுதியில், அவருடைய முக பாவம்தான் குறிப்பாய்க் கவனிக்கப்படவேண்டியதாகும். மீனாட்சி கையில் குழந்தையுடன் அவர் முன் நின்று கெஞ்சும்போது அவர் உள்ளத்தில் எழும் கோபம், வெறுப்பு, பச்சாத்தாபம் முதலிய பலவகை உணர்ச்சிகள் கணத்துக்குக் கணம் மாறுகின்றன. அவை அந்த முகபாவத்தில் நன்கு தெரிகின்றன.

மற்ற அம்சங்கள்

படத்தின் மற்ற அம்சங்களான ஒளிப்பதிவு ஒலிப்பதிவு முதலியவை முதல்தரமாக உள்ளன. மோஹனுவின அதி உன்னதமான நடனங்களுக்கேற்ற காட்சிகளும், அந்தஸ்து வாய்ந்த அவள் வீட்டின் மற்றக் காட்சிகளும் மிக உயர்தரமாக இருக்கின்றன. லலிதா–பத்மினியாரின் நடனமும் இப்படத்தில் உள்ளது. படத்தின் ஆரம்பத்திலேயே அவர்களை அறிமுகப்படுத்தி, கதை ஆரம்பிக்கு முன்னரே அவர்களை மறைத்தும் விடுகின்றனர். 'வாழ்க்கை' கதைக்கும் இச் சகோதரியரின் நடனத்திறதும் துளிக்கூடச் சம்பந்தம் இல்லையாயினும், ஜன ரஞ்சகமான முறையில் நடனம் ஆடும் இவர்களின் நடனத்தை இணைப்பது அவசியம் என்று கருதித்தான் ஸ்ரீ ஏவி. எம் அவர்கள் இதைச் செய்திருக்கவேண்டும். ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள், எம். எல். வசந்த குமாரி, டி. எஸ். பகவதி முதலியோரின் பின்னணி இசைகள் படத்திற்கு நிலையான ஒரு புகழ் சுருதியை அமைத்துத் தருகின்றன. பொதுவாக 'வாழ்க்கை' 'மேஞு'வின் முத்திரையைப் பரிபூரணமான வகையில் பெற்றிருக்கிறது. அவர் திறமைக்கு இன்னும ஒரு சானறு இபபடம். தமிழ் நாட்டின் இயல்பை-தமிழர் தம் வாழ்க்கையை—அப்பட்டமாகச் சித்திரிக்கிறது இப்படம். ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையேதான் இப் படக் கதையுமாளுலும், உருவத்தின் பிரதிபத்தைக் கண்ணுடியில்தான் கண்டுகொள்ள முடிவது போல், ஒவ்வொரு தனி மனிதனும் தன் வாழ்க்கையை ஏவி. எம். அவர்களின் "வாழ்க்கை"யில்தான் காண முடியும்; காண வேண்டியது அவசியம்.

* * *

என் நண்பர் சொன்னதற்கிணங்க நான் என் வாழ்க்கையை 'வாழ்க்கை'யில் கண்டு விட்டு அவரைத் தேடிச் சென்றேன்.

"என்ன படம் எப்படி?" என்று கேட்டார் நண்பர்.

"அபாரம்!"

"அப்படிச் சொல்லும்! என்னமோ வேதாந்தம் பேசினீரே, உம்ம வாழ்க்கையே ஒரு சினிமாவாக இருக்கிறது, அது இதென்று.... அந்தக் காலத்துலே நான் காலேஜிலே வாசிச்சிண்டிருந்த போது..."

"சரிதான், ஸார்! இதுமாதிரி இன்னும் எத்தனை பேர் வாழ்க்கையைப் பார்த்து விட்டு 'அந்தக் காலத்திலே நான் காலேஜிலே..' என்று பல்லவி பாடுகிருர்களோ!" என்றேன்.

"அதில்லை ஸார், அந்தக் காலத்திலே நாங்கள் காலேஜிலே ஒரு நாடகம் போட்டோம்...."

"அதிருக்கட்டும்; படத்தைப் பார்த்துவிட்டு வந்து அபிப்பிராயம் சொல்லவேணும் என்றீர்களே?"

"ஆமாம்! சொல்லும்!"

"நீங்கள் சொல்லுங்கள்; என்னமோ ரகசியமான முக்கியமான அபிப்பிராயத்தைக் கடைசியிலேதான் சொல்லப் போகிறேன் என்றீர்களே!"

"ஓ! அதுவா? படம் முதல்தரம்! ஏ ஒன்! அவ்வளவுதான்! நீர் என்ன சொல்கிறீர்?"

"அதேதான்; அதேதான்!" என்று ஆமோதித்து விட்டு, "அந்தக் காலத்திலே.." என்று நண்பர் ஆரம்பிப்பதற்கு முன் அவரை ஜாடையாகப் பிரிந்து சென்றேன். *

15 வருடத் தொண்டு

சினிமா விளம்பரங்கள்
போஸ்டர்கள்-பேனர்கள்
ஸ்லைடுகள்-இனமல் போர்டு
தியேட்டர் அலங்காரங்கள்
கட் அவுட்கள் ☆
முதலிய வேலைப்பாடுகளுக்கும்
மேக் அப் - ஸ்டில்கள் ☆
மற்றும் எல்லாவிதமான
புகைப் படங்கள் எடுப்பதற்கும்
கலர்-ஆப்டோன்-லைன்-
பிளாக்குகள் தயாரிப்பதற்கும்
நிரந்தரப் புகழ் வாய்ந்த ஸ்தாபனம்

பாரத் ஸ்டூடியோ

போன்: 8172 சென்னை. 2.

பார்வதி
விமர்சனம்
கிருஷ்ண
விஜயம்

கிருஷ்ண விஜயம்

திரைக் கதை :

டைரக்ஷன் :
சுந்தரராவ் நட்கர்ணி

வசனம் :
வேலவன்
கர்மயோகி

நடிகர்கள் :
நரசிம்ம பாரதி ஆர். பாலசுப்ரமண்யம், ஸி. வி. வி. பந்துலு, மாஸ்டர் ஏ. எல். ராகவன், என். ஸி. வஸந்த கோகிலம், டி. பிரேமாவதி எம். எஸ். சிவபாக்கியம், அங்கமுத்து, முதலியோர்.

நடனம் :
லலிதா—பத்மினி

தயாரிப்பு :
ஜூபிடர் பிக்சர்ஸ்

தருமத்தின் வாழ்வைச் சூது கவ்வும். தருமம் மறுபடியும் வெல்லும். அவ்வெற்றியை விரைவாக்க அவதார புருஷர்கள் தோன்றி உதவுவர். இவ் வுண்மைகளை வலியுறுத்த எழுந்தவைதாம் புராணக் கதைகள். கிருஷ்ணாவதாரக் கதையும், கிருஷ்ண லீலைகள் பற்றிய விவரங்களும் நாடறிந்தவை. நாடக மேடைகளில் ஆயிரமாயிரம் தடவைகள் நடிக்கப்பட்டு மக்கள் மனங் கவர்ந்தவை. அவற்றை மக்களுக்கு அறிமுகமான வகையிலேயே, காமிரா வித்தைக் காட்சிகள் பலவற்றையும், செவிக்கினிய சங்கீதம், எழிலான நடனங்கள் ஆகியவற்றையும் இணைத்து ஜனரஞ்சகமான படமாகத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள் ஜூபிடர் பிக்சர்ஸார்.

ஆர்ப்பரிக்கும் அலைகடலின் தொலை தூரத்தில் அருணன் உதயமாகிறான். ஆனந்தமாக ஆதவன் உதயத்தை வரவேற்று வழிபடுகின்றனர் பக்தர்கள். உதயத்துடனேயே உதயமாகின்றன கம்சனுடைய கொடுமைகளும். பக்தர்கள் துன்புறுத்தப்படுகின்றனர் ; யாகங்கள் அழிக்கப்படுகின்றன; ரிஷிபத்தினிகள் அரக்கர்களின் அக்கிரமங்களுக்கு ஆளாகி அவதியுறுகின்றனர். அவ்வநீதிகளுக்கு அஞ்சி, பாறை முகடுகளினின்றும் பாதாளத்தில் குதித்துத் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்கின்றனர் பத்தினிகள். கம்சனின் கயமையில் சிக்கி அல்லாடுவதைவிட அலைகடலில் ஐக்கியமாகி விடுவதேமேல் எனக் கருதிய ரிஷிகளும், பக்தர்களும் பரந்தாமனைத் தொழுதபடியே பாற்கடலை நோக்கி விரைகின்றனர். அலைகளுக்கு மேலே எழும் தாமரையில் நாரதர் தோன்றுகிறார். அக்கிரமக்காரனை அழிக்க அரி அவதரித்திருக்கும் கதையைச் சொல்கிறார். பூமிதேவியின் முறையீடு முதல் கிருஷ்ண ஜனனம், குழந்தை கோகுலத்துக்கு மாற்றப்படுவது, யசோதரையின் மகவாய் அவதரித்த மாயையைத் தேவகியின் எட்டாவது குழந்தை எனக் கருதிக் கொல்ல முயன்று தோல்வியுற்று மாயா சக்தி மூலம் கம்சன் உண்மை உணர்வது வரையுள்ள கிருஷ்ணாவதாரக் கதையை நாரதர் சொல்கிறார். பக்தர்களும் ரிஷிகளும் சமாதானம் அடைந்து திரும்புகின்றனர். மேலும் பத்து வருஷங்கள் ஓடி மறைகின்றன. கம்சனின் கொடுமைகள் நாளுக்கு நாள் வளருகின்றன. நாரதர் சிறைக்கு விஜயம் செய்து இடைக்காலத்தில் கோகுலத்தில் கோபாலன் வளர்ந்த விதம், கம்சன் கண்ணனைக் கொல்ல முயன்று முடியாமல் முழிக்கும் கதை அனைத்தையும் சொல்கிறார். தேவகியும் வசுதேவரும் மகிழ்கின்றனர். தன் எதிரி இருக்கும் இடம் அறிந்தும் அவனை ஒழிக்க முடியவில்லையே என்பதால் நிம்மதியின்றி வாழ்கிறான் கம்சன். கடைசியாக, தன் சகா சாணூரன் யுக்தியால் போலிப் பக்தி வேடம் பூண்டு அக்ரூரர் மூலம் கிருஷ்ணனை மதுரைக்கு அழைக்க வழிசெய்கிறான். மாயக் கண்ணன்—உண்மையை உணர்ந்து—அசுரனை அழிக்க மதுரை வந்து கம்சவதத்தைச் செய்து முடிக்கிறான்.

நல்ல டெக்னிக்

ஆரம்பம் முதல் முடிவுவரை கோர்வையாகக் கதையை நடத்திச் செல்லாமல், நாரதர் பாட, நிகழ்ந்த சம்பவங்கள் கேட்பவர்முன் தோன்றுவதாகச் சித்திரித்திருப்பது சினிமா உத்திகளை

வெற்றிகரமாகக் கையாளவும், நிகழ்ச்சிகளைத் துரித கதியிலே காட்டவும் பெரிதும் உதவி யிருக்கிறது. கடலில் விழப்போன பக்தர்களுக்கு ஆறுதல் கூற நாரதர் 'குபீ'ரென முளைக்கும் தாமரைப் பூவில் தோன்றுகிருர். கிருஷ்ணுவதாரம் பற்றி ராகமாலிகை பாடுகிருர். கேட்டுநிற்போர் முன் சம்பவங்கள் தோன்றுகின்றன. ஒரே காட்சியில் பாடும் நாரதர், பார்த்து நிற்போர் மாறுபடும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் இணைப்புக் காட்சி யாகத் திறம்படப் படமாக்கி யிருக்கின்றனர். ஆழ் கடலின் குடலுள் அலைமோதும் மச்சங்களுக் கிடையே அரவணையில் அறிதுயில் பயிலும் பரந்தாமனின் கோலம், தேவர்கள் ஓலம் கேட்டு சேஷ சயனத்தோடு பாற்கடல் பரப்பிற்கு அவன் வரும் காட்சி எல்லாம் நன்ருகவுள்ளன. சிறையில் வாடும் வசுதேவர், தேவகிக்கு ஆறுதல் சொல்ல நாரதர் சிறைக்கு வருவதாகவும், காவற்காரர் அனுமதி மறுப்பதாகவும் கதையை ஜோடித்திருப்பது அந்தக் கட்டத்தில் நாரதர் வேலைக்காரியாக உருமாற ஒரு சந்தர்ப்பத்தையும்,ஹாஸ்யம் புகுத்த வசதியையும் அளித்திருக்கிறது. கதைப்போக்கில் இத்தகைய மாறுதல்கள் நவீன உத்திகளைக் கையாள வகை செய்திருப்பதுடன் நாடகப் பாங்கு உயரவும் உதவியிருக்கின்றன.

நடிப்பு

இப்படத்தில் முதன் முதலாக ரஸிகர் மனங் கவர்வது குழந்தைகள் நடிப்புத்தான். வஞ்சகி பூதனை குறுநடை பயிலும் பாலகோபாலனை எடுத்து ஏகாந்தமான இடத்திற்குப் போய்ப் பாலூட்டி; கொல்லச் சூழ்ச்சி செய்கிருள். இந்த இடத்தில் பாலகிருஷ்ணனுக நடிக்கும் குழந்தை காட்டும் உணர்ச்சிகளும், முகபாவங்களும் பிரமாதம். பாலகிருஷ்ணனுக நடிக்கும் குழந்தைகள், சிறுவன் அனைவருமே நன்கு நடிக்கின்றனர்.

ஆர்ப்பாட்ட கம்சனுக ஆர். பாலசுப்ரமண்யம் காட்சி யளிக்கிருர். பேச்சும், நடிபபும் மிடுக்காகவே உள்ளன.

நரசிம்ம பாரதி மகாவிஷ்ணுவாகவும் ராதா கிருஷ்ணனுகவும் தோன்றுகிருர். ராதாகிருஷ்ணனுக நடிக்கும் கட்டம் குறிப்பிடத்தக்கது.

சாணுரனுகத் தோன்றும் நடராஜனும், ராதையின் தந்தையாக நடிக்கும் முஸ்தாபாவும், அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கொஞ்ச சந்தர்ப்பத்தையும் நன்கு பயன்படுத்தி, ரஸிகர் மனத்தில் நிலைத்து நிற்கும் வகையில் நடித்திருக்கிருர்கள்.

என். ஸி. வசந்தகோகிலம் நாரதர் வேடம் ஏற்று நடிக்கிருர். நாரதர் பேச்சிலும், தோற்றத்திலும் பெண்மைத் தோற்றம் மிகக் காட்சி யளிக்கிருர் என்ற ஒரு குறை தவிர மற்றப்படி வசந்த கோகிலத்தின் நடிப்பும், பாட்டும் பாராட்டத் தகுந்தனவே.

பிரேமாவதி ராதையாக நடிக்கிருர். இந்த வேடத்திற்கு இவர் வயது முதிர்ந்தவராக இருந்தும் மேக்-அப் மூலமும், நடிப்பு மூலமும் அக் குறையைச் சமாளித்துக் கொள்கிருர்.

வேலைக்காரியாக வரும் எம். எஸ். பாக்கியம், பூதனையாகத் தோன்றும் லக்ஷ்மிகாந்தம், கோகுலத்து மடந்தையாக நடிக்கும் அங்கமுத்து ஆகியோர் நடிப்பும் குறிபபிடத் தக்கது.

பாடல்கள், வசனம்

பாடல்கள் அநேகமாகப் பழைய மெட்டுகளிலேயே ஒலிக்கின்றன. சாகித்யங்கள் இனிமையான லகுவான தமிழில் அமைநதிருக்கின்றன. வசந்த கோகிலம் பாடும் பாட்டுகள் அத்தனையும் செவிக்கு விருந்தாய் அமைந்துள்ளன. 'ஆயர் மனையிலே மாயன் வளர்ந்து' என்ற பாடல் விசேஷக் கவர்ச்சியுள்ளதாய் விளங்குகிறது.

ராதாகிருஷ்ணன் பாடுவதாக ஒலிக்கும் 'ராதே நீ என்னைவிட்டுப் போகாதேடி' என்ற பாடல் பாகவதர் பாடிப் புகழ் பெற்றுள்ள 'ராதே உனக்குக் கோபம் ஆகாதடி' என்ற பாடல் மெட்டில் அமைந்தது. பாடுகிறவர் இனிமையாகப் பாடி யிருக்கிருர்.

பாக்கியம் பாடும் 'பணக்காரர் பகட்டெல்லாம்' என்ற பாடலும் ரஸிக ரஞ்சகமானதுதான்.

வசனம் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப, புராணச் சுவையின் இயல்புக்குத் தக்கபடி எழுதப்பட்டிருக்கிறது.

நடனங்கள்

லலிதா-பத்மினி கோபிகா நடனம் நல்ல முறையில் அமைந்திருக்கிறது. ராதையின நடனமுற பரவாயில்லை.

டைரக்ஷன்

இப்படத்தை டைரக்ட் செய்திருப்பவர் சுந்தர ராவ் நட்கர்னி. பதருத காரியம் சிதருது என்ற பண்புடையவர் இவர். சாவதானமாகத் தயாரித்த படத்தைப் பொதுஜன ஆதரவைப் பெறும் வகையில் தயாரித்திருக்கிருர். *

முடிவு தேதி 12-3-1950

மூன்று கூபன்களுக்குக் கட்டணம் ரூ. 1.

தனிக் கூபனுக்கு அணா 8.

இதன்படி ஒரே கூபன் அனுப்புகிறவர்கள் எட்டணா அனுப்ப வேண்டும். இரண்டு கூபன்களுக்கும் மூன்று கூபன்களுக்கும் ரூ. 1—0—0; நான்கு கூபன்களுக்கு ரூ. 1—8—0; ஐந்து கூபன்களுக்கும் ஆறு கூபன்களுக்கும் ரூ. 2—0—0; ஏழு கூபன்களுக்கு ரூ. 2—8—0. இவ்விதமாகக் கணக்கிட்டு அனுப்புதல் வேண்டும்.

விடை கண்டு பிடிக்கும் விதம்:

முதற் குறிப்பு: இடமிருந்து வலம்—1. நான்கு எழுத்துக்கள் கொண்ட.................. 'கம்பன்' என்னும் பதம் குறிப்பிற் கேற்ப அமைந்துள்ளது. இதேபோல் மற்ற வார்த்தைகளையும் கண்டுபிடித்து எழுதி அனுப்ப வேண்டும்.

போட்டி நிபந்தனைகள்

1. ஆசிரியரின் 'ஸீல்' இட்ட சரியான விடை சென்னை இண்டோ கமர்ஷியல் பாங்கியில் டெபாஸிட் செய்யப்பட் டிருக்கிறது.

2. ஆசிரியரின் எழுத்துக் கெழுத்து சரியான விடை அனுப்புகிறவர்களுக்கு முதற் பரிசும், ஒரு தவறுள்ள விடை அனுப்புகிறவர்களுக்கு இரண்டாவது பரிசும் அளிக்கப்படும்.

3. ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளும் பெறலாம். யாருமே சரியான விடை அனுப்பாவிட்டால், ஒரு தவறுள்ள விடைக்கு முதற் பரிசும் இரண்டு தவறுகளுள்ள விடைக்கு இரண்டாவது பரிசும் அளிக்கப்படும்.

4. ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் வந்தால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

(80-ம் பக்கம் பார்க்க)

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—2

பெயர்

விலாசம்

ஜில்லா

ம. ஆ. ரசீது நெ. தேதி கூபன் நெ.

மணியார்டர் ரசீதின்றி வரும் கூபன்கள் கவனிக்கப்படமாட்டா

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—2



பெயர்

விலாசம்

ஜில்லா

ம. ஆ. ரசீது நெ. தேதி கூபன் நெ.

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—2—குறிப்புகள்

இடமிருந்து வலம்

1. இவன் கவிநயத்திற்கு ஈடு இணையே கிடையாது.

3. மரத்தின் இது அடுப் பெரிக்க உதவும்.

5. எந்தக் காரியத்தையும் இதற்குக் கட்டுப்பட்டுச் செய்வது உசிதம்.

7. இதிலே குறுக்கிலும் நெடுக்கிலும் நடமாட்டம் இருந்து கொண்டிருக்கும்.

8. கொலை.

10. இது காரணமாய் அவதிக் குள்ளான வர்கள் எத்தனையோ பேர்கள்.

11. அயல் நாடுகளுக்கு முன்னாட்களிலே இதன் மூலம்தான் பிரயாணம் செய்ய வேண்டி யிருந்தது.

12. புண்ணிய நதிகளுள் ஒன்று.

14. சந்திரன்.

16. ரேஷன் அரிசியிலே நிறைய இது அகப்படுகிறது.

17. திருநீறு

19. இது பிறந்தவுடனே சிப்பந்தி களுக்குச் சம்பளம் கொடுக்க மனமில்லாத முதலாளிகளும இருக்கிறார்கள்.

20. ....என்ற பின் அவனை சாதாரணமாய் எல்லோருடனும் ஒப்பிடலாமா?

21. கல்யாண காலங்களிலே இதன் விலை சற்று அதிகமாவது சகஜம்.

22. தம்மைப்பற்றி இதாகப் பேசிக் கொள்வது சிலரது சுபாவம்.

மேலிருந்துகீழ்

1. நல்ல.........என்றால் சாதாரணமாய் எல்லோருமே ஆதரிப்பார்கள் என்று சொல்லலாம்.

2. நன்றாய் முற்றி வளர்ந்த பின்னர் இந்த மரத்தை வெட்டிப் பல வேலைகளுக்கு உபயோகிக்கிறார்கள்.

3. கீழே விழுந்தால் உடைந்து விடும்.

4. லாபம்.

6. கீழே மூலகங்களுள் ஒன்று.

8. வெப்பம் அதிகமாயுள்ள காலத்தில் நல்ல இதிலிருந்தால் சௌகரியமாயிருக்கும்.

9. இல்லாள்.

10. கொடியதொரு வியாதி இது.

13. இதைக் கண்டு மயங்கி விடக் கூடாது.

15. சபையில் பேசுகையில் இது கூடாது.

16. சோதிடன்.

18. நல்ல தேகக் கட்டுடன் இது வாய்ந்தவன் போலீசு வேலைக்குத் தகுதிதான்.

19. தாயுடன் பிறந்தவன்.

* * *

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—2



பெயர்

விலாசம்

ஜில்லா

ம. ஆ. ரசீது நெ. தேதி கூபன் நெ.

மணியார்டர் ரசீதின்றி வரும் கூபன்கள் கவனிக்கப்படமாட்டா

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி - 2



பெயர்

விலாசம்

ஜில்லா

ம. ஆ. ரசீது நெ. தேதி கூபன் நெ.

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—1 குறிப்புகள்

இடமிருந்து வலம்

1. ஒரு காரியத்தைச் செய்ய முற்படுமுன் இவனை வணங்குவது வழக்கம்.

3. தமக்கு ஏதாவது இது இல்லாமல் ஒரு காரியத்தில் ஈடுபட்டு முனைந்து வேலைசெய்ய முன்வர மாட்டார்கள் சிலர்.

5. ....க்கு வரவர முக்கியத்துவம் குறைந்து வருகிறது.

6 ஸ்ரீராமன் மகனிவன்.

7. ....இல்லாமல் பெரிய விஷயங்களில் ஈடுபடுதல் உசிதமல்ல.

9. இந்த மாட்டை வண்டியில் பூட்டி ஓட்டினால், வழியில் சண்டி செய்து படுத்துக்கொள்ளுமே!

12. முகவுரை என்று பொருள்படும்.

13. கட்டுரை.

15. ஒரு பொறுப்பான உத்தியோகத்திலுள்ளவர்கள் இது பெறுமல் தமது சொந்த வேலையாய் வெளியூருக்குச் செல்லலாகாது.

16. இதன் வளர்ச்சிக்கு 'பார்வதி' தொண்டு செய்ய முற்பட்டுள்ளது.

17. ....வை அவமதித்துப் பேசும் பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

19. ஆசான்.

20. ....பணம் படைத்தவர்கள்தான் சினிமாப் படம் எடுக்கத் துணிகிறார்கள்.

21. பெரிய தொழிற்சாலைகளின் நிர்வாகிகள், வாசலில் திறமையான காவலாட்களைப் போட்டு இதுகூடத் திருட்டுப் போகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதாக உத்தரவு போட்டு விடுகிறார்கள்.

23. ....தெரிந்து பேசி காரியத்தைச் சாதித்துக்கொள்வது சிலருக்குத்தான் தெரியும்.

24. இது வந்து விட்டால் அவஸ்தைதான்!

மேலிருந்துகீழ்

1. ஒவ்வொரு தாலூகா ஆபீசிலும் ஒரு இது இருக்கும்.

2. மனதிலே இது இருந்தால் முகம் சற்று வாட்டமாகத்தா னிருக்கும்.

4. சந்நியாசி.

7. நிறைய இது இருந்தாலும் செலவு செய்யவே மனம் வருவதில்லை சிலருக்கு.

8. இதிலே விளையும் காய்கறிகள் நல்ல ருசியுட னிருக்கும்.

10. ....வீடுகளில் ஏழைகள் வசிப்பதற்கில்லை.

11. இதிலிருந்துகொண்டு கீழே எட்டிப் பார்த்தால் பயமாகவே இருக்கும்.

13. ஒரு சாமான் மனதுக்குப் பிடித்ததாயிருந்தால், என்ன இதுவாயிருந்தாலும் கொடுத்து வாங்கிவிடத் தோன்றுவது இயற்கைதான்.

14. பார்வதி.

16. இது இல்லாமல் பொங்கல் பண்டிகை நடக்குமா?

18. இது மிகவும் அதிகமானால் தாங்க முடியாது.

19. ....என்று தெரிந்தும் ஒரு பெண்ணை மணக்க யாராவது முன் வருவார்களா?

21. சிலர் எங்குக் கிளம்புவதானாலும் இது இல்லாமல் செல்வதில்லை.

22. சாப்பாட்டிலே இதை நிறையச் சேர்த்துக் கொள்கிறார்கள் சிலர்.

ஞாபகமிருக்கட்டும்!

'பகுத்தறிவு'ப் போட்டி—1

முடிவு தேதி 19—2—50

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—1

பெயர்

விலாசம்

ஜில்லா

ம. ஆ. ரசீது நெ.   தேதி   கூபன் நெ.

இங்கே கத்தரிக்கவும்

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—1

பெயர்

விலாசம்

ஜில்லா

ம. ஆ. ரசீது நெ.   தேதி   கூபன் நெ.

(73-ம் பக்கத் தொடர்ச்சி)

5. விடைகள் 'பார்வதி'யில் வெளியாகும் அச்சிட்ட கூபன்களில்தான் எழுதியனுப்பப் படல் வேண்டும். கூபன்கள் மையினுல் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். தனிக் காகிதங்களில் எழுதப்படும் விடைகளும், அடித்தல் திருத்தல் உள்ள கூபன்களும் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டா.

6. கூபன்களில் ஒன்று அல்லது பல கட்டங்கள் பூர்த்திசெய்யாமல் விடப்பட்டிருந்தால், அந்தக் கூபன்களைப் போட்டிக்கு அங்கீகரிக்க இயலாது.

7. பிரவேசக் கட்டணம் தனிக் கூபனுக்கு அணு 8 வீதமும், மூன்று கூபன்களுக்கு ரூ. 1 வீதமும் அதற்கு மேற்பட்ட கூபன்களுக்கு மேற்சொன்னவாறும் கணக்கிட்டு அனுப்புதல் வேண்டும். பிரவேசக் கட்டணத் தொகை மணியார்டர் மூலமாகவோ அல்லது சென்னையில் கிளையுள்ள தொரு பாங்கியின் கிராஸ் செய்த டிராப்ட் மூலமாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

8. மணியார்டர் ரசிதின்றி வரும் கூபன்கள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டா.

9. போட்டிக்காக அனுப்பப் பெறும் தொகைகள் வேறு கணக்குக்கு ஈடுசெய்து கொள்ளப்படமாட்டா. எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தத் தொகை திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

10. போட்டி சம்பந்தமாக எந்த விதமான கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

11. போட்டி விடைகள் 'பார்வதி' காரியாலயத்தில் முடிவு தேதியன்று மாலை 6 மணிக்குள் கிடைக்கும்படியாக, போட்டி ஆசிரியர், "பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—1, 2/11, மவுண்ட்ரோடு, சென்னை—2 என்ற விலாசத்துக்கு முன் கூட்டியே அனுப்பப் படல் வேண்டும். முடிவு தேதிக்குப் பிறகு வந்து சேரும் கூபன்கள் நிராகரிக்கப்படும்.

12. ஒருவர் பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலமாக அனுப்பி யிருக்கலாம்; அதை நாம் பெற்றுக்கொண் டிருக்கலாம்; ஆயினும் அவர் அனுப்பிய கூபன்கள் எமக்கு வந்து சேராமல் இருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல.

13. தபால் மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ கூபன்கள் தவறி யிருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல.

14. போட்டி சம்பந்தமாக ஆசிரியர் தீர்ப்பே முடிவானதென்றும் சட்டப்படிக் கட்டுப்படுத்துவதென்றும் ஒப்புக் கொண்டே இந்தப் போட்டியில் ஈடுபடுதல் வேண்டும்.

15. இப் போட்டியில் உபயோகிக்கப் பட்டுள்ள வார்த்தைகள் 'ஆனந்த விகடன்' அகராதியில் உள்ளன.

16. 'பார்வதி' காரியாலயத்தாரும் அதனோடு சம்பந்தப்பட்டுள்ள மற்றக் காரியாலயங்களிலுள்ளவர்களும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ள அநுமதிக்கப்பட மாட்டார்கள்.

17. போட்டிக் குரிய பிரவேசக் கட்டணமும், கூபன்களும் கீழ்க் கண்ட விலாசத்துக்கு அனுப்பப்பெற வேண்டும்.

To

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி-1
2/11, மவுண்ட் ரோடு,
சென்னை—2.

இந்தப் போட்டியின் சரியான விடை மார்ச்சு மீ 1௳ வெளியாகும் 'பார்வதி' இதழில் பரிசு பெற்றவர்களின் பூரண ஜாபிதாவுடன் வெளியிடப்படும்.

சிலோனிலுள்ள போட்டி நேயர்கள் பிரவேசக் கட்டணத்துக் குரிய தொகைக்கு சிலோன் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கி, அவைகளில் ஒன்றும் எழுதாமல் கூபன்களுடன் எமக்கு அனுப்பி வைக்கலாம்; அல்லது 136, செட்டியார் தெரு, கொழும்பு என்ற விலாசத்திலுள்ள எமது சிலோன் பிரதிநிதிகளான நவலட்சுமி புத்தக சாலையாரிடம் கொடுத்து ரசீது பெறலாம்.

சென்னையிலுள்ள போட்டி நேயர்களின் சௌகரியத்தை உத்தேசித்து, போட்டி 1-ன் முடிவு தேதியை விடுமுறை நாளாகிய 19—2—50 ஞாயிறன்று வைத்துள்ளோம். அன்று நமது காரியாலயம் காலை ஒன்பது மணி முதல் மாலை ஆறுமணி வரை திறந்திருக்கும். கூபன்களையும் பிரவேசக் கட்டணத்தையும் காரியாலயத்தில் செலுத்தி ரசீது பெறலாம்.

தமிழ் நாடெங்கும் வெற்றிகரமாக நடைபெறுகிறது



மாடர்ன் தியேட்டர்ஸின்

பொன்முடி

இனிய தமிழ் நாட்டின் இயல்புடன் கூடிய
களங்கமற்ற காதல் சித்திரம்

கதை	டைரக்ஷன்
பாரதிதாசன்	எல்லிஸ் R. டங்கன்

தமிழ் நாடெங்கும்
வெற்றிகரமாக நடைபெறுகிறது

முருகன் டாக்கீஸாரின்

ரத்னகுமார்

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு

மதராஸ்
பிரபாத் & சித்ராவில்
பிப்ரவரி ரிலீஸ்

MTF

முருகன் டாக்கி பிலிம் கம்பெனி மதுரை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ... 1950 MADRAS

Edited and Published by V. Namasivayam at Bharat Studio, Mount Road, Madras and Printed by P. Radhakrishna Chettiar, at The Royal Printing Works, 11-A, Mount Road, Madras-2. *Associate Editor:* Vai Subramanyan.